மூன்றாவது வெளியீடு.

அன்பளிப்பு
சென்னை-20.

# "ராஜா பர்த்ருஹரி"

நாடகம்.

கதை — வசனம்

திரு. T. K. முத்துசாமி.

பாடல்கள்

திரு. மதுர பாஸ்கர்தாஸ் அவர்கள்.

வெளியிடுவோர்

T. K. S. சகோதரர்கள்,

M. S. B. S. சபா.

1942.

— உரிமைபெற்றது. —

எமது
மகத்தான
அடுத்த
வெளியீடு



# ஔவையார்

# "முன்னுரை."

அன்பர்களே, இப் "பர்த்ருஹரி" நாடகமானது "விக்ரமாதித்தன்" கதையின் முற்பகுதியிலுள்ள ஓர் சிறு குறிப்பை ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளது. நாடகத்தைக் கண்ணுறும் மக்கள் சலிப்பின்றிப் பார்த்து மகிழவும், கருத்தை எளிதில் புரிந்துகொள்ளவும் வேண்டி, நாடக முறைப்படி அனேக மாற்றங்கள் செய்து, காட்சிகளை வகுத்துள்ளோம்.

சென்ற இரண்டாண்டுகளாக இந்நாடகம் எம்மால் நடிக்கப்பட்டு வருகிறது. இதனைக்கண்ணுற்ற அன்பர்கள் பலர் 'குமாஸ்தாவின் பெண்' "சிவலீலா" முதலிய நாடகங்களை வெளியிட்டதுபோல் இதனையும் புத்தகவடிவில் வெளியிடவேண்டுமென விரும்பியதால், அதற்கிணங்க இந்நாடக நூலை வெளியிட்டுள்ளோம். இது நடிப்பதற்காகவே எழுதப்பட்ட நாடகமாதலின் புத்தகத்திற்கென எவ்வித திருத்தமும் செய்யப்படவில்லை.

இந்நாடக நூலை அச்சியற்றுவதில் மிகவும் சிரமமெடுத்துக்கொண்ட கரூர் சந்திரா பிரஸ் புரோப்ரைட்டர், S. பராங்குசம் நாயுடு அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

இதிலுள்ள குற்றங் குறைகளை அறிஞர்கள் பொறுப்பாராக.

T. K. S. சகோதரர்கள்,

M. S. B. S. சபா.

முகாம்—கரூர், 12–11–42.

## நாடக பாத்திரங்கள்.


| | |
|---|---|
| பர்த்ருஹரி | உஜ்ஜயினி மன்னன். |
| விக்ரமன் | பர்த்ருஹரியின் சகோதரன். |
| அஸ்வபாலன் | குதிரைகளைப் பாதுகாப்போன். |
| மொட்டை | அஸ்வபாலனின் கையாள். |
| குள்ளன் | நளினியின் வேலையாள். |
| தாத்தா, முருகன் | அரண்மனை வேலையாட்கள். |
| பரமானந்தன் | ராஜகுருவின் சீடன். |
| மோகனு | பர்த்ருஹரியின் இளையராணி. |
| சபலா | மோகனுவின் தோழி. |
| நளினி | ஓர் நடனமாது. |
| இளனி | நளினியின் தங்கை. |

ராஜகுரு, மந்திரிகள், காவலர்கள், குடிகள்,
இசைக்கருவியாளர்கள் முதலியோர்.

கதை நிகழுமிடம்—[உஜ்ஜயினியிலும், அதைச்சார்ந்த கானகத்திலும்.]

---

[இந்நாடகம் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பதால், இந்நாடகத்தின் கதையமைப்பையோ, வசனங்களையோ, பாடல்களையோ, எவரும் கையாளக்கூடாதென்பதை அறிவித்துக்கொள்கின்றோம்.]



# "ராஜா பர்த்ருஹரி"

## (நாடகம்)

THE MADURA TAMIL SA

### களம் 1. காட்சி 1.

**இடம்:— உஜ்ஜயினி ராஜவீதி.**

**காலம்:— காலை.**

**பாத்:**—[*ராஜகுரு, பரமானந்தன், நகரவாசிகள்*]

(குறிப்பு) [*நகர மக்கள் கூட்டங் கூட்டமாகச் சென்றுகொண்டிருக்கின்றனர். ராஜகுரு மாணாக்கன் பரமானந்தனுடன் ஓர் புறமாக வருகிறார். பரமானந்தன் நகரக் காட்சிகளைக் கண்டு களிப்புற்று நிற்கிறான்.*]

**பரமா:**— *குரு மஹாராஜ், நகர வாழ்க்கையே ஒரு தனி இன்பமாய்த்தானிருக்கிறது. ஜனங்களெல்லாம் தேனீக்கள்போல் கூட்டங்கூட்டமாக வாழ்க்கை நடத்துவது எவ்வளவு அற்புதமான காட்சியாக இருக்கின்றது பார்த்தீர்களா? ஆஹா, எனக்கிதைக்காண்பதே பரம சந்தோஷத்தைக் கொடுக்கின்றது.*

**சிஷ்யன்.**

*பல்லவி.*

*ஆனந்தமான தென்பேன்—குருவே*
*அரிய நகர வாழ்வே—ஜீவர்க்கே* (ஆன)

அநுபல்லவி.

கானகமுற்ற துறவே பெரிதென்று
கருதுவதினிவீண் காணும் சுகமிங்கே (ஆன)

சரணம்.

ஆதிசிவனை மாலயனைச் சண்முகனை
அனு தினம் மானிடர் கண்டிட விண்டிட
நீதியின் திறமையை தவநிலைப் பெருமையை
நெறியிற் பலர்க்குரைத்தே நாமுய்திடவே (ஆன)

—சுவாமி, சில நாட்களாவது இங்கு தங்கி இம்மனோ ஹரமான காட்சிகளைக் கண்டு செல்லவேண்டுமென்று என் மனம் தூண்டுகிறது.

குரு:— (குறுநகையுடன்) பரமானந்தா, மனித ஹிருதயத்துக்குச் சபல குணமதிகம். உலகத்தில் ஒன்றைவிட மற்றொன்று இன்பமாகத்தான் தோன்றும் உள்ளூரப் பார்த்தால் வாழ்க்கை முழுதும் ஆலம்பழம் போன்றது. ஒரே புழுமயம். ஆனால், மனித ஜீவன் இதையெண்ணுவதில்லை. உன் மனம் இன்னும் பக்குவநிலையடையாதபடியால், நிலையற்ற இவ்வின்பங்களைக் கண்டு மயங்குகின்றது.

**பரமா:**—சுவாமி, தாங்கள் சொல்வதெல்லாம் சரிதான். ஆயினும், இயற்கையாய் எழும் இந்த சந்தோஷம், துக்கம், கோபம், தாபம், இவைகளைக் கட்டுப் படுத்த முடியவில்லையே — இது மனிதனால் சாத்தியமில்லையென்றே நினைக்கிறேன்.

குரு:—சிஷ்யா, அதுதான் தவறு. மனிதன் எஜமான் போன்றவன். மற்ற குணங்கள் அவனது வேலையாட்கள் - வேலையாட்களை அடக்கிவைத்து தனக்குக் கீழ்ப்படியுமாறு செய்வது எஜமானன் கையிலிருக்கிறது. வேலையாட்கள் எஜமானுக்கு மிஞ்சியவர்களாயிருந்தால் கள்வர்கள் பலர் உள்ளே நுழைந்துவிடுவார்கள். ஆகவே, எஜமான் தன் வேலையாட்களுக்கு அடிமையாகிவிடக்கூடாது. உதாரணமாக, ஒரு மனிதனுக்குக் கோபம் உண்டாகுமானால், அவன் அதற்கு அடிமையாகிவிட்டதாக அர்த்தம். பற்றற்ற ஞானியர்க்கு ஒரு குணமுமிருக்கமுடியாது. ஐம்பொறிகளையும் அடக்கியவனே தன்னையடக்கியவனாகின்றான். அவனடையும் இன்பமே அழிவற்ற இன்பம்.

பரமா:—சுவாமி, அப்படியானால் ஒரு சந்தேகம்.

குரு:—அதுவே உனது அறிவின் வளர்ச்சிக்கறிகுறி. கேள் - என்ன சந்தேகம்?

பரமா:— மகா ஞானிகளென்று சொல்லப்படும் விஸ்வாமித்திரர், துருவாசர், இவர்களெல்லாம் மகா கோபக்காரர்களாச்சே. அவர்களை ஞானிகளென்பது எப்படி?

குரு:—சிஷ்யா, நீ மிகுந்த புத்திசாலி, உனக்கேற்பட்ட இச்சந்தேகத்தை தெளிவுபடுத்தவேண்டியது அவசியமே. விஸ்வாமித்திரர், துருவாசர், முதலிய துறவிகள் மகா ஞானிகளென்பதிலையமில்லை. ஆனால்,

அவர்களுக்கு அவ்வப்போது ஏற்பட்ட கோபத்தினல் அவர்கள் வருந்திச் செய்த தபோ சக்தி எவ்வளவு அழிவுற்றதென்பது தெரியுமா? ——. சரி — நாழிகை யாகிவிட்டது — சீக்கிரம் அரசனைக்காணவேண்டும். விரைந்துவா.

(இருவரும் செல்கின்றனர்)

காட்சி முடிவு.

## களம் 1. காட்சி 2.

**இடம்:**— அந்தப்புரம்.

**காலம்:**— காலை.

**பாத்:**— [பர்த்ருஹரி, மோகன, சபலா, தோழி யர், நளினி, நடன கோஷ்டியார்]

**(குறிப்பு)** [பர்த்ருஹரி மோகனவுடன் உல்லாச மாய் மஞ்சத்தில் வீற்றிருக்க, நாட்டியம் நடைபெறுகிறது — நாட்டியம் முடிந்ததும் "நளினி" தனது கோஷ்டியாருடன் வணங் கிச் செல்லுகிறள்]

**மோக:**—ஆஹா! என்ன அழகாக இசையுடன் இசைந்தாடினள் பார்த்தீர்களா நாதா! சங்கீதத்தில் இருக்கும் இன்பம் வேறெதிலுமே இல்லை.

**பர்த்:**— உனது மதுரமான சொற்களை விடவா? இல்லை-இல்லை-எனது செவிகளுக்கு உனது தீங்குர

லோசை இதனினும் மேலான இன்பமளிக்கிறது. மோகனு, எங்கே... பாடு— நேற்றுமாலை பாடினுயே— அந்தப்பாட்டு ...

மோகனு.

பல்லவி.

நாயகர் பட்சமடி எனக்கது
ஆயிரம் லட்சமடி —

அநுபல்லவி.

நீயறிவாயோ அவர் குணம் மானே
நாயறியுமோ ஓர் சுந்தரப்பானே (நாயகர்)

சரணம்,

ஏழையானலும் எனக் கெஜமானே
என்றுமடிமை யவருக்கு நானே
கூழையுண்டாலுமெனக்கது தேனே
கொண்டாரிருக்கக் குறை யென்னதானே (நாயகர்)

பத்தாவின் பட்சமுள்ளாள் மகராசி
பத்தாவின் பட்சமில்லாள் பரதேசி
வித்தாரமாகத் திரவிய ராசி
மேன் மேலிருந்தும் பயனென்ன சீசீ (நாயகர்)

(வேதநாயகம் பிள்ளை)

**பர்த்:**—(மோகனுவைத்தழுவிய வண்ணம் அவள் முகத்திலரும்பும் வியர்வையைத் துடைத்து) அடடா! குழலினிது யாழினிது என்கின்றனர் அறிவிலிகள். உனது இனிய குரலோசையைக் கேட்டிருந்தாலன்றோ

தெரியும். ஐம்புலன்களையும் தன்வயப்படுத்தும் அமுத ஊற்று இங்கிருப்பதையறிந்தவர் யார்?

**மோக:**—போதும், போதும், திருஷ்டி விழுந்து விடப்போகிறது. ராஜ திருஷ்டி பொல்லாத தென் பார்கள்.

**பர்த்:**—(நகைத்து) மோகனு, அன்பின் மிகுதி யினுல் மனமொத்துக் கூடிக்களித்து இன்பமனுபவிக் கும் தாம்பத்ய வாழ்க்கைக்கு இணையே இல்லை யல்லவா? "சுவர்க்கம்" என்று ஓரிடம் இருப்பதாக வும், மாணத்திற்குப்பின் மனிதன் அங்கு சுகசல்லாப மாயிருப்பதாகவும், பெரியோர்கள் கூறுகின்றனர். என்னைப் பொறுத்தவரையில் உன்னைவிட இன்பமளிக் கும் ஓர் சுவர்க்கம் இருப்பதாக நினைக்கவேயில்லை.

**மோக:**— ஆரம்பித்து விட்டீர்களா பரிகாசம் செய்ய? இந்த ரகசியத்தை வெளியே சொல்லிவிடா தீர்கள். அப்புறம் சுவர்க்கத்தைத் தேடி எல்லோரும் நமது அந்தப்புரத்திற்கு வந்துவிடப் போகிருர்கள். இந்த சுவர்க்கத்தில் உங்களுக்குமட்டுந்தான் இட முண்டு.

**பர்த்:**—பரிகாசமல்ல கண்ணே – உண்மையாகத் தான் சொல்லுகிறேன். காதலின்பத்தை அறியாத கசடர்களல்லவா மாணத்திற்குப்பின் சுகத்தை விரும் பிக் காலங்கழிப்பவர்கள்.— "செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம் சேர்ந்திடலாமென்றே எண்ணியிருப்பார்–

பித்த மனிதரவர் சொலும் சாத்திரம் பேயுரையா மென்றிங்கூதேடா சங்கம்” என்று நவயுகக் கவி யொருவர் கூறியிருக்கிறரே உனக்குத்தெயுமா?

மோக:— எல்லாக் கவிஞர்களும் பெண் குலத்தை மிகவும் இழிவுபடுத்தி, மண், பெண், பொன், என்ற மூவாசையையும் விட்டால்தான் சுவர்க்கம் கிடைக்கு மென்றல்லவா எழுதி வைத்திருக்கிறார்கள். தங்க ளுக்குமட்டுந்தான் பெண்ணாசை பேரின்பமளிக்கிறது போலிருக்கிறது.

பர்த்:—ஊம்...மூடர்கள், மூடர்கள். கண்கண்ட இன்பத்தை நுகர ஆண்மையற்று கனவுலகில் சஞ்சரிக் கும் பேடிகள். அவர்களைப்பற்றி நமக்கென்ன கவலை மோகனா;

“பல்லார் புகழப் பெருஞ்சிறப்பும்
பாக்யம் பலவும் படைத்தென்ன
அல்லார் நெஞ்சத்திருளகற்றி
அன்பினுருவா யதைத்திருத்தி
எல்லா நலனுமொருங்களிக்கும்
இன்பக்காதலடையாரேல்
நல்லாரல்லர் அவரெல்லாம்
நாற்காலில்லா விலங்கினமே ”

(தோழி சபலா மறைவில் வந்து நின்று)

சபலா:—மகாராணி, உள்ளே வரலாமோ?

**மோக:**— (விலகிகின்று) யாரது, சபலாவா ... என்னடி?

**சபலா:**—(முன்வந்து வணங்கி) மகாராஜா அவர்களைக்காண குருதேவர் வந்திருக்கிறாராம். அவசர காரியமாம்.

**பர்த்:** — யார் கூறியது?

**சபலா:**—மந்திரியார் வந்திருக்கிறார்.

**பர்த்:**— (வெறுப்புடன்) விக்ரமனிடம் கூறி, என்ன விஷயமென்று விசாரிக்கும்படி மந்திரியிடம் நான் சொன்னதாகச் சொல். இப்பொழுது வர சௌகரியப்படாதென்று தெரிவி.

**சபலா:**— (பயத்துடன்) இளைய மகாராஜாவும் குருதேவரோடுதான் இருக்கிறாராம்.

**பர்த்:**-(கோபத்துடன்)நான் சொன்னபடி சொல் போ. என்னை அவசியம் பார்க்கவேண்டுமென்றால் நாளைக்காலை சபா மண்டபத்திற்கு வரும்படியாகச் சொல்.

(சபலா போகிறாள்)

**பர்த்:**—இந்த சந்யாசிகளுக்கு சமய சந்தர்ப்பம் ஒன்றுமே தெரிவதில்லை எந்த சமயமாயிருந்தாலும், எந்த வேலையாயிருந்தாலும், எந்த நிலைமையிலிருந்தாலும், உடனே நான் போய் இவர்களை வரவேற்று உபசரிக்கவேண்டும்போலிருக்கிறது.

**மோக:**—(புன்முறுவலுடன் அவனை அணைத்தபடி) முற்றுந்துறந்த முனிவர்களுக்கு நாம் அடையும் இன்பம் எப்படித் தெரியும் நாதா? அவர்களைக் குறை கூறுவதிற் பயனென்ன?

**பர்த்:**—(நகைத்து) முற்றுந் துறந்தவர்களா முனிவர்கள்! ஒருக்காலுமில்லை. மரணத்திற்குப் பயப்படுகிறவன் ஞானி — சுயநலம் இருந்தால்தான் ஒருவன் ஞானியாக முடியும். இறப்பு, பிறப்பு, இவற்றின் ரகஸியத்தையறிய முயலும் திருடன்தான் ஞானி. தானே பரப்ரம்மமாக முயலுபவன் ஞானி. ஆகவே, அவனுக்கும் ஆசையிருக்கிறது — இன்ப துன்ப மிருக்கிறது. ஆனால், அவன் தனித்திருக்க விரும்புகிறான். நாம் கூடி வாழ விரும்புகிறோம். இவ்வளவே சன்யாசிக்கும் நமக்குமுள்ள வித்யாசம்—. மோகனா, உன் போன்ற பேரின்ப விக்ரஹத்தையடையப் பெற்றால் மனிதன் ஏன் துறவியாகவேண்டும்?

**மோக:**— அப்பா! எதைச் சொன்னாலும் பேசி வாயை அடக்கிவிடுகிறீர்களே.

**பர்த்:**—(தழுவிக்கொண்டு) காதலி, மோகனா — உனது சீரிய பார்வையொன்றில் இவ்வுலகத்தையே அடக்கும் சக்தியிருக்கிறதே.

(இருவரும் மஞ்சத்தில் அமருகின்றனர்)

காட்சி முடிவு.

## களம் 1. காட்சி 3.

**இடம்:**—*அரண்மனையிலோர்புறம்.*

**காலம்:**— *காலை.*

**பாத் :**— [*ராஜகுரு, பரமானந்தன், விக்ரமன், மந்திரி*]

(*குறிப்பு*) [*குருதேவரும் விக்ரமனும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பரமானந்தன் ஓர் புறம் பணிவுடன் நிற்கிறான். மந்திரி கவலை யுற்ற முகத்தினராய் வருகிறார்*]

**குரு :**— (*மந்திரியை நோக்கி*) *ஏன் இவ்வளவு நேரம்? அரசன் எங்கே?...*

**மந்:**—*சுவாமி, நாளைக்காலை சபைக்கு வரும்படி மகாராஜா கட்டளை......*

**குரு:**—(*வியப்புடன்*) *யார்! பர்த்ருஹரியா இவ் வாறு கூறினான்?*

**மந்:**—*அரசரை நான் காணவே முடியவில்லை. அரசர் கட்டளையென்று தோழி சபலா வந்துகூறினாள்.*

**குரு:**—(*அசட்டுச்சிரிப்புடன்*) *ஊம்... அரசனுக் குத்தன் கடமையைப்பற்றிச் சிந்திக்கக்கூட சமயமில் லாது போய்விட்டதா!... சதா சிற்றின்ப நுகர்ச்சி யிலேயே ஆழ்ந்திருப்பதாகவும், ராஜ்ய கார்யங்களைக்*

கவனிப்பமே தயில்லையென்றும், என் செவிக்கெட்டியது உண்மையாகப்போய்விட்டது....சரி. இருக்கட்டும்... விக்ரமா, நான் வருகிறேன்.

(போகமுயல, விக்ரமன் தடுத்து)

**விக்ர:**—குருதேவா, நாளையதினம் சபையில் மகா ராஜாவைக் காணலாம். அதுவரை தாங்கள் இவ் விடத்திலேயே எழுந்தருள வேண்டும். தங்களுக்கு வேண்டிய சௌகர்யங்களைச் செய்கிறேன்.

**குரு:** — இல்லை – இல்லை – வேண்டாம். நான் போகிறேன். இந்த நிலைமையில் நான் அரசனைக் காண்பதால் பயனொன்றும் ஏற்படப்போவதில்லை. பர்த்ருஹரி தான் குடிகளின் காவலன் என்பதை மறந்துவிட்டான். ஒளி வீசி நிற்கும் அவனது கண் களில் மாசு படர்ந்திருக்கிறது. இதனால் பல கெடுதி கள் நேரக்கூடும்.— இறைவனருளால் யாவும் இனிதே முடிவுற வேண்டுகிறேன்.

**விக்:**— (பணிவுடன்) சுவாமி, அடியேனுக்கிடும் ஆக்ஞையெதுவோ?

**குரு:**—உனது பொறுப்பு அதிகரித்துவிட்டது. குடிகளின் முறையீட்டை நீதான் நன்கு கவனிக்க வேண்டும். நான் கூறியதனைத்தும் ஞாபகமிருக்கட் டும். பர்த்ருஹரி அக்ஞான மாயையில் சிக்கி, அரச தர்மத்தை — ஏன்? மனித தர்மத்தையே மறந்திருக்

கிருன் — நான் வருகிறேன் — சமயம் வரும்போது உன்னைச் சந்திப்பேன்.—

(செல்லுகிருர். பரமானந்தன் பின்தொடருகிருன்)

**விக்:**—(தனி) ஆம் – குருதேவர் கூறியது முற்றும் உண்மையே.

**விக்ரமன்.**

விருத்தம்.

தருவழிக்கும் புழுவை நிகர் சூது பொய்மை
தான் கற்ருர் மீளுவது சாத்யமில்லை
கருவழிக்கும் பரத்தையரை நிகர்வார் மன்னர்
கண்ணான குடிகளிதம் கருதாராகில்
உருவழிக்கும் மதுபான முண்டபேர்கள்
உத்தமப்பேர் பெறுவதுமிவ்வுலகிலுண்டோ
திருவழிக்குங் காம விஷப்பாம்பின் வாயில்
சிக்கியதோர் மன்னரினித் திரும்புவாரோ.

—கள், காமம், சூது, இம்மூன்றும் அரசனுக்கேற்படும் மூன்று வியாதிகள். இவற்றில் காமநோய் நன்ருகப் பீடித்திருக்கிறது மகாராஜாவை. தனது குடிகளிடத்தும், சகல ஜீவப்பிராணிகளிடத்தும் வைத்திருக்க வேண்டிய பாந்த அன்பை, கேவலம் ஓர் பெண்ணின் மீது வைத்திருக்கின்ருர். நாமென்ன செய்யமுடியும்? விதிவழி மதி செல்லும்.

**மந்:**—யுவராஜா, நாளையதினம் தாங்கள் மட்டுமாவது வேட்டைக்குச் சென்று வரவேண்டியது அவ

சியமெனவெண்ணுகிறேன். இல்லையேல் பழிப்புக் கிடமாகும்.

**விக்:**—அப்படியே செய்வோம். சகலமும் சித்த மாகட்டும். நான் மகாராஜாவையும் எப்படியேனும் அழைத்துச்செல்ல முயல்கிறேன்.

**மந்:**— ஆக்ஞை...

(பணிந்துசெல்ல, விக்ரமன் மற்றொருபுறம்செல்கிறான்)

காட்சி முடிவு.

## களம் 1. காட்சி 4.

**இடம்:**— குதிரை லாயம்.
**காலம்:**— காலை.

**பாத்:**—[அஸ்வபாலன், மொட்டை, விக்ரமன்]

(குறிப்பு) [அஸ்வபாலன் உல்லாசமாய்ப் பாடிக் கொண்டு நிற்கிறான். மொட்டை அவனைப் பார்த்துக் கண் சிமிட்டியபடி]

**மொட்:**—என்னண்ணே, இண்ணைக்கி ஒம்பாடு குஷிதான் போலிருக்கு. மகாராசா வேட்டைக்குப் போவப்போறாரு... நீயும்... வேட்டைக்குக் கௌம்பிடுவே... நம்ப பாடுதான்......

**அஸ்:**—டே மொட்டை, நான் அவ வீட்டுக்குப் போயி எத்தனை நாளாச்சு தெரியுமாடா?—. ஒரு

நாளாவது சமயம் கெடைக்கலெயே. இண்ணெக்கித் தானே ஆண்டவன் புண்ணியத்திலே ராஜா கெடைச்சிருக்கு. இதுகூட ஒனக்குப் பொறுக்கலெயா?—.

**மொட்:**—ஏண்ணே, அந்தத் தேவடியாதான் ஒன்னெக்கண்டாலே எரிஞ்சி உளுவுறாளே, நீ என்னாத்துக் கண்ணெ அங்கேயே போயி காத்துக்கட்டிக்கினு கெடக்கிறே? ஆம்பிளெண்ணு கொஞ்சமாவது ரோஸம் வாணாமாண்ணே?

**அஸ்:**—போடா, ஒனக்கென்னடா தெரியும்... அவளுக்கு எம்மேலே உசிருடா. தேவடியான்னு இன்னொருதரம் சொல்லாதே தெரியுமா?...

**மொட்:**—ஆமாமா, மகா பத்தினிதான்—. அன்னெக்கொருநாளு ஒனக்கோசரம் நான் அவ வீட்டுக்குப் போயி பட்டபாடு போரும்ணு போச்சு தெரியுமா?—. ஆமா, அவ என்னாண்ணே ஒன்னெ இப்பிடித்திட்றா?—.

**அஸ்:**—டே... அது திட்டுண்ணு நெனெச்சே?

**மொட்:**—இல்லெ... அருச்சனெ....

**அஸ்:**—டே, அதெல்லாம் அன்பினாலே திட்டுற திட்டுடா. ஊடல் ஊடலிண்ணு சொல்றாங்களே ஒனக்குத் தெரியுமா?

**மொட்:**—எனக்கு ஊடலும் தெரியாது, ஊதலுந் தெரியாது.

அஸ்:—ஊம்... முழுமுட்டாள். ஒன்க்கெங்கே தெரியப்போவுது— அவ என்னெத்திட்றளே அது தான் ஊடலிங்கிறது— தெரிஞ்சுதா?—.

மொட்:—தெரிஞ்சுது —.

அஸ்:—டே, அவதிட்டும்போது அவமொகத்தை பாத்திருக்கையாடா? அடாடா, என்ன அழகு தெரியுமாடா?

அஸ்வபாலன்.

இந்த — உலகினி லவள் புது ரதியே —
என் — யோகத்தாலே கிடைத்தாள் (இந்த)
இலகும் பேச்சிலே இளம் பசுங்கிளிதான்
திலகம் பாட்டிலே தெளிதேன் குயில்தான்
இகபர சுகமே தருமவள் முகமே
இதனையறியும் ஜெகமே
ஈடி லாத மோடி யுடையாள்
இந்த்ராதி மூவோரும் கண்டாசை கொண்டாடும் (உல)

மொட்:— அண்ணே, ஒங்கண்ணே மொதல்லே வைத்தியருகிட்டக்காட்டி ஏதாச்சும் மருந்து போடச் சொல்லு. என்னமோ கோளாறுண்ணுதான் நெனெக்கிறேன்.

அஸ்:—ஏண்டா?

மொட்:—பின்னே என்னண்ணே, அந்த அவலச் சணத்தைப் புடிச்சிக்கிட்டு அழவுங்கிறியே.

அஸ்:—டே மொட்டை, எங்கண்ணை அப்பிடியே தோண்டி ஒங்கண்ணிலே வச்சுப்பாருடா. அப்பொத் தாண்டா அவ அழகு தெரியும். ஒனக்குக் கண்ணே இல்லேடா.

மொட்:—அடபோண்ணே, ஒனக்குத்தான் அவ ரதி. ஒன் அழவுக்கு அந்த மூதேவியை கட்டிக் கிட்டு அழுவுறது எனக்குப்புடிக்கவே யில்லேண்ணே.

அஸ்:—அப்பிடீண்ணு நான் ரொம்ப அழகாவா யிருக்கேன்? — எனக்குத் தெரியலேயே.

மொட்:— ஊம் —. அழகாயிது! ராசாவாப் பொறந்திருக்கவேண்டியவன். என்னமோ ஒரு நாழி தவறிப்போயி குருதைக்காரன் வீட்டுலே பொறந் துட்டே.

அஸ்:—(தற்பெருமையுடன்) டே, எல்லாரும் அப்படித்தாண்டா சொல்றுங்க—. எங்கடா இன் னும் மகாராஜாவைக் காணும்—. நாழியாச்சே—. டே மொட்டை, எனக்காக இன்னொருதரம் நளினி வீட்டுக்குப்போயி, இண்ணேக்கி சாயங்காலம் நான் வருவேண்ணு சொல்லிட்டு வர்றயா?...

மொட்:— ஊஹூம். நான் போமாட்டேன். அங்கே ஒரு பல்லுப்போன கெழவியிருக்காளே அவ அண்ணேக்கி என்ணு கேட்டா தெரியுமா? "பணத்தோ டே வாருண, வெறும் ஆள் மாத்திரம் வாருண"ண்ணு

கேட்டா. இன்னொருத்தனயிருந்தா அந்த எடத்திலேயே நாக்கைப்புடிங்கிக்கிட்டு உசிரை விட்டிருப்பான்.

**அஸ்:** — அந்தக்கெழவிதாண்டா பணம், நகை, நட்டுன்னு சும்மா உசிரை வாங்கிறு. நளினி ரொம்ப நல்லவ. நீ நளினிகிட்ட மாத்திரம் சொல்லிட்டுவா. கெழவிக்குத் தெரியாமப்போகணும்.

(விக்ரமன் விரைந்து வருகிறுன்.)

**மொட்:** — அண்ணே மவராசா....

(இருவரும் வணங்குகிறுர்கள்)

**விக்:** — (அஸ்வபாலனை நோக்கி) குதிரைகளெல்லாம் புறப்படச்சித்தமாயிருக்கின்றதா?

**அஸ்:** —(பணிவுடன்) ஆமா மகாராஜா— சேணமெல்லாங்கட்டி கோட்டை வாசல்லே நிறுத்தியிருக்கிறேன்.

(விக்ரமன் செல்ல, அஸ்வபாலன் அவனைப்பின்பற்றி ஓடுகிறுன்.)

**மொட்:** —(தனி) அடேயப்பா, ஆளைக்கண்டதும் என்ன கூளைக்கும்பிடு போட்றுன்!—

(அஸ்வபாலன் ஓடிவந்து மொட்டையின் முதுகில் தட்டி)

**அஸ் :—** டே, நீ லாயத்தைப் பத்ரமாப்பாத்துக்கோ. ஐயா "நளினி" வீட்டுக்குப்போறேன். நாளைக்குத் தான் வருவேன்.

**மொட் :—** ஏண்ணே, பெரிய மவராசா போவ லையா வேட்டைக்கி?

**அஸ் :—** அவர் போனா என்ன, போகாப்போனா என்ன, அதைப்பத்தி ஒனக்கென்னடா கவலை?

**மொட் :—** சரி, உட்டுடு ...

(அஸ்வபாலன் போகிறான்.)

காட்சி முடிவு.

## களம் 1. காட்சி 5.

**இடம் :—** அரண்மனையிலோர்புறம்.

**காலம் :—** முற்பகல்.

**பாத் :—** [பர்த்ருஹரி, விக்ரமன்.]

(குறிப்பு) [விக்ரமன் ஓர்புறம் நிற்க, பர்த்ருஹரி உலவியவண்ணம் பேசிக்கொண்டிருக்கிறான்]

**விக் :—** இல்லையண்ணா, தாங்களும் உடன் வரத் தான் வேண்டும்.

**பர்த் :—** ஏன்? உன் நண்பர்கள், படைத்தலைவர் கள், வேடுவர்கள் எல்லோரும் உடன் வரும்பொழுது நான் வரவேண்டிய அவசியமென்ன?

**விக் :**— நான் அதற்காகச் சொல்லவில்லையண்ணா- ஏற்கனவே தாங்கள் ராஜீய காரியங்களைக் கவனிப்ப தில்லையென்று குடிகள் குறைகூறுகின்றனர். இது விஷயம் குருதேவர் செவிக்கும் எட்டியிருக்கிறது. நேற்று அவர் தங்களைக் காணவந்ததின் காரணமே இதுதான். சென்ற சில மாதங்களாக தங்களை அந் தப்புரத்தைவிட்டு வெளியில் பார்க்கமுடிகிறதேயில்லை. இந்த நிலைமையில் குடிகளின் நன்மையை முன்னிட்டு நடைபெறப்போகும் வேட்டைக்கும் தாங்கள் வரா திருந்தால் அது பெரும் பழிப்புக்கிடமாகும்.

**பர்த் :**— (வெறுப்புடன்) சதா குடிகளின் விஷ யங்களையே கவனித்துக்கொண்டிருந்தால் அரசன் எப்பொழுதுதான் சற்று நிம்மதியாயும், சந்தோஷ மாயுமிருப்பது? குடிகள் மனம்போனபடியெல்லாம் பேசுவது சகஜம்தானே.—

**விக் :**— அண்ணா, நமது குடிமக்கள் சந்தோஷ மாய் வாழ்க்கை நடத்துவதுதான் நமக்குச் சந்தோ ஷம். அதைப்பார்த்துத்தான் நாம் களிப்படைய வேண்டும்.—

**பர்த் :**— (இடைமறித்து) போதும், போதும். இந்த வேதாந்தங்களெல்லாம் யாருக்கு வேண்டும் ?

**விக் :**— இல்லையண்ணா, சாதாரண மனித தர்மத் தோடு நம் செயல்களை ஒப்பிட்டுப்பார்க்கக்கூடாது. மனித தர்மத்திற்கும் மேம்பட்ட ஒரு ஸ்தானத்தி

லேயே அரசர்களை நிறுத்திப்பார்க்கவேண்டும். — நாம் செய்யும் காரியங்களுக்கெல்லாம் தெய்வத்தன்மை கற்பிக்கப்படுகிறது. —

"முறை செய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்றுவைக்கப்படும்"-என்பதுபொய்யாமொழி

அரசனை இறைவனாகவே மக்கள் கருதுகின்றனர். சாதாரணமாக ஒரு மனிதன் பொய் சொன்னால் அதன் பெயர் "பொய்"தான். ஆனால், அதே பொய்யை நாம் சொல்லும்போது அதற்கு "ராஜதந்திரம்" "அரசியல் நுட்பம்" என்று பெயர் கொடுக்கப்படுகிறது. ஒருவன் மற்றொருவனுடைய பொருளைத் திருடினால் அதன் பெயர் "திருட்டு" நாம் ஒருவனுடைய நாட்டையே ஆக்ரமித்து அபகரித்துக்கொள்கிறோம். அதன் பெயர் "திக்கு விஜயம்" என்று சொல்லப்படுகிறது. ஒருவனையொருவன் கொன்றுவிட்டால் அதன் பெயர் "கொலை"—நாம் கொன்றால் அது "தண்டனை"— லக்ஷக்கணக்கான மனித உயிர்களை நாம் கொன்று குவிக்கிறோம். அது கொலையல்ல "தர்ம யுத்தம்"— நமது "மாபெரும் வீரச்செய்கை" ஜீவஹிம்சை செய்வது கூடாதுதான் ஆனால், நாம் நமது வேட்டையில் எத்தனை ஜீவன்களை வதைக்கிறோம்.— அது நமக்காகச் செய்வதா?— இன்னும் எவ்வளவோயிருக்கின்றது. இவற்றையெல்லாம் நோக்குங்கால் அரசனை தெய்வத்தின் பிரதிநிதியாகவே கருதவேண்டும். காட்டில் வாழும் ஓர் பற்றற்ற ஞானி

யின் நிலையில்தான் அரசர்கள் நாட்டிலிருந்து வர வேண்டும். தனக்கென வாழாது குடிகளுக்கென வாழ்வதே நமது கடமை. அதுவே நீதி —

**விக்ரமன்.**

ராஜரின் நீதிதனை நன்றாக
பூஜிதரே அறிவீரே யென் அண்ணா (ராஜ)
தேசமும் குடிகளும் திருவிழி யிரண்டாம்
மன்னர் — பாசமும் அன்பும் பதிந்தால்
பலம் உண்டாம் (ராஜ)

ஜீவவதையும் பிறர்நாடும் கவர்தல் — பெருந்
தீதெனினும் க்ஷத்ரியர் தீர தர்மமல்லவோ
காவலரே நமது கடமைதனை மறந்தால்
காசினியோர்கள் வசைபேசிப் பழிப்பாரன்றோ (ராஜ)

**பர்த் :**— (நகைத்து) சரி, சரி, உனக்குக்குரு உபதேசம் பலமாய்விட்டது போலிருக்கிறது — சரி, உன்னிஷ்டத்தைக்கெடுப்பானேன் — சகலமும் சித்தமாகட்டும். நானிதோ வருகிறேன்.

(போக முயல)

**விக் :**— எல்லோரும் சித்தமாயிருக்கின்றார்கள். தாங்கள் ...

**பர்த் :**—(கோபத்துடன்) இருக்கட்டும். — இதோ வந்துவிட்டேன்—ஏன் இவ்வளவு அவசரம்?

[விரைந்து செல்கிறான்—விக்ரமன்
சிந்தனையுடன் நிற்கிறான் ]

காட்சி முடிவு.

## களம் 1. காட்சி 6.

**இடம் :—** *அந்தப்புரம்.*

**காலம் :—** *முற்பகல்.*

**பாத் :—** *[பர்த்ருஹரி, மோகனு, சபலா]*

**(குறிப்பு)** *[மோகனு மஞ்சத்தில் சயனித்திருக்க, சபலா விசிறிக்கொண்டிருக்கிருள். "பர்த்ருஹரி" "மோகனு, மோகனு" என்று கூப்பிட்டவண்ணம் விரைந்து வருகிருன். மோகனு எழுந்து நிற்க, சபலா வெளியே செல்கிருள்.]*

**மோக :—** *என்ன நாதா, ஏனிவ்வளவு அவசரம்? எங்கேயோ புறப்படச்சித்தமாயிருக்கிருப்போல் தோற்றுகிறதே!*

**பர்த் :—** (வியப்புடன்) *கண்ணே, ஞானதிருஷ்டியினுல் அறிந்து சொல்வதுபோலிருக்கிறதே உன் வாய் மொழி!*

**மோக :—** *உங்களுடைய அவசரத்தைப் பார்க்கும்பொழுது அப்படித்தான் நினைக்கவேண்டியிருக்கிறது. எங்கே?*

**பர்த் :—** *இன்று நானும் வேட்டைக்குப் புறப்படவேண்டியது அவசியமாகிவிட்டது. இதையுன்னிடம் சொல்லிப்போகவே வந்தேன்.*

**மோக:** (முகத்தைத் திருப்பிக்கொண்டு) ஆமாம்-எல்லாயேற்பாடுகளும் செய்துவிட்டு என்னிடம் சொல்லிப்போக வந்தீர்களாக்கும் —

**பர்த் :—** என்ன செய்வது கண்மணி, குடிகளுக்கு ஏற்படும் எந்த கஷ்டத்திற்கும் அரசன் தானே முன்னிற்கவேண்டியிருக்கிறது. இல்லையேல், கொடுங்கோல் மன்னனென்கிறார்கள் — சண்டைக்கு, சமாதானத்துக்கு, நீதிக்கு, வேட்டைக்கு எல்லாவற்றிற்கும் நான்தான் நேரில் செல்லவேண்டியிருக்கிறது. —

**மோக :—** (கவலையுடன்) திரும்ப இரண்டுநாட்களாவது செல்லுமோ ?

**பர்த் :—** இப்பொழுது எப்படி நிச்சயமாய்ச் சொல்லமுடியும்? விரைவில்வர முயற்சிக்கிறேன் — (வெறுப்புடன்) சீ, என்ன அரசபோகம். — ஓர் ஏழைக் குடியின் வாழ்க்கை எவ்வளவோ சிறந்தது.

**மோக :—** (கொஞ்சலாக) அப்படியானால் நீங்கள் கட்டாயம்.போகத்தான் வேண்டுமோ ?

**பர்த்:—**விக்ரமன் தொந்தரவு செய்கிறான். நேற்று குருதேவர் வந்ததும்கூட இதுபற்றித்தானும்,— நான் போவதில் உனக்கிஷ்டமில்லையானால் நின்றுவிடுகிறேன். உன்வாக்கே எனக்கு வேதவாக்கு — உனது கட்டளையே தெய்வ கட்டளை. (தழுவிக்கொண்டு) காதலியின் ஏவலுக்குக் கீழ்ப்படியாத காதலன் காதக

னன்றோ — கண்ணே, களங்கமற்ற உனது வதனத்தை பூர்ணச்சந்திரனுக்கு ஒப்பிடலாமென்றால், அது பெருங்குற்றமாகும். சந்திரன் களங்கத்தோடு காட்சியளிக்கிறான், உனது முகத்தில் களங்கமேது? செவ்வதரங்களினிடையே தோன்றித் தோன்றி மறையும் உனது முல்லைச்சிரிப்பு நமது புராதன ஆலயங்களிலுள்ள பெயர் பெற்ற சிற்பிகளின் கற்பனையாலெழுந்த கற்சிலைகளை நினைப்பூட்டுகின்றது. அச்சிலாரூபம் இன்று என் கண்ணின்முன் உயிரோவியமாய்த் திகழ்கின்றது.— காதளவோடி செவ்வரிபடர்ந்து நிற்கும் உனது கண்களில் ஒன்று என்னுள்ளத்தில் பெருத்த நோயையுண்டாக்குகிறது. மற்றொரு கண்ணோ அந்நோயைத் தணிக்கும் மருந்தாகவிருக்கின்றது. — காதலி, நீயே நான் — நானே நீ.— நீ வீணை, நான் நாதம். — நீ மலர், நான் மணம்.— ஆஹா! நான் பெற்றபேறு பெறுக இவ்வையகம்.—

**மோக** :— போதும், போதும், இளையராணி அரசரை மயக்கிவைத்திருக்கிறாளென்று இப்பொழுதே அரண்மனையெங்கும் பேசிக்கொள்கிறார்களாம். இந்த வீண் பழி எனக்கெதற்கு ?— போய் வாருங்கள். குடிகளின் கஷ்டங்களை முதலில் கவனித்துவிட்டு வாருங்கள்.

**பர்த்** :— மோகனா, உன்னைவிட்டுப் பிரிந்து வேட்டைக்குப்போய் இரண்டு நாட்களைக்கழிப்பதென்றால், எனக்கு இரண்டு யுகமாகத்தான் தோன்றும்— வேறு

வழியுமில்லை. கடமையொன்று வந்து குறுக்கிடு கிறது.

மோக :— (குறுநகையுடன்) ஏன் நாதா, துஷ்ட மிருகங்கள் வந்து குடிகளின் பயிர் பச்சைகளையழிப் பதனுல்தானே வேட்டைக்குப்போக வேண்டியேற்படு கிறது. நமது இன்ப வாழ்க்கையைக்கெடுக்கக்கூடா தென்பது அந்த மிருகங்களுக்கு ஏன் நாதா தெரிய வில்லை?

பர்த் :— (சிரித்து) இம்முறை அம்மிருகங்களு க்கு நான் சரியானபடி புத்தி கற்பிக்கிறேன்.

மோக :— (பயத்துடன் கண்கலங்க) நாதா, துஷ்டமிருகங்களால் அபாயம் நேரிடாதபடி பார்த் துக்கொள்ளுங்கள்.

பர்த் :— கண்ணே, என்னுடல்மட்டுந்தானே வேட்டைக்குச் செல்கிறது.— உயிர் இங்குதானே யிருக்கப்போகிறது — அப்படியே ஏதேனும் ஆபத்து நேர்ந்தாலும், உடலுக்குத்தான் நேருமேயன்றி, உயி ரைப்பற்றிக் கவலையேயில்லை மோகனு.

(சபலாவந்து மறைவில் நின்று)

சபலா :— மகாராஜா,—

பர்த் :— என்ன ?—

**சபலா** :— சமுகத்தின் வரவுக்காக எல்லோரும் காத்து நிற்பதாக இளைய மகாராஜா அவர்கள் சொல்லி யனுப்பியிருக்கிறார்கள்.

**பர்த்** :— சற்று பொறுக்கச்சொல். ஏனிப்படி அவசரப்படுகிறான் விக்ரமன்....

(சபலா போகிறாள்)

**மோக** :— பிரமச்சாரிதானே —

**பர்த்** :— (மோகனாவைத்தழுவி முத்தமிட்டு) காதலி, கலங்காதே— நான் வரட்டுமா ?

**மோக** :— (கண்கலங்கி நிற்கிறாள்)

**பர்த்** :— சீக்கிரம் வந்துவிடுகிறேன். — எங்கே சந்தோஷத்தோடு—

**மோக** :— (தலையசைக்கிறாள்)

[பர்த்ருஹரி பெருமூச்சுவிட்டுச் செல்கிறான். மோகனா மறுபடியும் மஞ்சத்தில் சயனிக்க, தோழி சபலா வந்து விசிறுகிறாள் ]

**சபலா** :— தேவி, மகாராஜா உங்கள்மேல் எவ்வளவுதூரம் அன்பு வைத்திருக்கிறார் பார்த்தீர்களா !

**மோக** :— (சலிப்புடன்) ஆமாம்—அன்புதான்.

**சபலா** :— (வியப்புடன்) என்ன அம்மணி, வெறுப்போடு சொல்லுகிறீர்கள் ? பெரிய மகாராணி

யைத்திரும்பிக்கூடப்பாராமல் சதா சர்வ காலமும் உங்கள் அந்தப்புரத்திலேயே இருக்கிருர்.— உங்களுக் கென்ன குறை ?— என்னிடம் சொல்லக்கூடாதா ?

மோக :— என்ன வாழ்க்கையடியிது! நாள் முழு தும் குற்றவாளியைப்போல் அந்தப்புரத்திலேயே அடைபட்டுக்கிடப்பது.— வெளியுலகத்தின் இயற் கையை சிறிதுநேரமாவது அனுபவிக்கவேண்டாமா? பிற புருஷர்களைப் பார்க்கக்கூடாது, பேசக்கூடாது— பல்லக்கில் உலாவச்சென்ருல்கூட அதற்கு ஒரு திரை போட்டு மூடிவிடுவதா ? சீ—சீ— எனக்கு வெறுப்பா யிருக்கிறதடி.—

சபலா :— தேவி, அரசர் தாங்கள் ஆட்டிவைத்த படியெல்லாம் ஆடத்தயாராயிருக்கிருர். — உங்கள் உதடுகள் அசைந்தால் உடனே அந்தக்காரியம் நிறை வேறி விடுகிறது. — அப்படியிருந்தும் ...

மோக :— (இடைமறித்து) போடி, எவ்வளவு சுக போகங்களிருந்தென்ன பயன் ?

## மோகன.

இந்திர போகமும் சகல சௌபாக்யமும்
இருப்பினும் சுதந்திரம் இல்லையேல் சுகமோ (இந்)
குந்திய கைதியாய்க் குடியிருந்தேனே
கூண்டிலடைபட்ட பூங்கிளி யெனத்தானே
கொடுமையில் நானே
மெய் நொந்தேனே (இந்)

அடிமை வாழ்வதிற் சாவது மேலாம்
அந்தப்புரமென்பது நரகத்திற் கீழாம்
யாரிடம் கூர்வேன்
நாரியே தேர்வேன் (இங்)

—சுதந்திரமில்லாத வாழ்வு ஒருவாழ்வாடி ? ஓர் ஏழையை மணந்திருந்தால் இதைவிட இன்பமாய் வாழ்க்கை நடத்தலாமே. —

**சபலா :—** (ஒன்றுமறியாதவள்போல்) என்னவோ அம்மா— தங்கள் அபிப்பிராயம் அப்படி. என் புத்திக்கு ஒன்றுமே தெரியவில்லை — படிக்காத முண்டந்தானே. —

காட்சி முடிவு

## களம் 2. காட்சி 1.

**இடம்:—** தாசி நளினி வீடு.

**காலம்:—** பிற்பகல்.

**பாத் :—** [நளினி, இளனி, அஸ்வபாலன், குள்ளன், தாய்க்கிழவி, வாத்யகோஷ்டியார்.]

**(குறிப்பு)** [" இளனி " நாட்டியமாடிக்கொண்டிருக்கிறாள். " நட்டுவனார் " அவ்வப்போது திருத்திச்சொல்லிக்கொடுக்கிறார். " நளினி" ஓர் ஆசனத்தில் வீற்றிருக்கிறாள். "குள்ளன்" நாட்டியத்தை உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டு நிற்கிறான்.]

**இளனி** :—அழகுள்ள துரையிவர் ஆரடி ?

(பாடிக்கொண்டே அபிநயம் பிடிக்கிருள்.)

**நட்** :—இளனி, இந்தாபாரு—கழுத்தை வெட்டுடீ-
(செய்து காண்பிக்கிருர், இளனி மறுபடியும் அபிநயம் பிடிக்கிருள்.)

**நளினி** :— என்னடியிது, உயிரை வாங்கிறியே — கண்ணைச்சுழட்டுடீ ...

**நட்** :—ஆமா—(இளனியை நோக்கி) அக்காபேரை எடுக்கவாணுமோ ?

(மறுபடியும் பாடிக்காண்பிக்கிருர்.)

**சூள்** :— என்னுங்க தாத்தா, ஒருதரம். "குள்ள துரை"ண்ணு சொல்றீங்க; ஒருவாட்டி "ஆறடி" ண்ணு சொல்றீங்களே;

**நட்** :—போடா, விஷயந்தெரியாமெ ஒளருதே...

(அஸ்வபாலன் தயங்கியவண்ணம் வருகிருன்)

**சூள்** :—(ஏளனமாக) வாங்க, வாங்க, ஐயாவாங்க; எப்போ வந்தாப்பிலே ?

**அஸ்** :— (மெதுவாக) கெழவி உள்ளே இருக்கிருளாடா ?

**சூள்** :— (நகைத்து) ஏன் ? பயமாயிருக்குதுங்

களா ?—சும்மா வாங்க. அம்மா தான் இருக்காங்க— (நளினியிடம்) அம்மா, ஐயா வந்திருக்காங்க பாருங்க.

**நளினி :—** யார்ரு ஐயா! குருக்களையாவா?

**குள் :—** இல்லிங்கம்மா குருதைக்கார ஐயா;

**நளினி :—** யாரு! அரமனை ஐயாவா ?

**அஸ் :—** (அசட்டுச் சிரிப்புடன்) ஆமா.

**நளினி :—** வாருங்க, வாருங்க; வழி தெரிஞ்சுதா? (இளனியை நோக்கி) என்னடி, மாப்பிள்ளை ஐயா வந்திருக்காக—மரியாதையில்லாமே நிக்கிறிங்களே.

[கண் ஜாடைசெய்ய, இளனியையும் குள்ளனையும் தவிர மற்றவர் உட்செல்கின்றனர்.]

**அஸ் :—** நளினி, கோவிச்சுக்காதே ... இண்ணைக் குத்தான் ஒய்வு கெடைச்சுது. நீ கேட்டதையெல் லாம் நாளைக்கே கொண்டாந்து குடுத்திட்றேன். இண்ணிக்கு மாத்திரம் ஒங்கம்மாவை எப்பிடியாவது சமாதானம் பண்ணிடு. —

**நளினி :—** வந்திங்களா வழிக்கி; வெறுங்கையை வீசிக்கிட்டுத்தான் வந்திருக்கிங்களா ? அப்பிடிவாங்க இண்ணிக்கிப்போஞ, அப்புறம் ஒருமாசம் கழிச்சு ஐயாவை நிச்சயமாப்பாக்கலாம்,

**அஸ் .—** சே; அப்படி நெனைக்காதே நளினி — உன் தயவுமட்டும் இருந்தா, தாசானு தாசனு இங் கேயே இருந்துட்றேன்.

**நளினி** :— சர்தான். — நான் சம்பாதிச்சு ஒங்களுக்கும் சோறு போடணுமாக்கும்? நல்லாருக்குது நியாயம், அதைவிட ஒரு மரக்கட்டையை வச்சிருந்தாலும் சமயத்துக்கு அடுப்பெரிக்கலாம்.—பேர்மாத்திரம் பெரியபேரு— அரமணையிலே வேலே—அருவாமணையிலே.—

**அஸ்.** :—எனக்குக்கூட இந்தவேலே புடிக்கலே—என்னபண்றது? இதைவிட பணம் வர்ற வேலேயிருந்தா சொல்லு. நான் செய்யிறதுக்குக் காத்திருக்கேன்.

**நளினி** :— வேலே ஐயாவைத் தேடிவரும்; இருங்க.— அதென்னமோ எனக்குத் தெரியாது. அம்மா ஒரேமட்டாக் கோவிச்சுக்கரு; அண்ணிக்கி நான் கேட்ட நகையைக் கொண்டுவாராமெ இனிமே இங்கே வரவேணும்.

**அஸ்** :— (கெஞ்சலாக) என்னடி நளினி இப்பிடி தாட்சண்யமில்லாமச் சொல்றியே. எஞ்சம்பளத்தையெல்லாம் ஒனக்குத்தானேடி அழுதேன். எண்ணேக்குத்தான் ஒம்மனசு திருப்திப்படுமோ தெரியலேயே—

**நளினி** :— (ஏளனமாக) அடாடா சம்பளம்; மகாப்ரபு, ஒங்க சம்பளத்தைப்பத்தி வெளியே சொல்லாதிங்க. என்னமோ போக்கத்துப் போயி ஒங்ககூட மாரடிக்க வேண்டியிருக்கு.—. ஒரு நல்ல நகையுண்டா, புடவையுண்டா?...

## நளினி—அஸ்வபாலன் தர்க்கம்.

நளி:- சும்மா வராது எங்கள் (பெண்கள்) சுகந்தானே
சுடுகாடு போறமட்டும்
தாறேனென்று கூறுகின்றீர் (சும்மா)

அஸ்:- அம்மாவைக் கொஞ்சந் தயைபண்ணச்
சொல்லடி — உன்
ஞானை கையில் காசு தானுமில்லடி—
நளி:- ஆகாதையா—
அஸ்:- அருமைக்கிளியே நளினக்குயிலே (சும்மா)

நளி:- அழகு நகையே புடவை வகையே
அஸ்: பொறு நான் தருவேன் புரி புன்னகையே
நளி:- போதும் போதும் ஆசைதான்
அஸ்:- எதிப்போது காசுதான்
நளி:- இனி நடந்திடுவீர்
அஸ்:- உனை மறந்திடுவேனே (சும்மா)

**அஸ் :—** நளினி, நான் பெரிய பணக்காரனுகணும், ஒன்னை ராஜாத்திமாதிரி வச்சுக்கணும்னு ஆசையிருக்கத்தான் செய்யுது. அதுக்கு வழிதான் தெரியலே. —பணக்காரனுகணும்னு, ஒண்ணிலே—திருடணும்...இல்லேண்ணு பிறத்தியாரை மோசம் பண்ணணும்—இல்லேண்ணு திடீர்னு எங்கேருந்தாவது பொதையல் கெடைக்கணும் — அதுவுமில்லேண்ணு ஒன்னேவச்சு நான் பணக்காரனுகணும்....இதெல்லாம் ஒனக்குப்புடிக்குமா? எனக்கும் புடிக்காது. — குபேர

பட்டணம் இருக்கிற எடம் தெரிஞ்சாலாவது கொள்ளையடிச்சிட்டு வரலாம். என்னமோ எந்தலையிலே இந்தக்குதிரை தேய்க்கிறதுக்குத்தான் எழுதியிருக்கு.

**நளி** :— அதெல்லாம் எனக்குத்தெரியாது. நீங்க குதிரை தேச்சா என்ன; குட்டிச்செவராப்போனா என்ன? — டே பையா....

(ஜாடை செய்கிறாள்)

**குள்** :— ஐயா, கொஞ்சம் இப்பிடி வாங்க.

(அஸ்வபாலனை பிடித்து இழுத்து)

—வந்து ரொம்ப நாழியாச்சு — கொஞ்சம் நடந்து காமிங்க இதான் வழி.

**இள** :— அக்கா, அக்கா...

**நளி** : — போடி—குறுக்கே பேசாதே.

**அஸ்** :— நளினி, என்னையிப்படி அவமானப்படுத்தலாமா—அந்த அவமானம் ஒனக்கில்லையா — இது தருமமா ?

**குள்** :— ஐயா தருமாசா, அது என்னாங்க அது தருமமின்னா?

**அஸ்** :— அடி நளினி, ஒனக்குக் கருணையில்லையாடி ?

**குள்** :— இங்கே கருணையுங்கெடையாது, கிருணையுங்கெடையாது. உருளைக்கெழங்குதான் இருக்கு.

(பிடித்துத்தள்ளுகிறான்)

**அஸ் :**— ஐயோ, எரக்கமில்லாமெ நிக்கிறியே.

**சூள் :**— அட சர்தாம் போங்கய்யா. — வெறுங் கையை மொழம்போட வந்துட்டீங்க. ரெண்டு குரு தையெ வித்தாவது கேட்டதைக்கொண்டாந்து குடுப் பிங்களா ... என்னமோ ...

**அஸ் :**— ஐயையோ! குதிரையை வித்தா என் தலெ போயிடுமே.

**சூள் :**— பின்னே என்ன பண்றது? கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசைண்ணா?

**அஸ் :**— டே சொல்லுடா — வேறே ஒருவழியு மில்லையா?

**சூள் :**— வழியா?— ஒரேவழிதான். வெளியே எறங்கின ஒட்னே நேரே தெக்குப்பக்கமா நடந்துடு ங்க. அதான்வழி—போய் சேந்துடலாம். —

[தள்ளுகிறான் — அஸ்வபாலன் புலம்பிக்கொண்டே போகாமல் நிற்க, " தாய்க்கிழவி " வெளியேயிருந்து வருகிறாள்.]

**தாய் :**— என்னடியிது, வெட்டிப்பசங்களையெல் லாம் வீட்லே சேத்துக்கிட்டு அமக்களம் பண்றே?— (அஸ்வபாலனை முறைத்துப்பார்க்க, அவன் வெளியே செல்கிறான்.)

—ஏண்டி நளினி, இதென்ன தரும சத்திரமாடீ? நாலு பெரிய மனுஷங்க வந்துபோற எடமா லட்சணமா

யில்லேயே — என்னடி வர வர ஒம்புத்தி இப்பிடிப் போவுது ? —

(பேசிக்கொண்டே உட்செல்கிறாள்.)

**இள** — (நளினியிடம்) என்னக்கா, அத்தானை இப்பிடி வெரட்டிட்டயே. பாவமாயிருக்கக்கா. —

**நளி** :— போடீ, மகாபாவத்தைக்கண்டே. இண்ணைக்கி இப்பிடி வெரட்டுனாத்தாண்டி நாளைக்குப்பணம் வரும். அம்மா சொன்னதைக் கேட்டியா.—

**குள்** :— சிறிசு தானே—போவப்போவத்தெரியும்.

காட்சி முடிவு.

## களம் 2. காட்சி 2.

**இடம்** :— அரண்மனைப்பூங்கா

**காலம்** .— மாலை

**பாத்** :— [அஸ்வபாலன், மொட்டை]

**(குறிப்பு)** [அஸ்வபாலன் மனக்கவலையுடன் தலை கவிழ்ந்தவண்ணம் செல்ல, மொட்டை எதிரே வந்து அவனைச் சந்திக்கிறான்.]

**மொட்** :— ஏண்ணே, இப்பத்தானு லாயத்துக்கு போறே ?

**அஸ்** :—(போய்க்கொண்டே) ஆமா —

மொட் :— என்னண்ணே மொகம் ஒரு மாருதி யிருக்கு! என்ன விசயம்?

அஸ் :— ரெண்டு மூணு நாளா மனஸு சரி யாவேயில்லெடா.

மொட் :— ஏண்ணே? அந்தத்தேவிடியா மருந்து கிருந்து வச்சுட்டாளா?

அஸ் :— சேச்சே — பாவம்—நளினியை அப்பிடி யெல்லாம் சொல்லாதடா.

மொட் :— பின்னே என்னண்ணே, பொண்டாட் டியைப் பறிகொடுத்தவனாட்டமா மூஞ்சியை ஒரு மாருதி வச்சுக்கிட்டிருக்கே—எங்கிட்ட சொல்லப் படாதா?

அஸ் :— டே மொட்டை, எனக்கு ஒரு பெரிய ஒத்தாசை பண்ணுவியாடா?

மொட் :— என்னண்ணே இப்பிடிக்கேக்கறே? உசிரைவேணும்னாலும் குடுக்கிறேன் சொல்லண்ணே.

அஸ் :— அவசரமா ஒரு பத்து வராகன்வேணும் சம்பளம் வந்தவுடனே குடுத்துட்றேன்.

மொட் :— பத்து வராகனா!

அஸ் :— ஆமா —

மொட் :— (அலட்சியமாக) ஊம் ... பிரமாதமி ல்லே—பத்தில்லே, இருபதில்லே, நூறு வராகன் கேட்டாலும் ஒனக்கு இல்லேண்ணு சொல்லுவனா?

குடுக்கற மனசுதான்—ஆனா, இப்பொ இல்லேயே என்ன பண்றது? வடிவேலறிய வஞ்சகமில்லே.

அஸ் :— (ஏமாற்றத்துடன்) டே மொட்டை, திருப்பிக் குடுக்கமாட்டேண்ணு சந்தேகப்பட்றையாடா?

மொட் :— என்னண்ணே இத்தினிநாள் பழகிட்டு இப்பிடிக்கேக்கறே? இருந்தாக்குடுக்கமாட்டனா? எங்கிட்டே ஏதண்ணே வராகன்? அதுக்கும் நமக்குந் தான் ரொம்ப தூரமாச்சே. —

அஸ் :— (சலிப்புடன்) சீ, என்ன பொழைப்புடா யிது! பொறந்தாப் பணக்காரனாப் பொறக்கணும். —

மொட்:- பொறக்கலேயே—அதுக்கென்னபண்றது? குடுத்துவச்சதுதானே கெடைக்கும். — ஆமா ஒனக் கிப்போ என்ன செலவு?

அஸ் :— நனினிக்கு ஒரு நகை செய்து தர்றே ண்ணு சொன்னேன். அது இன்னும் குடுக்கலே.—

மொட் :— (நகைத்து) சர்தான். — வெரட்டீட்டா போலிருக்கு—அப்பிடி வாங்கராசா—அதான் மொக த்திலே களையே காணோம்—அண்ணே, அவளுக் கிண்ணா எங்கிட்ட இருந்தாக்கூடக் குடுக்கமாட்டேன் இப்பவாச்சும் தெரிஞ்சுக்கோ—"காசியிருந்தாத்தான் தாசி".

அஸ் :— நளினிமேலே ஒருகுத்தமுமில்லடா. பாவம் அவ என்ன செய்வா? அந்தக்கெழவி அவளைத் தொந்தரவு பண்ரு.—

மொட் :— அப்பொ, எனக்கொரு நல்லயோசனை தோணுது— அந்தமாருதி செய்திட்டா, பணத்துக்கும் செலவில்லே, நீயும் சந்தோசமாயிருக்கலாம்.

அஸ் :— (ஆவலுடன்) என்ன யோசனேடா?

மொட் :— ராத்திரியோட ராத்திரியா அந்தக் கெழவியை சரிப்படுத்திப்புட்றேன்.

அஸ் :— (பயந்து) டே—டே—டே பாவி, அந்த மாதிரி செய்திடாதடா. அப்றம் நளினி உசிரை விட்டுடுவா. நளினி உசிரை விட்டுட்டா, அப்றம் நான் உசிரை வச்சிக்கிட்டிருக்க முடியுமா?— நீ ஒண்ணும் ஒத்தாசை பண்ணவேண்டாம். சும்மா இருந்தாப்போதும்.

மொட் :— சரி உட்டுடு—வேண்டாண்ணு யாரு செய்யப்போறுங்க?— வயசும் ரொம்ப ஆச்சே, சனியன் தொலையட்டுமேண்ணு பாத்தேன்.—அப்பொ, நீ நேரா லாயத்துக்குத்தானே போறே?

அஸ் :— ஆமா—

மொட் :— சரி, நீ போய்க்கிட்டே இரு – இதோ ஒரே ஓட்டத்திலே வந்துட்றேன். வயத்தைக்கிள்ளுது.— (போகிறுன்.)

அஸ் :— (தனி) ஊம்...பணமில்லாதவன் பொண மிங்கிறது சரியாத்தான் இருக்கு.—

**அஸ்வபாலன்.**

எளியவர்க்கேது இன்பமே
இகத்தில் பணமேதான் பிரதானம்
ஏகபோகம் ஏற்றிடும் பணமே
எதிர்கொண்டழைக்க இசைத்திடும் பணமே
எண்ணிய கார்யம் பண்ணிடும் பணமே
புண்ணிய பாவம் போக்கிடும் பணமே
இலையானால் அவனே நடைப்பிணமே — (எளி)

(பாடிக்கொண்டே செல்கிறான்)

காட்சி முடிவு.

## களம் 2. காட்சி 3.

**இடம் :—** அந்தப்புரத்தைச்சார்ந்த நந்தவனம்.

**காலம் :—** மாலை.

**பாத் :—** [மோகனா, அஸ்வபாலன், சபலா]

**(குறிப்பு)** [மோகனா உப்பரிகையின்மீது நின்று "புறா"க்களுடன் விளையாடிக்கொண்டிருக்கிறாள். அஸ்வபாலன் பாடியவண்ணம் ஓர் புறமாய் கீழே செல்கிறான். அப்பாடலைச் செவியுற்ற மோகனா, அவனை உற்று நோக்கியவாறு நிற்கிறாள் ]

அஸ் :— (முன்பாட்டின் தொடர்ச்சி)

குலம் நலந்தரு நிறை குணங்கள்
கூராய்ப் பாராரே பூவுலகினில்
குரூபியை மாரனுக்கும் பணமே
கொடுமையை நானே கண்டேனே
கோழையை யாரும் துதியாரே
ஏழையை யாரும் மதியாரே (எளி)

[அஸ்வபாலனின் இசையிலும், எழிலிலும் மயங்கிய மோகனு தனது கையிலிருந்த "பூச் செண்டை" அஸ்வபாலன்மேல் எறிய, அவன் திகைப்புற்று, அச்செண்டைக் கையிலெடுத்த வண்ணம் உப்பரிகையை நோக்க, மோகனு புன்சிரிப்புடன் நிற்பதைக்கண்டு - பயந்து, நான்குபுறமும்திரும்பிப்பார்த்தவண்ணம் குதிரை லாயத்தை நோக்கி விரைந்து செல்கிறுன். மோகனு உப்பரிகையைவிட்டுக் கீழிறங்கி, அவன் செல்வதை ஆவலுடன் பார்த்துக் கொண்டு நிற்கிறுள்.]

**மோக** :— ஆஹா! என்ன கெம்பீரமான நடை! எவ்வளவு அழகன்!! என் மனதைக்கவர்ந்த இவன் யாரென்று தெரியவில்லையே!— இப்பேர்ப்பட்ட மகா புருஷனை அணையாத ஜென்மம் இருந்தென்ன பயன்? ஆஹா! இவன் பாடிய பாட்டு என் செவிகளில் அமிர்தத்தை ஊற்றியதுபோலன்றே விருந்தது.—(பெருமூச்சுவிடுகிறுள்.)

மோகனா.

மாரவேளிவனே
மாதர்கள் உள்ளம் கொள்ளை கொண்டிடுவானே
மனதார யெனைத்தினமே கூடி
வாழ்க அவதரித்தானே — (மார)

மதி—நிகரும் முக வசிகரன்
மலை நிகர் புயவான்
நிலை பெறும் ஜெயவான்
மங்கள சோபித வரனே—தீரனே

திருமாலவனும் வடிவேலவனும்
உருவாகினனோ பூ மேல்
மனமே பொறு நீ பாக்யசாலி
வடிவழகனையே கண்டேன்
வாஞ்சைக் காதலுங் கொண்டேன் — (மார)

திவ்ய ரூபன் தெய்வம் எனவே
தேமிகு சோலையில் வந்தான்
திருவிழி குளிர ஆசை பெருகத்
தெரிசன மினிதாய்த் தந்தான்

தேவாமுதமே தேடியபடியே
சீக்கிரம் கூடும் இன்பம்
தீரும் கவலை கோரும் பொருளை
நேரில்டைகிறேன் இன்றே (மார)

[மோகனா பாடிக்கொண்டிருக்கும் சமயம் சபலா பின் புறம் வந்து அவளுடைய செய்கையைக் கவனித்தபடி நிற்கிருள்.]

மோக:— (தனி) ஊம்—என்மனோபீஷ்டத்தை அவனெப்படியறியப் போகிறான்!...

சபலா:— (பின்புறம் வந்துநின்று) தேவி — என்ன யோசனை?

மோக:— (திடுக்கிட்டுத்திரும்பி) யாரது! சபலாவா?

சபலா:— ஆம் அம்மணி—தங்கள் முகமேன் ஒருவாறாயிருக்கிறது?— என்ன பார்த்துக்கொண்டிருந்தீர்கள்?

மோக:— நீ வந்து வெகுநாழியாயிற்றா?

சபலா:— இல்லை —இப்பொழுதுதான் வந்தேன்.

மோக:— சற்றுமுன் — இப்படிப்போனானே ... அவன் யாரடி?

சபலா:— (ஒன்றுமறியாதவள்போல்) நான் பார்க்கவில்லையே தேவி!

மோக:— இப்பொழுதுதான் போனான். அந்தப் பளிங்கு மண்டபத்தில் நின்று பார்த்தால் தெரியும். யாரென்று தெரிந்து வா.—

(சபலா ஓடுகிறாள்)

மோக:—(தனி) இவ்வளவு சுந்தர புருஷன் இவ்வரண்மனையிலிருப்பதை நான் இத்தனை நாட்களாகத் தெரிந்துகொள்ளவில்லையே.—

(சபலா திரும்பி வருகிறாள்.)

மோக :— யாரடி?

சபலா :— குதிரைக்கார அஸ்வபாலனல்லவா போகிறான்.

மோக :— குதிரைக்காரனா!

சபலா :— ஆம் அம்மணி.

மோக :— என்ன தைர்யமடி அவனுக்கு! என்னைப்பார்த்து சிரித்துக்கொண்டே போகிறான். —

சபலா :— தங்களைப்பார்த்தா?—அப்படியா செய்தான்!—சரி, சரி கேடுகாலம்தான் அவனுக்கு. அவன் குணமே எப்பொழுதும் ஒருமாதிரிதான். மகாராஜாவிடம் சொல்லி அவனை நமதரண்மனையிலிருந்தே நீக்கிவிடவேண்டும்.

மோக :—இல்லையடி—ஒருவேளை என்னை இன்னாரென்று தெரிந்திருக்காது. நானும் இதுநாள்வரை இவனைப் பார்த்ததில்லையே.

சபலா :— (கோபத்துடன்) யாராயிருந்தாலென்ன? இது அரண்மனையந்தப்புரம் — ராணிமார்கள் இருப்பிடம் — வந்தவன் தன் வழியே போகாமல் சிரிப்பதா? நான் லேசில்விடப்போவதில்லை.

மோக :— (புன்சிரிப்புடன்) என்னடி பிரமாதம்; நாம் மாத்திரம் அவனைப்பார்த்தது குற்றமில்லையோ?

சபலா :— அதெப்படிக்குற்றமாகும்? இது நம்முடைய இருப்பிடம். நாம் என்னவேண்டுமானாலும்

செய்யலாம். அன்னியர்கள் தன் போக்கில் போக வேண்டியதுதானே?

**மோக :—** (மெதுவாக) அடிசபலா, அவன் இவ்வளவு துணிவாக நடந்துகொண்டதற்கு தகுந்த தண்டனை கொடுக்கத்தான்வேண்டும்.

**சபலா :—** நான் இப்பொழுதே காவலர்களைவிட்டு அவனை இங்கழைத்துவரச்செய்கிறேன். தாங்களே தண்டனை விதியுங்கள்.— மகாராஜாதான் இங்கில்லையே தாங்கள்தான் சர்வாதிகாரி. தாங்களிட்டதே சட்டம்.— அழைத்துவரச் சொல்லவா?

**மோக .—** வேண்டாமடி—இப்பொழுது வேண்டாம்.— காவலர்களிடம் மட்டுமல்ல வேறு எவரிடமும் இதைப்பற்றி ஒன்றும் பேசக்கூடாது தெரியுமா? — ஊம் — (அவளை அணைத்துக்கொண்டு) இன்றிரவு ....ஒருவருக்கும் தெரியாமல் தனிமையாக அவனை அந்தப்புரத்திற்கு அழைத்து வரவேண்டும்— என்ன? தெரிகிறதா?

**சபலா :—** (ஒன்றுமறியாதவள் போல்) என்னம்மணியிது? தாங்கள் சொல்வதொன்றும் எனக்கு விளங்கவில்லையே.

**மோக :—** (அன்புடன் தழுவிக்கொண்டு) சபலா, நான் உன்னையே நம்பியிருக்கிறேன்.— என் மனதையவன் பறித்துச் சென்றுவிட்டான்—அவனோடுகூடி இன்பமனுபவித்தால்தான் என்னுயிர் நிற்கும்.

**சபலா :—** (பயந்தவள்போல் நடித்து) தேவீ ...

**மோக :—** (நகைத்து) என்னடீ?

**சபலா :—** மகாராஜாவுக்குத்தெரிந்தால்—நம்மிரு வருயிருக்கும் ஆபத்து நேருமே....

**மோக :—** (அலட்சியமாய்) ஊம்—போடீ—நாளைய தினம் போகும் உயிரைப்பற்றி இன்றைக்கென்னடி கவலை?—உனக்கு எவ்வித ஆபத்தும் வராமல் நான் பார்த்துக்கொள்கிறேன்.

**சபலா :—** அம்மணி, தாங்களோ மகாராணி! அவனோ கேவலம் குதிரைக்காரன்; அவனைத்தாங்கள்—

**மோக :—** (புன்சிரிப்புடன்)போடீ பைத்தியமே, காதலுக்குக் கண்ணேது மூக்கேது? உயர்வுக்கும் தாழ்வுக்கும் இதில் இடமேதடி? "ராஜாக்கள் மட்டும் நினைத்தபோதெல்லாம் நினைத்த பெண்களைக்கூடி நித்யானந்த போகத்திலிருக்கலாம், ராணிகள் மட்டும் அந்தப்புரத்தைவிட்டு வெளியிலேயே வராமல் அரசனின் கைப்பொம்மையாயிருக்கவேண்டுமோ!" என் மனப்படி நடக்க எனக்கு சுதந்திரமிருக்கிறதடி.

**சபலா :—** தாங்கள் சொல்வது நியாயம்தானம்மணி—ஆனால்... ராஜ ஆக்ஞை—

**மோக :—** (அலட்சியமாய்)...தலைக்கு மிஞ்சின ஆக்ஞை என்னடி? எல்லாம் எனக்குத்தெரியும் — நீ மாத்திரம் காட்டிக்கொடுத்துவிடாதே.

**சபலா :**—தேவி, இந்த உயிரே உங்களுடையது. என் வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வெளிவராது.

**மோக :**— ஏண்டி சபலா, அவன்...என்னை விரும்புவானுடி?

**சபலா :**— (குறுநகையுடன்) ஊம்—கரும்பு கசக்குமென்று யாராவது சொல்லுவார்களா அம்மணி?

**மோக :**— சரி, நீ போய் அவனைக்கண்டு இன்றிரவு இங்குவர ஏற்பாடு செய்துவிட்டு வா.

**சபலா :**— உத்திரவு.—(போகமுயல)

**மோக :**— (தடுத்து) சபலா, ஜாக்கிரதை. விஷயம் ரகசியமாய் இருக்கட்டும்

**சபலா :**— தேவீ, எப்படியாவது நீங்கள் சந்தோஷமாயிருக்கவேண்டுமென்பதே என் கோரிக்கை. என் உயிர் போயினும் விஷயம் வெளிவராது.—

[மோகனை சபலாவை அன்புடன் தழுவி அவள் கன்னத்தில் முத்தமிட்டு வழியனுப்புகிருள் ]

காட்சி முடிவு.

## களம் 2. காட்சி 4.

**இடம் :**— அரண்மனைப்பூங்கா.

**காலம் :**— மாலை

**பாத் :**— [சபலா, மொட்டை]

(குறிப்பு) [சபலா யோசித்தவண்ணம்நிற்கிருள்].

**சபலா** :— (*தனக்குள்*) *சரி, சரி—இது ஏதோ விபரீதமாய்த்தான் தோன்றுகிறது — ஊம்... யார் எப்படிப்போனால் நமக்கென்ன? நாம் சேர்த்துவைக்கும் இந்த சம்பந்தத்தால் நமக்குப் பலவகையிலும் நல்ல லாபம் கிடைக்கும். சந்தேகமேயில்லை. இந்த சந்தர்ப்பத்தில் கிடைத்தமட்டும் சுருட்டிக்கொள்வதைவிட்டு, தர்மா தர்மம் பார்ப்பது முட்டாள்தனம். "கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுக்குமென்பார்களே," அதைப்போல, குதிரைக்காரனுக்கு அடித்தது யோகம்.—*

**சபலா.**

*ராணியின் அந்தப்புர ரகசியமே*
*ஆஹா ரகசியமே (ராணி)*
*நமக்கென்ன தர்மகார்யம்*
*நடக்கட்டும் பெரும்பொருள்*
*நயந்து கறந்துகொள்ளச் சமயமிதே*
*நல்ல சமயமிதே —*
*நானே தூதாகச் செல்வேன் — ஆஹா*
*தேனே கனியச் சொல்வேன் — ஓஹோ (ராணி)*

(*மொட்டை ஓர்புறமாக வருகிறான்*)

**சபலா** :—(*தனக்குள்*) *சரி—காரியம் ஜெயம்தான் —அண்ணா, மொட்டையண்ணா—இப்பிடி வாண்ணா...*

**மொட்** :— (*திரும்பி*) *ஓ நீங்களா! அதானே — நான், யாரோ இப்பிடி தலேலே அடிச்சமாருதிப்*

பேரைச்சொல்லிக் கூப்பிட்ருங்கண்ணு பாத்தேன்.— என்னும்மா?

**சபலா :**— சௌக்கியந்தானே?

**மொட் :**— ஏதோ ஓங்க புண்ணியத்திலே இருக்கேன் ஒரு மாருதியா.

**சபலா :**—அஸ்வபாலரு லாயத்திலே இருக்காரா?

**மொட் :**— ஏம்மா?

**சபலா :**—அட, இருக்கிறாரா சொல்லேன்.

**மொட் :**— அங்கேதான் இருப்பாரு—

**சபலா :**— ஆமா, நீ இந்நேரத்திலே எங்கே போறே?

**மொட் :**— என்னும்மா, இப்பிடிக்கேக்கிறிங்க? பொஞ்சாதி புள்ளேக்காரன் எங்கே போவேன்?—

**சபலா :**— வீட்டுக்குத்தான் போறியா?

**மொட் :**—வேறேஎங்கேம்மா போவப்போறேன்? மத்தவங்கமாருதி தப்புத்தண்டாவுக்கு ஒண்ணும் நான் போறதேயில்லிங்க.

**சபலா :**— அடேயப்பா, தெரியுமே உன் யோக்கியதை — எங்கிட்ட ஒண்ணும் அளக்கவேண்டாம்— தாசி நளினிகிட்ட நீ சகவாசம் வச்சிக்கிட்டிருக்கிறது ஒருத்தருக்கும் தெரியாதிண்ணு நெனேச்சுக்கிட்டிருக்கியா?

மொட் :— (திகைப்புடன்) யாரு! நானு? பாத்திங்களா, அந்தக்குருதைக்கார அண்ணன் பண்ற வேலே நம்ப தலேலே வந்து விடியுது. — இதான் பழியொரு பக்கம் பாவமொருபக்கமிங்கிறது.

சபலா :— யாரு, அஸ்வபாலரா ?

மொட் :—ஆமாம்மா—அவரு ஒருமாருதி ஆளுங்க. நம்பகிட்ட அதெல்லாங்கெடையாது. எம்பொஞ்சாதிதான் எனக்கு ரதி. அந்த தேவலோகத்து ரம்பையே வலுவுக்க வந்தாக்கூட, இந்தக்கட்டை மசியாதுங்க—(தன்மார்பில் தட்டி) இந்த நெஞ்சு இரும்பு.

சபலா :— அப்பிடீண்ணு, அஸ்வபாலருதான் நளினிகிட்ட சகவாசம் வச்சிக்கிட்டிருக்காரா?

மொட் :— அந்த எழவை ஏம்மா கேக்கிறிங்க? அவ வூட்லேதான் சதா உளுந்து கெடக்கிறாரு. மருந்து கிருந்து வச்சுட்டாளோ என்னு எழவோ தெரியலே. —

சபலா :—இப்பொ லாயத்துக்குப்போனா அவரைப் பாக்க முடியுமா?

மொட் :— ஏம்மா என்னாத்துக்கு?

சபலா:—வேறே ஒண்ணுமில்லே, குதிரை சவாரி பழகணும்ணு ஆசையாயிருக்கு, அதுக்காக ...

மொட் :— நீங்களா பழவப்போறிங்க?

**சபலா** :— (புன்சிரிப்புடன்) ஏன், பொம்பளைங்க பழகப்படாதா?

**மொட்** :—பழகினு என்ன.— ஒண்ணுமில்லே— ஆனு ....

**சபலா** :— ஆனு என்ன?

**மொட்** :— அதான் இத்தினிநாழி கேட்டுக்கிட்டிருந்திங்களே, குருதைக்கார அண்ணன் கொணத்தைப் பத்தி.— நான் சொல்லணுமா? —என்னமோ எம்மனசுக்குப் புடிக்கலே. அப்புறம் ஒங்க இஸ்டம்.— நான் வர்றேன்.

[போகிருன். சபலா நகைத்துக்கொண்டே மற்றொருபுறம் செல்கிருள்.]

காட்சி முடிவு.

## களம் 2. காட்சி 5.

**இடம்** :— குதிரை லாயம்.

**காலம்**:— மாலை.

**பாத்** :— [அஸ்வபாலன், சபலா, மொட்டை]

(குறிப்பு) [அஸ்வபாலன் பூச்செண்டைக்கையில் வைத்துப் பார்த்துக்கொண்டிருக்கிருன்.]

**அஸ்**: — (தனக்குள்) அவ யாருண்ணு தெரியலையே—எதுக்காக எம்மேலே பூச்செண்டை விட்டெறிஞ்சா?— யாராவது தோழிங்களாயிருக்குமோ? ...

அரமனை அந்தப்புரத்திலே வேறே யாரு வரப்போறாங்க? —ஆனா, பொண்ணுமட்டும் அழகாத்தான் இருந்தா.—என்னயிருந்தாலும் நளினியைப்போல வராது. அவளை நான் இதுக்குமுன்னாடி ஒருநாளாவது பாத்ததில்லையே—முன்னே பின்னே பழக்கமேயில்லாத ஒம் மேலே பூச்செண்டை எறியறதுக்கு அந்தப்பொண்ணுக்கு எவ்வளவு தைரியம் இருக்கணும்!— ஊம் ... என்னயிருந்தாலும் நளினி அழகே ஒரு தனிதான். அவளுக்குஅடுத்தபடியாத்தான் இவளைச்சொல்லணும்.

(சபலா விரைந்து வருகிறாள்.)

**அஸ்** :— (அவளை நோக்கி) ஓ, சபலாவா? வா, வா உக்காரு. என்ன சமாச்சாரம்? ஏது இந்த நேரத்திலே இப்ப்டிப்பொறப்பட்டது? குதிரை சவாரி ஏதாவது பழகணுமா? உன் விஷயத்திலே சும்மாவேணும்னாலும் கத்துக்குடுக்கறேன்.

**சபலா** :— எனக்குக்குதிரை சவாரியும் வேண்டாம், கழுதை சவாரியும் வேண்டாம். அதெல்லாம் அந்தத்தேவடியா நளினிக்குக் கத்துக்குடு.

**அஸ்** :— சபலா, இந்தாபாரு, என்னை என்ன வேணும்னாலும் சொல்லு. நளினியை மாத்திரம் தேவடியாண்ணு சொல்லாதே.

**சபலா** :— நாளைக்கி ஒந்தலைக்குக் கத்திவரப்போவது...அதை மொதல்லே கவனிச்சுக்கோ.

அஸ் :— கத்தியா!

சபலா :— ஆமா.

அஸ் :—எந்தலெக்கா?— சபலா, சபலா, என்ன சமாச்சாரம்? சீக்கிரம் சொல்லேன். —

சபலா :— நான் சொல்லணுமா? ஒனக்குத்தெரியாதா? —இந்தப்பூச்செண்டு ஒனக்கு எப்படிக்கெடச்சுது?

அஸ் :— (திகைத்து) ஊம்...அது...அது...

சபலா :— (அதட்டி) அது, அது என்றால்—எது?

அஸ்:— அதானே சொல்றேன்—அது—வந்து...

சபலா:—என்ன வந்து? ஏன் வாயை மெல்கிறாய்?

அஸ்:— இந்தப் பூச்செண்டைப்பத்தித்தானே கேக்கறே?

சபலா :— ஆமா.

அஸ் :— அது—வந்து—ஒரு பொண்ணு ...

சபலா:— (அதட்டி) எந்தப்பொண்ணு? உண்மையைச்சொல்லு.

அஸ் :— சபலா, ஒம்மேலே ஆணையாச்சொல்றேன்.

சபலா:— எம்மேலாணையா? நான் செத்தால் ஒனக்கென்ன?

அஸ் :—சபலா, எம்மேலே ஒரு குத்தமுமில்லே. நான் சாயந்தரம் அப்படியே அந்தப்புர வழியா—வரும்

போது யாரோ ஒரு பொண்ணு மாடியிலே இருந்து இதை எம்மேலே வீசிஞ.

**சபலா:**— (ஏளனமாக) ஐயோ, இந்த அழகு மன்மதனைக்கண்டு மயங்கிட்டா போலிருக்கு —

**அஸ்:**— சபலா, அவ என்னெப்பாத்து சிரிக்கக் கூடச்செய்தா. சத்தியமாச்சொல்றேன்.

**சபலா:**— அடேயப்பா, முழுப்பூசணிக்காயை சோத்துக்குள்ளே மறைக்கப் பாக்கிறியே—

**அஸ்:**— பாத்தியா, பூசணிக்காயே இல்லாத போது, அப்றம் சோத்திலே மறைக்கிறேண்ணு எப்பிடி?

**சபலா:**— பொய்-பொய்-எல்லாம்பொய் இளைய ராணி சொன்னது உண்மையாப்போச்சு. எவஞே ஒருத்தன் அந்தப்புர வழியாப்போகும்போது, உப்பரிகையிலே நிண்ண அவங்களைப்பாத்து சிரிச்சாஞம்— ஒடனே ராணி அப்படியே தங்கையிலே இருந்த பூச் செண்டாலே அவனெ ஓங்கி அடிச்சாங்களாம் — அப்புறம் அவன் ஓடிப்போயிட்டாஞம். அவன் யாருண்ணு கண்டுபுடிச்சு சொல்லச் சொன்ஞங்க. நான் அடையாளம்கேட்டதிலே நீயாத்தான் இருக்கணும்ணு தோணிச்சு — இந்தமாதிரி திருவிளையாடல்லேதான் நீ ரொம்ப பேர்போனவஞச்சே. இந்தப்பூச்செண்டைப்பாத்த ஒடனே, கொஞ்சநஞ்சம் இருந்த சந்தேகமுந்தீந்துபோச்சு. இது இண்ணைக்கி நானே எங்

கையாலே ராணிக்குச்செய்துகுடுத்த பூச்செண்டு தெரியுமா? சரி, நாளைக்குத்தூக்கிலே ஏறத்தயாரா யிரு.

(போக முயல்கிருள்.)

**அஸ் :—** (தடுத்து) சபலா, சபலா, நீதான் என்னைக்காப்பாத்தணும்—எம்மேலே ஒருகுத்தமுமில்லே நீ என்ன சொன்னாலும் கேக்கறேன்.

(சபலா காலில் விழுகிருன்)

**சபலா :—** அட எழுவே, காலை விடேன். விசாரிச்சு சொல்லச்சொல்லி எனக்கு உத்தரவு. நான் ராணியம்மாகிட்டப்போயி சொல்லிட்றேன். அப்புறம் அவங்கபாடு, ஒம்பாடு. —

**அஸ் :—** (நடுக்கத்துடன்) சபலா, சபலா, எம் பேரை மாத்திரம் சொல்லாதே. ஒனக்கு என்ன வேணும்னாலும் ...

**சபலா:—** அம்மாடி, மகாராணிகிட்ட பொய் சொல்ல முடியுமா? — நான் என் ஆயுசிலே ஒருதடவை பொய் சொன்னதேயில்லையே.

**அஸ் :—** இந்த ஒருதடவை மட்டும் எனக்காகப் பொய் சொல்லப்படாதா? ஒரு உயிரைக் காப்பாத்த எத்தனைபொய் வேணும்னாலும் சொல்லலாமிங்கிறாங்களே.

**சபலா :—** முடியவே முடியாது. வேணும்னா, வேறே ஒருத்தர்கிட்டேயும் சொல்லாமெயிருக்கேன்.

**அஸ்:**— (பயத்துடன்) சபலா, இதுக்கு ஒரு வழியுமில்லியா? — மகாராணி ஒம்மேலே ரொம்பப் பிரியம்ணு சொல்ருங்களே; நீ சொல்லி எனக்கு மன்னிப்பு வாங்கிக்குடுத்துடப்படாதா ?

**சபலா:**— அதெல்லாம் என்ணுலே முடியாது. அவுங்க ஒம்மேலே ரொம்பவும் கோவமாயிருக்காங்க— நீதாம்போயி மன்னிப்புக்கேக்கணும்.

**அஸ்:**— ஐயையோ, நான் அவங்களெப் பாக்கவே முடியாதே. — அப்புறம் மன்னிப்புக்கேக்கறது எப்பிடி?

**சபலா:**—போணுப்போவுது, அதுக்குவேணும்ணு நான் ஏற்பாடு பண்றேன். ... இண்ணிக்கி ராத்திரி அவங்க இருக்கிற எடத்துக்கு ஒன்னெக்கூட்டிக்கிட்டு போறேன். நீ இந்த சமாச்சாரத்தை ஒருத்தருக்கும் சொல்லவேகூடாது. மகாராணியெப்பாத்து நீ நேராவே மன்னிப்பு வாங்கிக்கோ. எல்லாம் அதிஷ்டத்தைப்பொறுத்திருக்கு.

**அஸ்:**— சபலா, ராணி கோபத்திலே ஏதாவது செய்துட்டா? — கோபம், பாவம், சண்டாளமிங்கிருங்களே. —

**சபலா:**— அட தொடைநடுக்கி, நாணும்கூட வர்றேன். பயப்படாதே—சமய சந்தர்ப்பத்தை அனுசரிச்சு நீ நடந்துக்கணும். எல்லாம் உன் சாமர்த்தியத்தைப் பொறுத்திருக்கு.—சின்னமகாராணி ரொம்ப நல்லவங்க.

**அஸ்** :— சபலா, இந்த ஒத்தாசையெ நான் மறக்கவேமாட்டேன். நளினிக்கு அடுத்தபடியா ஒன்னேத்தான் நான் மனசிலே வச்சிருக்கேன்.

**சபலா** :— நீ சும்மாயிருந்தாப்போரும் — நாழியாகுது, நான் வர்றேன். இண்ணைக்கி ராத்திரி சரியா பதினஞ்சு நாழிக்கு அரமனேப்பூந்தோட்டத்திலேயிருக்கிற சந்தன மரத்தடியிலே வந்து நீ தயாராயிரு நான்வந்து கூட்டிக்கிட்டுப்போறேன். — விஷயம் ஒரு காக்கா குருவிக்குக்கூட தெரியக்கூடாது.

**அஸ்** :— சபலா, நீ சொன்னபடியே வர்றேன். மோசம் பண்ணிடாதே.

**சபலா** :— எல்லாம் நன்மையாத்தான் முடியும். அப்புறம் என்னே மட்டும் மறந்துடாதே. —

**அஸ்** :— ஒன்னே மறப்பேனு சபலா ...

**சபலா** :— (போய்க்கொண்டே) ஞாபகமிருக்கட்டும். — சந்தன மரத்தடியிலே —

**அஸ்** :— ராத்திரி பதினஞ்சு நாழிக்கா?

**சபலா** :— ஆமா ...

(செல்கிருள்)

**அஸ்** :— (தனக்குள்) என்ன ஆபத்து வரப்போகுதோ தெரியலே. — எங்கேயாவது ராத்திரியோட ராத்திரியாஓடிப்போயிட்டா என்ன?...ஐயோ, என் நளினியைவிட்டுட்டு நான் எப்படிப்போவேன்?

இந்த சபலா சொல்றது ஒண்ணுக்கொண்ணு சம்பந்த மில்லாமெயிருக்கே. மாடிமேலே நிண்ணவ என்னைப் பாத்து ஆசைப்பட்டவமாதிரி சிரிச்சாளே — பூச் செண்டை கோபத்தோட எறிஞ்சமாதிரியே இல் லியே — எதுக்கும் போய்ப்பாப்போம். இதிலெ ஏதோ சூதிருக்கிண்ணு எம்புத்திக்கே நிச்சியமாத்தெரியுதே.

[ஓர்புறம் உட்காருகிறுன். மொட்டை வந்து அஸ்வ பாலன் சிந்தனையுடனிருப்பதைக்கண்டு அவனருகில் சென்று அன்புடன் விசாரிக்கிறுன்.]

**மொட் :**— என்னுண்ணே, ஒரு மாருதியா இருக் கியே?

**அஸ் :**—ஒண்ணுமில்லடா. —

**மொட் :** ரெண்டுநாளா நீ குருதைங்களெக்கூட கவனிக்கிறதேயில்லியே. —என்னமோ பித்துக்கொள் ளியாட்டமா உக்காந்துக்கிட்டிருக்கியே—ஏன்? அந்த... அவபேரென்ன? —அவதாண்ணே.—அந்த எழவுபேரு வாயிலே நொழையமாட்டேங்குது.—நல்லி, நல்லி. —

**அஸ் :**— (நகைத்து) என்னுது, நல்லியா?— நளினிடா —

**மொட் :**—ஆ, நழினி, நழினி—அவ ஞாபகம் வந் துடுச்சா?

**அஸ் :**— அவ ஞாபகம் இல்லாத நேரம் ஏதுடா? இன்னமே புதுசாவா வரப்போவுது? எப்பவூம் அவதா னேடா என் நெஞ்சுக்குள்ளாற இருக்கா.

**மொட் :—** ஓஹோ! மகாவிஸ்ணு மகாலச்சுமியை வச்சிருக்காரிண்ணு சொல்ருங்களே.— அந்தமாருதி நீயும் நெஞ்சிலேயே வச்சிருக்கே போலிருக்கு — அண்ணே, நெசமாச்சொல்றேன், ஒனக்கென்னவோ புடிச்சிருக்கு.

**அஸ் :—** போடா —

**மொட்:—**பின்னெ ஏன் இப்பிடி ஒக்காந்திருக்கே?

**அஸ் :—** இந்த வேலையையும், ஊரையும், தலே முழுவுறதுக்கு ஏதாவது வழியுண்டாண்ணு யோசிக்கிறேன்.

**மொட் :—** நமக்கெல்லாம் ஒரே வழிதாண்ணே சித்திரபுத்திரன்தான் காட்டணும். சர்தாண்ணே உட்டுத்தள்ளண்ணே. ஏந்திரு—ரெண்டு எலுமிச்சம் பழத்தை நல்லாத்தேச்சி பச்சதண்ணியிலே குளூர முழுவுஞ எல்லாஞ் சரியாப்போயிடும்.

**அஸ் :—** ஏண்டா, எனக்குப் பயித்தியம் புடிச்சிருக்கிண்ணு நெனச்சுக்கிட்டிருக்கியா? —

**மொட் :—**இல்லே.—கொஞ்சம் மூளேக்கோளாறு— ஆமா, ஏண்ணே, அந்த சபலா பொண்ணு இங்கே வந்துதாண்ணே?

**அஸ் :—** வல்லியே—ஏண்டா?

**மொட்:—** இல்லே.— ஒன்னெப்பாக்கணும்னு சொல்லிச்சி.

**அஸ் :**— எதுக்குடா ?

**மொட் :**— குருதை சவாரி பழவணுமாம்—

**அஸ் :**— (எழுந்து) அது கெடக்குதுடா.— மொட்டை, நான் இண்ணிக்கி ராத்திரி ஒரு எடத்துக்குப் போவணும்.— நீ எங்கேயும் போயிடாதே.

**மொட் :**— சாக்கடைப் புழுவுக்கு போக்கிடம் ஏதண்ணே ? — ஆமா, நீ எங்கே போறே ?

**அஸ் :**—ஏண்டா அபசகுனம் புடிச்சாப்பிலே கேட்டுத் தொலைக்கிறே? ஒரு எடத்துக்குப்போறேண்ணு அத்தோட விடேன்.

**மொட் :**— சரி உட்டுடு.

(அஸ்வபாலன் போகிறான்.)

—(தனக்குள்) எங்கே போவப்போறே—நல்லி ஊட்டுக்குத்தான் போவே.— போ–போ–அவ ஒன் உசிரைக்குடிச்சிட்டுத்தான் விடுவா.— எப்ப வர்றானோ என்ன எழவோ யார்கண்டா? வந்தாத்தான் நிச்சயம்.— லாயத்தைப்பூட்டிப்புட்டு நாம்பளும் ஊட்டுக்குப்போவலாம்.— (இடுப்பைத்தடவிப்பார்த்து) அட எழவே, சாவியைக்கொண்டுபோயிட்டாம்போலயிருக்கே.—ராத்திரி முழுக்கா முழிச்சிக்கிட்டில்ல இருக்கணும்—ரொம்பதூரம் போயிருக்கமாட்டான். ஒரே ஓட்டமாப்போயி சாவியெவாங்கிக்கிட்டு வந்துடலாம்.

(ஓடுகிறான்)

காட்சி முடிவு.

## களம் 2. காட்சி 6.

**இடம்** :— வீதி

**காலம்** :— முன்னிரவு

**பாத்** :— [மொட்டை, குள்ளன்]

(குறிப்பு) [மொட்டை ஓடிவந்து எதிர்ப்புறமாய் வந்தகுள்ளனை இடித்துக்கொண்டு போகிறான்]

**குள்** :— ஏய்யா, கண்ணு தெரியலே?

**மொட்** :—அடடே நீயா! இருட்டிலே தெரியலே. ஏண்டா தம்பி, குருதைக்காரய்யா ஒங்கூட்டுக்கு வந்துட்டாரா?

**குள்** :— யாரது?

**மொட்** :— அவுருதாண்டாப்பா, குருதைக்காரண்ணன்.—ஒங்க நல்லியம்மா புருசன்.

**குள்** :— அட போய்யா. – நான் யாரையும் பாக்கலே. எங்க வீடென்ன சோம்பேறி மடமிண்ணு நெனச்சுக்கிட்டியா?

**மொட்** :— அட வேறே ஒண்ணுமில்லடாப்பா. சாவி கொஞ்சம் வேணும், அதுக்கோசரந்தான்.

**குள்** :— என்னது, சாவியா?

**மொட்** :— ஆமா. –

**குள்** :— எங்கே போட்டே?

மோட் :— அட, எங்கேயும் போடலேடாப்பா. அவுருகிட்டயிருக்கு வாங்கணும்.

குள் .— அந்த ஆளுதான் நம்ப ஊட்டுக்குவந்து அஞ்சு நாளாவுதேய்யா.

மோட் :— அஞ்சு நாளாவுதா?— அப்பிடீண்ணு இப்போ ஊட்டுக்கு வல்லியா?

குள் :— கையிலே பசையில்லாதவருக்கு அங்கே என்னுய்யா வேலே?

மோட் :—அப்போ, எங்கேதான் போயிட்டாரு?

குள் :— என்ன?— எங்கே போயிட்டாரா? — பக்கத்து தெருவுலே ஜோஷியர் வீடு இருக்கு, ஒரு விராகன் தச்சணை வச்சுக்கேளு, சொல்லுவாரு.

மோட் :— சர்தாண்டாப்பா நிறுத்து—தெரியும். இந்த வாலுத்தனமெல்லாம் நம்பகிட்டவேண்டாம். நான் எம்பொண்டாட்டிக்கே பயப்படமாட்டேன் தெரியுமா?

குள் :— பின்னே என்னுய்யா—எங்கே போயிட்டாருண்ணு எனக்கா தெரியும்?

மோட் :— (தனிமொழி) என்னடாயிது! அரை நாழிகூட இருக்காது அதுக்குள்ளாற எங்கேதான் போயிட்டாரு? மாயமாயிருக்கே!— (குள்ளனைநோக்கி)

ஏண்டா தம்பி, நெசமாத்தாஞ் சொல்றியா? ஊட்டுக்கு வல்லே?

**குள் :—** இல்லே பொய்யி.— ஒங்கிட்ட சும்மா வெளையாண்டேன். அங்கேதான் இருக்காரு.

**மொட் :—** பாத்தியா, எனக்குத்தான் தெரியுமே. வேறே போக்கிடம் ஏது?

**குள் :—** ஆமா — யாரைக்கேக்கறே?

**மொட் :—** (கோபத்துடன்) அட, அவர் தாம்பா— குருதைக்காரண்ணன்.

**குள் :—** ஓ! குருதைக்கார அசுவபாலரா?

**மொட் :—** ஆமா — ஆமா.—

**குள் :—** அவரு அங்கே இல்லே —

[மொட்டை குள்ளனை அடிக்கப்போக, குள்ளன் ஓடிவிடுகிறான்.]

**மொட் :—** (தனக்குள்) அங்கே இல்லேண்ணு வேறே எங்கேதான் போயிருப்பாரு?— போறதுக்கு எடமில்லியே.— சரி— நல்லி ஊட்டுக்கே போயிப்பாத்துப்புட்டு வந்துடுவோம். இந்தக்குள்ளப்பய பொய் சொன்னாலும் சொல்லுவான். —

(ஓடிப்போகிறான்)

காட்சி முடிவு.

## களம் 2. காட்சி 7.

**இடம் :—** அந்தப்புரம்

**காலம் :—** நள்ளிரவு

**பாத் :—** [சபலா, மோகனா, அஸ்வபாலன்]

**(குறிப்பு)** [மோகனா அஸ்வபாலனின் வரவை எதிர்பார்த்தவண்ணம் குதூகலத்துடன் பாடிக்கொண்டிருக்கிறாள். சப்ரமஞ்சம் நன்கு அலங்கரிக்கப்பட்டு, மலர்கள் தூவப்பட்டிருக்கிறது]

### மோகனா.

சுகமிகு மதனிடம் சோபனம் பெறுவேன்
சோகமே கிடையாதினி மேலே
சோபனம் பெறுவேன் (சுகமிகு)

அகமும் புறமும் காதல் மயமே
அன்பாயவனே யெனதா ருயிரே
ஐங்கணை வேள் பயமே கெடநானே
சோபனம் பெறுவேன் (சுகமிகு)

விரைவினிற் தெரிசனம்
காணுமென் பாக்யம்
விதம் விதமா யின்பம்
விளைந்திடும் ஸ்லாக்யம்
வேறொரு பேரின்ப மேதே யீதே
சோபனம் பெறுவேன் (சுகமிகு)

[சபலாவும், அஸ்வபாலனும் வருவதைக்கண்டு மோகனு உள்ளே செல்கிறுள். — சபலா அஸ்வபாலன் கையைப்பிடித்து அழைத்து வருகிறுள். — அஸ்வபாலன் நடுங்கிக்கொண்டே வருகிறுன்.]

**சபலா :—** (ஓர் ஆசனத்தைக்காட்டி) இப்பிடியே உக்காரு, நாம்போயி மகாராணியெ கூட்டியாறேன்.

**அஸ் :—** பயமாயிருக்கே சபலா —

**சபலா :—** பயப்படாதே தைரியமாயிரு ...

**அஸ் :—** தைரியம் வரமாட்டேங்குதே —

(உட்காருகிறுன்)

**சபலா :—** சந்தர்ப்பத்தை அனுசரிச்சு நடந்துக்கோ. பயப்படாதே.

(போகிறுள்.)

**அஸ் :—** (தனக்குள்) நடக்கிற மரியாதையெப் பாத்தா, விஷயம் ஒண்ணும் புரியலேயே—(நாற்புறமும் பார்த்து) அடாடா எவ்வளவு அழகாயிருக்குது இந்த எடம்.— பொறந்தா மகாராணியாப் பொறக்கணும்; ஊம் — நமக்குக்குடுத்து வச்சது குதிரைக்கொட்டடி தான்.— (பெருமூச்சுவிட்டு) ஆஹா! இந்தமாதிரி எடத்திலே நானும் நளினியும் உல்லாசமாயிருந்தா.... ஊம் — மொடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டாப்பிலேதான்.— ஒரு நாழி முந்திப்பொறந்திருந்தா ராசாவாப் பொறந்திருப்பேண்ணு சொல்றுங்க. —



அஸ்வபாலனுக நடிக்கும் மாஸ்டர் T. K. ஷண்முகம்.

ராணிவந்து என்ன கேக்கப்போருளோ தெரியலியே. என்ன பதில் சொல்றது? — எழவு நெஞ்சு பட பட ண்ணு அடிச்சிக்குதே.— தைரியமாயிருக்கணும்.— பயங்கொள்ளித்தனத்தைக் காட்டப்படாது.—உசிரு தானே போவும்...ஆறிலேயுஞ்சாவு, நூறிலேயுஞ்சாவு.

[தைரியமாய் உட்கார, மோகன புன்சிரிப்புடன் வரு கிருள். அஸ்வபாலன் திடுக்கிட்டெழுந்து கரங் கூப்பித்தொழுது, நடுக்கத்துடன் நிற்கிருன்.]

**மோக:—** ஏன் எழுந்துவிட்டீர்? சும்மா உட் காரும். என்னயிருந்தாலும் நீர் ஆண்பிள்ளையல்லவா— மற்றவர் முன்னிலையில் மரியாதைவேண்டியதுதான். இங்கு நாமிருவரும் தனியாகத்தானே இருக்கிறோம்.

**அஸ்:—** (பயத்துடன்) இல்லே—சபலா...

**மோக:—** சபலா இனியிங்கு வரமாட்டாள். நான்தான் உம்மையிங்கழைத்து வரச்சொன்னேன். நீர் செய்த குற்றத்திற்கு உம்மை எப்படி தண்டிக்க வேண்டுமென்பது எனக்குத்தெரியும்.— ஏன் என்ன யோசனை?

**அஸ்:—** யோசனெ ஒண்ணுமில்லே...

**மோக:—** பின்பென்ன? ஏனிப்படி நடுங்குகிறீர்? சும்மா உட்காரும்.

**அஸ்:—** எனக்கு ஒண்ணும் புரியலேயே—மயக் கம் வரும்போலயிருக்கு.

**மோக :—** (நகைத்து) அடேயப்பா, ஊரிலுள்ள, பெண்களையெல்லாம் நீர் மயங்க வைக்கிறீர்—உமக்கு மயக்கம் வேறு வருகிறதா?—மஞ்சத்தில் சயனித்துக் கொள்கிறீரா?—

**அஸ் :—** குடிக்கிறதுக்கு—கொஞ்சம்—தண்ணி வேணும்.—

**மோக :—** பால் சாப்பிடுகிறீரா?

**அஸ் :—** பால்சாப்பிட்டு பழக்கமில்லே.—

**மோக :—** பழக்கப்படுத்திக்கொள்ளுமே—

[ஓர் கிண்ணத்தில் பாலை வார்த்து அஸ்வபாலனிடம் கொடுக்க, அஸ்வபாலன் சிறிது குடித்துவிட்டு, கிண்ணத்தைக் கீழே வைக்கிறான்.]

— இப்பொழுது எப்படியிருக்கிறது?—

**அஸ்:—** (அழுதவண்ணம்) மகாராணி, எம் மேலே ஒரு குத்தமுமில்லே— நான் வேணும்னு சிரிக்கலே—எப்படியோ சிரிச்சுட்டேம்போலயிருக்கு.— —அடிமையெ மன்னிக்கணும் மகாராணி—தண்டனை...

**மோக :—** (இடைமறுத்து) ஊம், உம்மைத்தண்டிப்பது ஞாயமில்லை. உமக்கு இந்த அழகைக்கொடுத்த அந்த பிரம்மாவைத்தான் தண்டிக்கவேண்டும்.—

[அஸ்வபாலனை ஆசையுடன் பார்க்கிறாள்—அஸ்வபாலன் மோகனாவின்உள்ளக்கருத்தைதஒருவாறுபுரிந்து கொள்கிறான்.]

அஸ் :— (அசட்டுச்சிரிப்புடன்) இப்பத்தான்... எனக்கு விஷயம் ஒரு மாதிரியா புரிஞ்சுக்கிட்டே வர்ருப்பிலேயிருக்கு.— ஆமா, மொட்டைகூட நான் ரொம்ப அழகின்னுதான் சொன்னுன்—

மோக :— விஷயம் புரிந்ததா?— மிகவும் சாமர்த்தியசாலி நீர். எப்படியோ உண்மையைக் கண்டுபிடித்துவிட்டீரே.—

அஸ் :— சப்லா என்னே ரொம்ப பயமுறுத்திட்டா—

மோக :—ஊம்-ரொம்பவும் பயந்துவிட்டீரா? மந்திரவாதியைக் கூப்பிடட்டுமா பயத்துக்கு மந்திரம் போட?

அஸ் :— இல்லே வேண்டாம்.—மகாராணி—

மோக :— சீச்சீ, அதெல்லாம் அந்தப்புரத்திற்கு வெளியில்; இங்கு சாதாரண மோகனுதான்.

அஸ் :— இருந்தாலும் நீங்க இந்தமாதிரி எம்மேலே பழி போடக்கூடாது மகாராணி—நீங்களே பாத்து சிரிச்சுப்புட்டு நான் சிரிச்சேண்ணு சொல்லிட்டிங்களே—மகாராணியாயிருந்தா என்ன வேணும்னு லும் சொல்லலாம் போலிருக்கு — நான் சபலா சொன்னதை உண்மையின்னே நெனேச்சுட்டேன்—.

மோக:— இப்பொழுதென்ன பொய்யைக்கண்டுவிட்டீர்?—மகாராஜா வரட்டும், உம்முடைய திருட்டுத்தனத்தையெல்லாம் வெளிப்படுத்துகிறேன்.

அஸ் :— (நிமிர்ந்துநின்று) நான் திருடியிருந்தாத் தானே பயப்படணும்?

மோக:— திருடவில்லையா?— பெண்களுடைய மனதையெல்லாம் வெகு சுலபமாய் கொள்ளையடித்து விடுகிறீரே—வரட்டும் மகாராஜா.

அஸ் :— (தைரியமாய்) வரட்டுமே— உஜ்ஜயினி எளைய மகாராணியே எம்பக்கத்திலே இருக்கும்போது எனக்கென்ன பயம்?

மோக :— பயமில்லையா?—

அஸ்:— கொஞ்சங்கூட இல்லே—

மோக:— உண்மையாகவா?— சரி, நீர் செய்த காரியத்திற்கு நானே தண்டனை கொடுத்தால்?

அஸ்:—சந்தோஷமா வாங்கிக்கிறேன். ஒலகமே சத்தி மயமிண்ணு சொல்றுங்க, நாங்கல்லாம் சத்திக்கு அடிமைங்கதானே.—

மோக :— சரி, என் உத்திரவு—கண்களை மூடும்.

அஸ் :— யார் கண்ணை மூட?

மோக :— உமது கண்களை.—

அஸ்:— நான் ஒங்க கண்ணைத்தான் மூடச்சொல் றீங்களோண்ணு பாத்தேன்.

மோக :— திறக்கக்கூடாது —

[அஸ்வபாலன் தன் கண்களை மூடிநிற்க, மோகனு அவன் பின்புறம் வந்து அவனை முத்தமிடுகிறுள். அஸ்வபாலன் மோகனுவை அணைத்துக்கொள்கிறுன்]

## அஸ்வபாலன்–மோகனு–தர்க்கம்

அஸ் :— அமுதுறை வாயால் முத்தம் தந்தாயே
ஆனந்தம் ராணி
அன்பே உயிரே அடைக்கல மானேன்
அதிமோகன ராணி —

மோக:—அறிவீரென் தண்டனே யீதாகும்

அஸ்:— அடிக்கடி தரவேணும்

மோக:—பிரியா திருப்பீரோ யென் துரையே

அஸ்:— பெரும் பாக்கியம் ராணி

மோக:—பேதமில்லாத காதலினுலே
பிணைத்தீ ரெனைத் தானே

அஸ்:— பேரின்பம் ராணி
பிர்ம்மானந்தம் தேவேந்திர மெய்ப்
போகந்தான் ராணி (அமு)

ராஜகுமாரன் ஆனேனே
ரதிநீ மதன் நான்தானே

மோக:—நறுமா மலரும் மணமும் போலே
நாமிருப்போம் தானே

அஸ்:— நகமும் சதையும் போலிரு பேரும்
நாயகி வாழ்வோமே

அஸ்:— பேரின்பம் ராணி —
பிர்ம்மானந்தம் தேவேந்திர
மெய்ப் போகந்தான் ராணி (அமு)

காட்சி முடிவு.

## களம் 2. காட்சி 8.

**இடம்:—** *அரண்மனையிலோர்புறம்.*

**காலம்:—** *காலை.*

**பாத்:—** [*முருகன், தாத்தா, மொட்டை*]

(குறிப்பு) [*முருகனும், தாத்தாவும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.*]

**முரு:—** *என்ன தாத்தா, அரமனை பூராசிரிப்பாச் சிரிக்கிது —ஒனக்கு ஒண்ணுந்தெரியாதிங்கறே?*

**தாத்:—** *நாந்தான் எதையுமே காதிலே போட்டுக்காமே மூலேலே விழுந்துகெடக்கிறவனுச்சேப்பா.*

**முரு:—** *அப்பொ, ஒனக்கு விசயமே தெரியாதா?*

**தாத்:—** *கெணத்துத் தவளைக்கு நாட்டுவளப்பம் என்னாத்துக்கிடாப்பா? அரமனையிலே பலதும் இருக்கும். அந்த வம்பெல்லாம் நம்பளுக்கென்னத்துக்கு?*

**முரு:—** *அட போ தாத்தா. கேட்டா வேதாந்தம் பேசுறே. எந்த சமாச்சாரத்தையும் தெரிஞ்சி வச்சிக்கிறது நல்லதுபாரு.—*

**தாத்:—** *என்ன எழவு சங்கதி? சொல்லித்தொலையேன்.—*

**முரு:—** *அதாந்தாத்தா—அந்தக்குட்டியில்லே—சபலா—*

**தாத்** :— யார்ரு அது? புதுப்பேராயிருக்கு— சபலா.—

**முரு** :— அவதாந்தாத்தா, எளெயராணியம்மா கூடவல்லே?— ஒருகுட்டி...

**தாத்** :— ஓஹோ! அந்த செவத்தக்குட்டியா?— ஆமா, அவளுக்கென்ன?

**முரு**:—(மெதுவாக) அந்தக்குட்டி ராத்திரி நேரத்திலே நம்ப லாயத்துக்கு போக்குவரத்து வச்சிக்கிட்டிருக்குதாம்.

**தாத்** :— (சுற்றுமுற்றும் பார்த்து) டே, தம்பி, பகல்லே பக்கம் பாத்துப்பேசு — ராத்திரி அதும் பேசாதேம்பாங்க. எளெய ராணிக்கு அந்தக்குட்டி மேலே ரொம்பப் பிரியமாம். மொள்ளமாப்பேசு நல்லாத்தெரிஞ்சுகிடாமே ஒண்ணும்ஒளறிவைக்காதே

**முரு**:— என்ன தாத்தா, நான் தெரியாதெ சொல்லுவனு? நேத்து ராத்திரி அந்தகுட்டி லாயத்துப்பக்கம் போனதை இந்த ரெண்டு கண்ணுலே பாத்தேண்ணு.—

**தாத்** :— இருக்கும், இருக்கும்...நம்ப குருதைக்கார அண்ணன்தான் அருச்சுனன் ஆச்சேப்பா. அவன் அதிஸ்டம் தூண்டி போடாமேயே மீனு ஆப்புடுது. அவன் என்னு பண்ணுவான்?

**முரு**:—(தூரத்தில் மொட்டைவருவதைக்காட்டி) தாத்தா, அதோ மொட்டை வர்ருன். இவனும் உள்

ளாளாத்தான் இருக்கணும்.

(மொட்டை வருகிருன்)

**தாத்** :— வாடாப்பா மொட்டை, சௌக்கியமா?

**மொட்**:—இருக்கேன்...ஒங்க புண்ணியத்திலே...

**முரு** :— (கண் சிமிட்டிக்கொண்டு) அவனுக்கென்ன தாத்தா, சரியான கெண்டை மீனு வந்து வலையிலே உளுந்திருக்கு — இப்பொக்கண்ணுகூடத்தெரியாது.

**மொட்**:— என்னண்ணே கேலிபண்றே.—

**முரு**:— எதுக்கும் குடுத்துவைக்கணும்—

**மொட்** :—என்னண்ணே சொல்றே? ஒரு எழவும் புரியலையே—

**முரு** :— புரியாது—எப்படிப்புரியும்?

**தாத்** :—ஏண்டாப்பா மொட்டை, என்ன ரவசியம்இருந்தாலும் எங்கிட்டச்சொல்லிப்புடுவியே—இந்த முக்கியமான விசயத்தை மறைச்சுட்டேபாத்தியா?

**மொட்** :— (கோபத்துடன்) தாத்தா, இனிமே எனக்குக்கோவம் வரும் பாத்துக்கோ.

**முரு** :— ஆமா—வரத்தான் செய்யும்—எடம் பெரியஎடமில்லியா...

**மொட்** :— என்னண்ணே, விசயத்தைச்சொல்லாமெ பேசிக்கிட்டே போறே—

**தாத் :—** என்னடாப்பா விசயம்—பூனை கண்ணை மூடிக்கிட்டு ஒலகமே இருட்டிப்போச்சிண்ணு நெனச்சுக்குமாம். அதைப்போலயிருக்கு உன்சங்கதி.— அந்தக்குட்டி சபலாவுக்கு ராத்திரி வேளையிலே லாயத்துப்பக்கம் என்னடாப்பாவேலே? சொல்லேன்.

**மொட் :—** பாத்தியா, நான் அண்ணிக்கே நெனைச்சேன். நம்ப குருதைக்கார அண்ணனுலே எந்தலே கெடந்து உருளுது.

**தாத் :—** அப்பொ, ஒனக்கு இதிலே சம்பந்தமே இல்லியா?

**முரு :—** இவன் உள்ளாளு தாத்தா —

**தாத் :—** இருடா, பாவம்—அப்பாவியெப்புடிச்சிக்கிட்டு மொரட்றே...மொட்டே, அப்பொ அசுவ பாலந்தான்...

**மொட் :—** அப்பிடித்தான் இருக்கும். இந்தப் பொண்ணு அண்ணிக்கொருநா வந்து குருதை சவாரி பழகணும்னு சொல்லிச்சு. நானும் சர்தாண்ணு நம்பிட்டேன். கடைசிலே பாத்தா, விசயம் இந்தமாருதி நடக்கிருப்பிலேயிருக்கு—நாந்தான் ராத்திரி ஊட்டுக்கு போறவனுச்சே—இங்கே லாயத்திலே அண்ணன் ராசாங்கம்தான் போலயிருக்கு.

**தாத் :—** ஊம்—நடக்கட்டும், நடக்கட்டும். யாரு ஊட்டு மொதலு போவுது? போயிக்காரியத்தைப்

பாருங்கடாப்பா. விசயம் நம்பளோடயிருக்கட்டும்.— போங்க, போங்க—மொட்டே, சாக்கிரதையா நடந்துக்கடாப்பா.

[முருகனும், தாத்தாவும் ஓர்புறம்செல்ல, மொட்டை மற்ருெருபுறம் செல்கிருன்.]

காட்சி முடிவு

## களம் 2. காட்சி 9.

இடம் :— லாயத்துக்குப்போகும் வழி.

காலம் :— நடுப்பகல்.

பாத் :— [அஸ்வபாலன், மொட்டை]

(குறிப்பு) [அஸ்வபாலன் குதூகலத்துடன் பாடிக் கொண்டு வருகிருன்]

### அஸ்வபாலன்.

ராஜாங்க யோகந் தானே
நானே இன்றே கொண்டேனே (ராஜாங்க)

கூசாதென் மனம்போல் நடப்பேனே
கொடுத்திட ராணியும் கிடைத்தனள் தானே
கோடி புண்யம் செய்தேனே (ராஜாங்க)

(தொகையறு)

இனிதான சிற்றின்ப
முடிவே காண்பேனே

இரவுபகல் நளினியை
என்னிடம் காண்பேனே
(பாட்டு)
இடியாம் வறுமை யற்றேனே
முடிசூடா மன்னன் நானே (ராஜாங்க)

[மொட்டை, அஸ்வபாலனின் ஆர்ப்பாட்டத்தைக்கவனித்துக்கொண்டே ஓர்புறமாய் செல்கிருன்.]

அஸ் :— (அதிகாரத்துடன்) டே மொட்டை, காலா காலத்திலே லாயத்துக்கு வறதுக்கென்னடா? இஸ்டம்போலதான் வேலைக்கு வர்றதோ?

மொட் :— (சிரித்துக்கொண்டே) சர்தாண்ணே—

அஸ் :— என்னடா—ஐயா கேக்கிறேன், சர்தாண்ணு அலச்சியமாப் பதில் சொல்றியே.—

மொட் :— அட எழவே, என்ன இந்த வெரட்டு வெரட்றே?—மஞ்சவெரட்டு வெரட்ருப்பிலே...

அஸ் :— டே, இண்ணிக்கு எல்லாவேலையெயும் நீதான் செய்யணும்.

மொட் :— ஏண்ணே?

அஸ் :—ஐயா நளினி ஊட்டுக்குப்போருரு தெரியுமா?

மொட் :— நீ நல்லி ஊட்டுக்குப்போனு என்ன? பல்லி ஊட்டுக்குப்போனு என்ன? நம்பளாலே முடியாதண்ணே—ஒன் வேலையெ நீதான் செய்யணும்.

**அஸ் :—** (அதட்டலுடன்) என்னடா சொன்னு எதித்துப் பேசுறே?

**மொட் :—**(அலட்சியமாக) சர்தாம் போண்ணே—நீ சம்பளம் வாங்கலே? ஒஞ்சம்பளத்தை எனக்கா குடுத்துட்டே?

**அஸ் :—** போடா, பொல்லா சம்பளம்—பேர்ச் சம்பளம்.

**மொட் :—** (அருகில் நெருங்கி புன்சிரிப்புடன்) ஆமா, என்னண்ணே ரெண்டுநாளா ஒம்பாடு ஒரே அமக்களமாயிருக்கே! புது உடுப்பு, புது தொப்பி, புது நடை,— ஏதண்ணே பணம்?

**அஸ் :—** அதெல்லாம் வருண்டா.—டே, நான் நளினி ஊட்டுக்குப் போறேன். என் வேலெயெயும் நீ செய்தேண்ணு எஞ்சம்பளத்திலே பாதி ஒனக்குக் குடுப்பேன்—என்ன—சம்மதமா?

**மொட் :—** நான் வேணும்னு செய்யிறேன் இதுக் கோசரம் நீ ஒண்ணுங்குடுக்கவாணும். எப்பிடியாச்சும் நீ சந்தோசமாயிருந்தா சர்தான். ஆனு ஒண்ணு—இந்தப்பணமெல்லாம் ஏதண்ணே? எங்கிட்டப்பொய் சொல்லாதே.— எங்கேயாச்சும் பொதையல் கிதையல் கெடைச்சுதா? எனக்குங்கொஞ்சம் குடண்ணே.—

**அஸ் :—** அதெல்லாம் ஒண்ணுமில்லடா. ரொம்ப நாளா சம்பளத்தைச்சேத்தி வச்சிருந்தேன். இப்பத்

தான் செலவு செய்யணும்னு தோணிச்சி. எடுத்து சாமாரியா உட்றேன் —

**மொட் :**—(கேலியாக) டுர்...என்னண்ணே, நம்ப கிட்டயே சாடு உட்றியே—நீதான் வாங்கிற பணத்தை யெல்லாம் அந்த மகாபத்தினி நல்லிகிட்டக்குடுத் துட்டு சமயத்திலே சோத்துக்குத்திண்டாடுவே — நாங்குடுத்திருக்கேன் ஒனக்கு எத்தினியோவாட்டி பணம்.— நம்பகிட்டயே கதை அளக்கிறியே — என் ணண்ணே...

**அஸ் :**— டே, நீ ஒருநாளு நான் ரொம்ப அழகா யிருக்கேண்ணு சொன்னியே. அது நெசந்தாண்டா. இப்பத்தான் தெரிஞ்சுது.

**மொட் :**— ஏன்? புதுசா கண்ணாடி வாங்கிப்பாத் தியா? — இல்லே, யாராச்சும் சொன்னாங்களா?

**அஸ் :**— பெரிய எடத்திலேயெல்லாங்கூட அப் பிடித்தான் சொல்றாங்க.

**மொட் :**— யாரண்ணே சொன்னாங்க?

**அஸ்:**—மொட்டை,விசயம் வேறேயிருக்குதுடா- சொல்றேன். நீ ஒத்தர் கிட்டயும் சொல்லப்படாது.

**மொட்:**— நான் ஏண்ணே சொல்லப்போறேன்? எங்கிட்ட ரவசியம் சொன்னா கெணத்துக்குள்ளாற கல்லைப்போட்டமாருதி.

**அஸ்:**— அரமனையிலே ஒரு மோகினிப்பிசாசு ஐயாவைப்புடிச்சிருக்குது. அது குடுக்குதுடா.

மொட்:— பாத்தியா, வந்துட்டியே வழிக்கி — எல்லாரு தலேக்கும் குல்லா தைக்கிறமாருதி நம்ப தலேக்குங்குல்லாதைக்கிறியே—நம்பதலேபெரிசண்ணே.

அஸ்:— நெசத்தைச் சொல்லட்டுமாடா?—

மொட்:— சொல்லண்ணே — ஒஞ்சத்தியமா நான் ஒத்தருகிட்டயும் சொல்லமாட்டேன்.

அஸ்:— ஒரு பணக்காரக் குட்டியைப் புடிச்சிருக் கண்டா.—

மொட்:— எங்கே?

அஸ்:— அரமணேயிலே —

மொட்:— அப்பிடிச்சொல்லு — முந்தியே நெனேச் சேன். ஒன் அழுவுக்கு எவதாண்ணே குடுக்கமாட்டா?— ஒங்கண்ணிலே காந்தம் இருக்கு—தெரியுமா?—

அஸ்:—டே, நான் நளினி ஊட்டுக்குப்போறேன் லாயம் பத்திரம் —

மொட்:— நான் பத்திரமாத்தான் இருக்கேன் — அண்ணே, ஒன்முதுவு பத்ரம். —

அஸ்:— போடா — (போகிறான்)

மொட்:— சரி உட்டுடு...

(மற்றோர்புறம் செல்கிறான்)

காட்சி முடிவு.

## களம் 2. காட்சி 10.

**இடம் :—** நளினி வீடு.

**காலம் :—** மாலே.

**பாத் :—** [குள்ளன், அஸ்வபாலன், நளினி, இளனி, தாய்க்கிழவி]

(குறிப்பு) [குள்ளன் ஓர்புறம் நிற்க, அஸ்வபாலன் கையில் மூட்டையுடன் விரைந்து வந்து உள்ளேசெல்ல முயல்கிறான்]

**குள் :—** எங்கேங்க ரொம்பஅவசரமா?— பையன் இங்கே இருக்கிறது தெரியலேபோலிருக்கு. ஓஹோ ண்ணும்—

**அஸ் :—**போடா, யாரைடா மறிக்கிறே? கண்ணு தெரியலேயோ?

**குள் :—** ரெண்டுகண்ணேயும் நல்லாத்தொறந்து தான் பாக்கறேன். குருதைக்கார ஐயாதானுங்களே?

**அஸ் :—** ஆமாங்க—

**குள் :—** ஒங்களுக்கு ஓடத்தெரியுமா?

**அஸ் :—** ஏண்டா?

**குள் :—** இதான்வழி, நேரே உடுங்க சவாரி.

**அஸ் :—** போடா, ஐயா நகையோட வந்திருக்காரு—விசயந்தெரியாமே வெரட்றியே—

**குள் :—** அட, சர்தாம்போங்கையா, அந்தப்

பாச்சா இந்தப்பையன்கிட்ட பலிக்காது. வேறே ஆளைப்பாரு.

**அஸ்:**— (மூட்டையிலிருக்கும் நகைகளைக்காட்டி) இதோ பார்ரு—

**குள்:**— (வியப்புற்று) சாமி, சாமி, வாங்க— அம்மா, ஐயா வந்திருக்காங்க பாருங்க.

(இளனி ஓடி வருகிறுள்.)

**இளனி:**— அத்தான், வாங்கத்தான். எப்பொ வந்திங்க? ரொம்பநாளாக் காணமே. அக்கா அழுதுக் கிட்டேயிருக்கா— அக்கா, அக்கா, அத்தான் வந் திருக்கிருரு பாரு—

(நளினி வருகிறுள்)

**நளினி:**—ஆமா, அத்தானுமாச்சு, பொத்தானு மாச்சு.

**அஸ்:**—(நகைகளைக்காட்டி)நளினி,இங்கேபாருடி. அப்புறம் பேசு.

**குள்:**—நான் போயி பாட்டியைக்கூட்டியாறேன்.

(ஓடுகிறுன்)

**நளினி:**— (வியப்புடன்) இதெல்லாம் ஏது? எங் கேயாவது திருடிக்கிட்டு வந்துட்டிங்களா? நெசத்தைச் சொல்லுங்க—அப்புறம் என்னையும் தொந்திரவிலே மாட்டிடாதேங்க.

அஸ்:— வாயை மூடுடீ. இன்னொருதரம் அப்பிடிச் சொல்லாதே. எனக்கென்ன அந்தஸ்தில்லையா?— யோக்யதையில்லையா?— இதை வாங்க சக்தியில்லையா?

நளினி:—(நகைத்து) அட எழவு ஜம்பமே, ஒங்க யோக்யதைதான் ஊரறிஞ்சதாச்சே. நெஜத்தைச் சொல்லுங்க.

அஸ்:— அடியே, இனிமே ஐயாவை ரொம்ப மரியாதையா பேசணும். தெரியுமா? என் உத்தியோகமெல்லாம் ரொம்ப ஒசந்திருக்கு. நீ எது கேட்டாலும் வாங்கித்தருவேன்.

நளினி:— எனக்கு?

அஸ்:— ஒனக்குந்தாண்டி. இனிமே ஐயாவை அஸ்வபூபதிண்ணுதான் கூப்பிடணும்.

நளினி:— அதெல்லாம் முடியாது நான் அத்தாண்ணுதான் கூப்பிடுவேன்—பூபதிண்ணு ராஜாண்ணு அர்த்தம். நீங்க எந்த ஊருக்கு ராஜாவாம்?

அஸ்:—ஏண்டி, ஊர் இருந்தாத்தான் ராஜாண்ணு கூப்பிடணுமோ?

நளினி:—நான் குதிரைக்கொட்டகை மகாராஜாண்ணு வேணும்ணு கூப்பிட்றேன். சம்மதமா?

அஸ்:— தங்கம், நீ உன் வாயாலே எப்படிக்கூப்பிட்டாலும் சரிடீ.

### அஸ்வபாலன்–நளினி–இளனி–தர்க்கம்.

அஸ்:— நான் – செல்வக் குபேரன்
ரொக்கம்—சேர்ந்த கைக்காரன்
ஆனேன்— (செல்வ)

நளினி:— க்ஷேமமா சாமீ—உம்மைத்
தேடினேன் காமீ –
கோமள நகைகள்—கண்
குளிரக் கண்டேனே

அஸ்:— சிறந்த வைரம்பொன்–இன்னும்
தேவை யென் சொல்வாய்

இளனி:— சிகப்பு வெள்ளை – நீலம் பச்சை
ஜிலு ஜிலென் குதே— (நான் செல்வ)

அஸ்:— இஷ்டப்படி இனி நடப்பாயா
இலை—இத்தனைநாள் போலவே யென்
சொற் கடப்பாயா

நளினி:— இவ் – வேழை நின்னடிமை

இளனி:— இந்த – இளனியும் அடிமை

அஸ்:— இனி–ஏகபோக மோக சொர்க்க
லோகமுன் வீடே (நான் செல்வ)

**நளினி:**— ஆமா, இதெல்லாம் எப்படி வந்துது ண்ணு எங்கிட்ட நெஜத்தை சொல்லமாட்டிங்களா?

**அஸ்:**— அதெல்லாம் ஒண்ணும் கேக்கப்படாது. வேணுமிங்கிறதை வாங்கிக்கோ. "சக்தி" எங்கை யிலேயிருக்கா.

**நளினி:**— ஒண்ணுந்தப்புதண்டா வாராதே—

**அஸ்:**— போடி பைத்தியமே. ஒனக்கு ஏதாவது கஷ்டம்வந்தா, நான் என் உசிரைக்குடுக்கமாட்டனுடி?

**நளினி:**— (தழுவிக்கொண்டு) அம்மாடி, ஒங்க உசிரு போயிட்டா, அப்புறம் நான் உசிரோடயிருக்கவா?— (இளனியை நோக்கி) போடீ அத்தானுக்கு வெந்நீர் போடச்சொல்லு. நிக்கிறியே —

[இளனி உட்செல்கிருள்—குள்ளன் தாய்க்கிழவியை யழைத்துக்கொண்டு வருகிருன்]

**தாய்:**— வாங்க மாப்பிள்ளே, வாங்க—

**நளினி:**— அம்மா, நகையெப் பாத்தியா!

**தாய்:**— அது கெடக்குடீ. நகையா பெரிசு? எப்பிடியோ ஆளுவந்து சேந்துதே. (குள்ளனே நோக்கி) போடா, போயி பாலு வாங்கிட்டுவா.

(குள்ளன் செல்கிருன்)

**தாய்:**— என்னுங்க மாப்பிளே, சின்னஞ்சிறிசு ஏதாவது தெரியாமெ ஒளறிஞ, இப்படியா வராமெ இருந்துட்றது?—(நளினியை நோக்கி) என்னடி நகையைப்பாத்துக்கிட்டிருக்கே. போடீ, போயி பலகாரம் கொண்டாடி.— என்னுங்க மாப்பிள்ளே, மூந்தி ஒடம்பிலே பாதிகூட இல்லியே. துரும்பாப் போயிட்டேங்களே.

**அஸ்:**— இன்னமே எல்லாம் சரியாப்போகும்

அத்தே. இப்பத்தான் சுக்கிரன் ஐயாவைக்கடைக் கண்ணுலே பாத்திருக்கான் —

**தாய்:**— வாங்க, வாங்க, பலகாரம் சாப்பிடுங்க — (உட்செல்கிறார்கள்)

காட்சி முடிவு.

## களம் 3. காட்சி 1.

**இடம் :**— அந்தப்புரம்.

**காலம் :**— மாலே.

**பாத் :**— [மோகன, பர்த்ருஹரி, காவலர்கள், சபலா.]

(குறிப்பு) [இரண்டு வேலையாட்கள் ஓர் "மான் குட்டி"யைப் பிடித்தவண்ணம் நிற்கிறார்கள். பர்த்ருஹரி அருகில் நின்றுகொண்டிருக்கிறான். மோகன ஓர்புறம் விலகி நிற்கிறாள்.]

**மோக:**— (பயந்தவள்போல்) ஐயோ, கடித்து விடப்போகிறது நாதா.

**பர்த்:**— (புன்சிரிப்புடன்) உனக்காகத்தானே கொண்டுவந்தேன்.

**மோக:**— எனக்குவேண்டாம் பயமாயிருக்கிறது, கொண்டுபோகச் சொல்லுங்கள். குட்டியாயிருந்தாலும் பரவாயில்லே.

**பர்த்:**—குட்டி தானேயிது — ஒன்றும் செய்யாது. நீ வேண்டுமானால் தொட்டுப்பாரேன்.

**மோக:**— ஊஹூம், எனக்குப் பயமாயிருக்கிறது.

**பர்த்:**— கடிக்காது மோகனா;

**மோக:**—உங்களுக்குத்தெரியும் கடிக்காதென்று. எனக்கும் தெரியும். அதற்குத் தெரியவேண்டுமே —

**பர்த்:**—(நகைத்து) இவ்வளவுதானா உன் தைர்யம்?

**மோக:**—என் தைரியத்தை இதில்தான் பரீட்சை பார்க்கவேண்டுமாக்கும்?

**பர்த்:**— (வேலையாட்களை நோக்கி) சரி, கொண்டு போங்கள்.

[இருவேலையாட்களும் மான்குட்டியைப்பிடித்துச் செல்கிறார்கள். பர்த்ருஹரி மோகனாவை அணைத்த வண்ணம் மஞ்சத்தில் அமருகிறான்.]

**பர்த்:**— எப்பொழுதும் அந்தப்புரத்திலேயே அடைபட்டிருப்பதால்தான் இந்த மான்குட்டியைக் கூடக்கண்டு பயப்படுகிறாய். வேட்டைக்கு என்னோடு வந்து அங்கு நடக்கும் கோரங்களையெல்லாம் பார்த்திருந்தால் இப்படி பயப்படமாட்டாய்.

**மோக:**— நான் பார்க்கவே வேண்டாம். நீங்கள் பார்ப்பதே போதும் — பாவம், எத்தனை மிருகங்களை கொன்றீர்களோ; அவைகளெல்லாம் உங்களை நன்றாய் சபித்திருக்கும்.

**பர்த்:**—அதற்கென்ன செய்வது? பல நன்மைகளை முன்னிட்டு சில ஜீவன்கள் மடியவேண்டியதுதான்.

**மோக:**—எனக்கென்னவோ தாங்கள் போனதிலிருந்து மனதிற்கு சந்தோஷமேயில்லை. இரவில் தூக்கமே கிடையாது — இதோ கண்கள் சிவந்திருப்பதைப் பாருங்கள்.—

**பர்த்:**— கண்ணே, நீ எந்த நிலைமையிலிருக்கிறாயோவென்றே எனக்குக் கவலையாயிருந்தது. வேட்டையில்கூட மனம் செல்லவில்லை. சதா உன்ஞாபகம் தான்—(மஞ்சத்தின்மீது சாய்ந்து)—அப்பா, மிகவும் களைப்பாயிருக்கிறது.

[மோகனா விசிறியெடுத்துவந்து மெதுவாக விசிறுகிறாள்.]

**பர்த் :**—(தடுத்து) போதும்; பூவினும் மெல்லிய உனது கரங்கள் நோகப்போகிறது — சயனித்துக் கொள்—

(மோகனா மற்றோர் மஞ்சத்தில் சயனிக்கிறாள்.)

—"**நள்ளிரவு**"—

[பர்த்ருஹரி நன்றாக நித்திரை செய்கிறான். மோகனா எழுந்து மெதுவாக கையைத்தட்ட சபலா உள்ளே வருகிறாள். மோகனா தன் மஞ்சத்தில் சபலாவைப்படுக்கவைத்து, சால்வையால் போர்த்திவிட்டு, மெதுவாக வெளியே செல்கிறாள்.]

காட்சி முடிவு.

## களம் 3. காட்சி 2.

இடம் :— *அரண்மனைத்தோட்டம்.*

காலம் :— *நடு இரவு.*

பாத் :— *மோகனா.*

(குறிப்பு) [*மோகனா விரைந்து செல்கிறாள்*]

மோக:— (*தனக்குள்*) *அப்பா, அந்தமட்டும் வர முடிந்ததே—சனியன் இன்னும் பத்துநாள் கழித்து வந்து தொலையக்கூடாதா – அவர் எனக்காக வந்து காத்துக்கொண்டிருக்கிறாரோ, போய்விட்டாரோ தெரியவில்லையே —*

[*போகும் வழியில் ஓர் " கருநாகம் " குறுக்கிடுகிறது. மோகனா "சீ, சனியனே" என்று கூறிக்கொண்டே அதன் வாலைப்பிடித்துச்சுழற்றி வீசியெறிந்துவிட்டு விரைந்து செல்கிறாள்*]

*காட்சி முடிவு.*

## களம் 3. காட்சி 3.

இடம் :— *கொடி வீடு.*

காலம் :— *நடு இரவு.*

பாத் :— [*அஸ்வபாலன் மோகனா*]

(குறிப்பு) [*அஸ்வபாலன் நிலவொளியில் மோகனாவின் வரவை எதிர்பார்த்தவாறு உலவிக்கொண்டிருக்கிறான்.*]

**அஸ் :—** (தனக்குள்) இன்னுங் காணமே—ஒரு வேளே வரமுடியலேயோ? கண்டிப்பா வருவாண்ணுதான் நெனேக்கிறேன். எழவு கேக்கறதையெல்லாங் குடுக்கிருளேண்ணு இந்த அவலச்சணத்தோட மாரடிக்க வேண்டியிருக்கு. என்னயிருந்தாலும் நளினியைப் போல வருமா?

(மோகன விரைந்து வருகிருள்.)

**அஸ்:—** (கோபத்துடன்) வாங்க, மகாராணி — இல்லே, ஐயா இங்கே உங்களுக்காக எத்தினி நாழி காத்துக்கிட்டிருக்கிறதாம்? தெரியலேயே – வர வர ரொம்ப மோசமாப்போச்சே.

**மோக:—** (தழுவிக்கொண்டு) கோபித்துக்கொள்ளாதீர். மகாராஜாவை ஏமாற்றிவிட்டுவர இவ்வளவு நாழியாகிவிட்டது. நீர் எனக்காகக்காத்துக்கொண்டிருப்பீரென்றே ஓடோடியும் வந்தேன். வரும் வழியில் ஒரு நாகப்பாம்பு ...

**அஸ்:—** (பயந்து) ஹா, பாம்பா!

**மோக:—** (நகைத்து) அட எழவே, இதென்ன இப்படி பயப்படுகிறீரே – நான் அதன் வாலேப்பிடித்துத்தூக்கி எறிந்துவிட்டேனே.

**அஸ்:—** ஐயையோ, சொல்லும்போதே பயமாயிருக்கே. ஒன்னேக்கடிச்சிருந்தா? "காமத்துக்குக் கண்ணில்லே"ங்கிறது சரியாத்தான் இருக்கு.

**மோக:—** அது போகட்டும் – மகாராஜர் வந்து விட்டதால் இனி நாம் எப்பொழுதும்போல் சந்திக்க முடியாது –

**அஸ்:—** அப்பொ, ஒன்னெப்பிரிஞ்சிருக்க வேண்டியதுதானு?

**மோக:—** அம்மாடி, உம்மைப்பிரிந்து நான் உயிரோடிருக்கவா?– அது முடியாது. நான் வேண்டிய ஏற்பாடு செய்கிறேன். மகாராஜா நான் சொன்னபடி கேட்பார். அவரை சரிப்படுத்த எனக்கு வழிதெரியும்.

**அஸ் :—** அதுசரி, ஆனு–நான் அடிக்கடி வர முடியாது போலிருக்கே –

**மோக :—** ஏன்?

**அஸ் :—** பெரிய ராஜாவாலே ஒனக்குத் தொந்தரவு, சின்னராஜாவாலே எனக்குத் தொந்தரவு. அவுரு அடிக்கடி குதிரை லாயத்துக்கு வருவாரே – நான் இல்லாப்போனு ஆபத்தாச்சே.

**மோக :—** (அலட்சியமாக) அவன் கிடக்கிறுன். அதைப்பற்றி நீர் பயப்படவேண்டாம். நம் சந்தோஷத்திற்குறுக்கிட விக்ரமன் யார்?– நான் சமயம் பார்த்து சபலாவை அனுப்பி வைக்கிறேன்.

**அஸ் :—** மோகனு, குளிர்ச்சியாயிருக்கிற இந்த நெலா வெளிச்சத்திலே நாமரெண்டு பேரும் தெனமும் இப்பிடியே சந்தோஷமாப் பொழுது போக்கிறதுக்கு ஏற்பாடு பண்ண முடியாதா?

**மோக :—** *அவசரப்படாதீர் — கூடிய சீக்கிரம் உம்மை இந்த ராஜ்யத்துக்கோராஜாவாக்கி வைக்கிறேன். பெண்கள் மனது வைத்தால் முடியாத காரியமொன்றுமில்லை — ஆவதும் பெண்ணால், அழிவதும் பெண்ணால்.*

**அஸ் :—** *அப்பிடிச்சொல்லு.*
*(தழுவிக்கொள்கிறான்.)*

**அஸ்வபாலன்—மோகனா.**

*ஜெகமிதே ஜீவ காதலின் சோலை*
*சுகமிதே திவ்ய சுகானந்த லீலை*
*சீருடன் எவ்வனத்தின் சீலமறிந்து நமை*
*சேர்த்ததுவே தெய்வச் செயலே—இன்ப*
*சிலை மதன ரதி இருவரானோம்*
*ஜென்ம சிலாக்யம் பெறவே* (ஜெக)

*இனிய கர்ண மிர்தக் குயிலே பாட*
*இங்கு மங்குந் தோகை மயிலாட*
*புஷ்ப—ஏடவிழ் மகரந்தமாம் பொடி கூட*
*இளம் பனீர நிலாவும் குலாவ*
*எங்குந்தென்றல் சாமரம்போட*
*நரம்—ஈருடல் ஓருயி ராக நன்றாக*
*இணைபிரியாது அன்பாக*
*வர—மீதே பரனிடம் பெறவே சதாவும்*
*ஏற்றிப் போற்றுங் காதல் மெய்க் காதல்*
*சாற்றியே தினம் வாழ்க* (ஜெக)

*காட்சி முடிவு.*

## களம் 3. காட்சி 4.

**இடம் :—** *அந்தப்புரம்.*

**காலம் :—** *மாலை.*

**பாத் :—** *[மோகனு, பர்த்ருஹரி]*

(குறிப்பு) *[பர்த்ருஹரி மஞ்சத்தில் சாய்ந்து கொண்டிருக்க, மோகனு அருகில் உட்கார்ந்து வெற்றிலை மடித்துக்கொடுத்துக்கொண்டிருக்கிருள்.]*

**மோக :—** *நாதா, நெடுநாட்களாகத் தங்களிடம் ஒரு விஷயம் சொல்லவேண்டுமென்றிருந்தேன்—மனம் வரவில்லை...*

**பர்த் :—** *என்ன விஷயம்?*

**மோக :—** *வேறென்றுமில்லை, ஒரு சிறு வேண்டுகோள்.*

**பர்த் :—** *எதுவேண்டுமாயினும் கேள்.*

**மோக :—** *பெரிய மகாராணியைத் தாங்கள் பார்த்து எவ்வளவு காலமிருக்கும்?— நான் வந்தபின் தாங்கள் அங்கு போவதேயில்லையே. அவர்களும் என்னைப்போல் தங்களுக்கு வாழ்க்கைப்பட்டவர்களில்லையா?*

**பர்த் :—** (வெறுப்புடன்) *இப்பொழுது அவள் ஞாபகம் எதற்கு?*

**மோக:—** இல்லை நாதா, வேட்டைக்குப்போன தங்களைப்பிரிந்து நாலைந்து நாட்களுக்குள் நான் பட்ட பாடு கடவுளுக்குத்தான் தெரியும். சில நாட்கள் பிரிந்த எனக்கே இப்படியிருந்தால், நெடுநாட்களாகத் தங்களைப் பிரிந்திருக்கும் அவர்களுக்கு எப்படியிருக்கும்?—

**பர்த்:—** அதற்காக என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்?

**மோக:—** என்னைப்போல் அவர்களையும் தாங்கள் பாவிக்கவேண்டும்.

**பர்த்:—** அதற்கென்ன, அப்படியே பாவித்துக் கொள்ளுகிறேன்.

**மோக:—**வெறும் வார்த்தையளவில் மட்டுமல்ல— வாரத்திற்கு மூன்று தினங்களாவது தாங்கள் அவர்கள் அந்தப்புரத்தில் தங்கவேண்டும். இல்லையேல் அவர்கள் சாபம் நம்மைப்பிடிக்கும். நம் சந்தோஷத்திற்கும் பங்கமுண்டாகும்.

**பர்த்:—** (வெறுப்புடன்) மோகனா, அதைத்தவிர வேறெதைச் செய்யச்சொன்னாலும் செய்கிறேன்.

**மோக:—** நாதா, இந்த வேண்டுகோளைத்தாங்கள் மறுக்கக்கூடாது. இப்பொழுதே எல்லோரும் என்னை மனதிற்குள் சபித்துக்கொண்டே யிருக்கிறார்கள்.— தங்களை நான் வசப்படுத்திக்கொண்டேனாம், அந்தப் புரத்தைவிட்டு வெளியே செல்ல விடுவதில்லையாம்;

இதன்மூலமாகவாவது என் மீதிருக்கும் அபவாதம் நீங்கும். மனதிற்கும் நிம்மதியேற்படும்.

**பர்த்:—** (கோபத்துடன்) யார் உன்னைக்குறை கூறியது? சொல்—இப்பொழுதே தகுந்த தண்டனை விதிக்கிறேன்.

**மோக:—** ஊம்—வெளிப்படையாக யார் சொல்லு வார்கள்? அகத்தினழகு முகத்தில் தெரியாதா? எல்லோரும் நடந்துகொள்ளும் மாதிரியிலிருந்து நன்றாய்த் தெரிகிறது—தாங்கள் இந்தவேண்டுகோளைப் பூர்த்தி செய்யாவிட்டால், என்மனதிற்கு சந்தோஷமேயிராது

**பர்த் :—** (சற்றுயோசித்து) சரி, உன்னிஷ்டம்.

**மோக:—** மூன்றுநாட்கள் தங்களைப்பிரிந்திருக்க வேண்டுமேயென்று, இப்பொழுதே கவலையேற்படு கிறது. என்ன செய்வது? பழிச்சொல்லுக்கஞ்சியே கஷ்டத்தை சகித்துக்கொண்டு தியாகம் செய்ய முன் வந்தேன்.

**பர்த் :—** (தழுவிக்கொண்டு) கண்ணே மோகனா, உனது மேன்மையான குணம் யாருக்குவரும்? பெண் ணென்றால் நீதான் பெண், உன்னை மனைவியாக அடையப்பெற்றது எனது பூர்வ புண்ணிய வசமே. நீ இந்நாட்டிற்கு இளைய மகாராணியாயிருப்பது இந் நாடு செய்த தவப்பயனென்றே கருதவேண்டும்.

## பர்த்ருஹரி—மோகனா—தர்க்கம்.

ராஜா:— மிகப்—பொறுமையுடைய பூ தேவி நீயே
மோகன மானே செழுங்கனியே (மிக)

போக சௌபாக்யம் யாவும் தந்தாலும்
பெண்கள்—புருஷ சுகமதே—ஈவதுண்டோ
மோகன மானே-செழுங்கனியே (மிக)

ராணி:— பாரிலென் மேலே பழி கூர்வதாலே
பகிர்ந்தேனென் காதலைச் சந்தோஷ
மாகப்-பதியே தானம். (மோகனமானே)

காட்சி முடிவு.

## களம் 3. காட்சி 5.

**இடம் :—** குதிரை லாயம்.

**காலம் :—** காலை.

**பாத் :—** [மொட்டை, விக்ரமன், அஸ்வபாலன்]

**(குறிப்பு)** [மொட்டை "பொய்க்குதிரை" யொன்றைவைத்து ஆடிக்கொண்டிருக்க, விக்ரமன் வருகிறான்.— மொட்டை குதிரையை ஓர் புறம் தள்ளிவிட்டு விக்ரமனை வணங்கி நிற்கிறான்.]

**விக் :—** என்னடா அட்டகாசம் செய்கிறாய்?

**மொட் :—**(பயத்துடன்) ஒண்ணுமில்லே, பொய்க்கால் குருதை பழகிட்டிருந்தேன் மகாராசா.

**விக் :—** (லாயத்தைப்பார்த்து) குதிரைகளெல்லாம் ஏன் ஒருவாறு இளைத்திருக்கின்றன?

**மொட்:**— எனக்கொண்ணுந் தெரியாதுங்க மகாராசா. அண்ணன்தான் இந்த வேலேங்களேயெல்லாம் செய்யிறது வழக்கம். இப்பொ, கொஞ்சநாளா அவுரு சரியா வேலே செய்யிறதில்லிங்க. எனக்கும் அவ்வளவா பழக்கமில்லிங்க. நான் கிட்டக்கப்போனு அந்தப்புதுக்குருதைங்கரெண்டும் கடிக்கவருது. அதான் ஒரு மாருதியாயிருக்குதுங்க மகாராசா.

**விக்:**— (கோபத்துடன்) அந்தப்பயல் எங்கே?

**மொட்:**— இப்பொ, கொஞ்சநாளா, அவரைக் கண்டுபுடிக்கிறதுக்கே முடியலிங்க மகாராசா. அந்தத் தேவிடியா நல்லி ஊட்லேதான் இருப்பாருண்ணு நெனேக்கிறேன்.

**விக்:**— ஏண்டா, இந்த விஷயத்தை ஏன் இத்தனேநாள் என்னிடம் சொல்லவில்லே? நீயும் கூடச் சேர்ந்துதானே திருட்டுத்தனம் செய்திருக்கிறாய்?

**மொட்:**— (நடுங்கியவண்ணம்) புத்தி மகாராசா—சமுகத்திலே சொன்னு, அவுரு என்னேக்கொண்ணுப் புடுவாரிண்ணு நெனேச்சுசொல்லாமெ இருந்துட்டேன். இப்பொத்தான் புத்தி வந்துச்சு.

**விக்:**— மடப்பயலே, ஒருவன் குற்றம் செய்வது தெரிந்தும் அவனுக்கு உடந்தையாயிருந்ததால் நீதான் பெரிய குற்றவாளியாகின்றாய்.

**மொட்:**— (காலில் விழுந்து) மகாராசா, இந்த ஒருவாட்டி அடிமைக்கு மன்னிப்புக்குடுக்கணும் மகா

ராசா—எல்லாத்தையும் சொல்லிப்புட்றேன். அவுரு கிட்ட இப்பொ நவெ நட்டுங்கள்ளாம் தாராளமாப் பொழங்குதுங்க, ஆடம்பரமா செலவு பண்றுரு—அரமனெயிலே யாரோ பணக்காரப்பொண்ணெ வச்சிருக்கிறதாச் சொன்னுரு மகாராசா.

விக் :— (வியப்புடன்) அரண்மனையிலா! பணக்காரப்பெண்ணு!!

[அஸ்வபாலன் பாடிக்கொண்டே லாயத்தினுள் பிரவேசித்து, விக்ரமனைக்கண்டதும் திடுக்கிட்டு வணங்குகிறுன்]

விக் :— (அஸ்—நோக்கி) தலைகால் புரியவில்லையா? என்னடா கூழைக்கும்பிடு போடுகிறுய்? நீ லாயத்திற்கு வந்து எத்தனை நாட்களாயிற்று?

அஸ்:—ரெண்டுமூணு நாளா கொஞ்சம் வேலையா—அப்பிடியே...

விக்:— (கோபத்துடன்) குதிரைகளைக் கவனிப்பதை விட உனக்கென்னடா வேலை வந்தது?

அஸ்:— குதிரைங்கள்ளாம் சரியாத்தானேயிருக்குது மகாராஜா.

விக்:— சரியாயிருக்கிறதா?— நான் புதிதாய்க் கொண்டுவந்த கல்யாணி, நீலவேணி, இரண்டும் ஏன் இளைத்திருக்கிறது? வந்தபொழுது இப்படியா இருந்தது?

**அஸ் :**— ஓஹோ, எளேச்சுப்போயிருக்கா! — சர்தான். காலம் சரியாயில்லே—அதனாலே ஒருவேளே எளேச்சிருக்கலாம்.

**விக் :**— (கோபத்துடன்) இளேத்திருக்கலாமென்றால், நீ அவைகளே சரியாய் கவனிக்கவில்லேயென்று தானே அர்த்தம். உனக்குத்தெரியாமல் இளேத்துப் போய்விட்டதோ? நீ அவ்விரண்டு குதிரைகளேயும் கண்களே இமை காப்பதுபோல் காத்துவந்தவனாயிற்றே — இப்பொழுது அவற்றை கவனிக்காமல் அலட்சியம் செய்யவேண்டிய காரணமென்ன?

**அஸ்:**—நான் கவனிக்காமெ எங்கே போறேன்?— எப்பவும் அடிமையா இங்கேத்தானே விழுந்து கெடக்கிறேன் மகாராஜா.

**விக் :**— (கோபத்துடன்) என்னடா, உன் பேச்சும் செய்கைகளும் ஒருவிதமாயிருக்கிறதே.—

**அஸ்:**— சரியாத்தானே வாயாலே பேசறேன் மகாராஜா. வேறே மாதிரியா பேசலேங்களே. மகாராஜா தான் என்னமோபோல கேக்கிறிங்க —

[விக்ரமன் ஓர்புறம் தொங்கும் குதிரைச்சவுக்கைக் கையிலெடுத்துக்கொண்டு அஸ்வபாலனிடம் நெருங்கி]

**விக்:**—ஏண்டா,உன்புத்தி நிதானத்தில்இல்லேயா?

**அஸ்:**— என்னாங்க மகாராஜா இப்பிடிச்சொல்றிங்க? நான் என்ன பைத்தியமா?

[விக்ரமன் கடுங்கோபத்துடன் அஸ்வபாலனைச் சவுக்காலடிக்க, மொட்டை ஓர்புறம் மறைந்து நிற்கிறான்.]

**விக் :—** அயோக்கிய நாயே, உனக்கு அவ்வளவு இறுமாப்பா? (அடிக்கிறான்)

**அஸ்:—** (துள்ளிக்குதித்து) ஐயோ, தாங்க முடியலையே... மகாராஜா......

**விக் :—** அரண்மனையில் எந்தப்பெண்ணிடம் நேசம் வைத்துக்கொண்டிருக்கிறாய்? (அடிக்கிறான்)

**அஸ்:—** (கரங்கூப்பித்தொழுது) இல்லே மகாராஜா, இல்லே— புத்தி வந்துது.

**விக் :—** திருட்டுப்பயலே, இன்றுமுதல் குதிரைகளை ஒழுங்காகக் கவனித்து வராவிட்டால் உன் உடம்புத்தோலை உரித்துவிடுவேன். ஜாக்கிரதை — டே மொட்டை—

**மொட் :—**(பயந்து அலறி) ஐயோ, எனக்கொண்ணுந்தெரியாது மகாராசா—

**விக் :—** இந்தப்பயல் ஏதாவது ஒழுங்குதவறி நடந்தால் உடனே என்னிடம் வந்து தெரிவிக்கவேண்டும். ஞாபகமிருக்கட்டும்.

**மொட் :—** புத்தி மகாராசா—

[விக்ரமன் சவுக்கை எறிந்துவிட்டு கோபத்துடன் செல்கிறான். அஸ்வபாலன் அடிபொறுக்கமாட்டாமல் கீழ் விழுந்து அழுகிறான்.]

மொட் :— ஐயோ பாவம், சவுக்குக்கூட பிஞ்சு போச்சு. (அஸ்வபாலனை நெருங்கி) எங்கண்ணே பாக்கலாம்—அடி பலமா உழுந்திருச்சா?— (பார்த்து) அடடா, பெருங்காயமாயிருக்கண்ணே — ஒனக்குக் கொஞ்சங்கூட புத்தியேயில்லே—இந்த மாருதி பேச்லாமா மகாராசாகிட்ட?

அஸ்:—(அழுதுகொண்டே கோபத்துடன்) ஊம்- மகாராஜா— எனக்குவந்த கோபத்துக்கு அப்பிடியே நொறுக்கியிருப்பேன்—

மொட் :— ஆமா, முடியாதிண்ணு சும்மாயிருந்துட்டியோ?— முறுக்காயிருந்தா நொறுக்கியிருப்பே.

அஸ்:— என்னடா சொன்னே? என்னாலே முடியாதா? பாத்துக்கலாம். வேலே புடிக்கலேண்ணு வேலையை உட்டு நீக்கறதை உட்டுட்டு, அடிக்கிறதுக்கு இவன் யாரு?

மொட் :—என்னண்ணே இப்பிடிப்பேசறே? மகாராசா அடிக்கிறதை யாரண்ணே கேக்கறது? நீதானே அவுருக்குக்கோபம் வரும்படியா பேசினே;—

அஸ்:– இவனுக்கென்னடா மரியாதை? சும்மாவா சம்பளம் குடுக்கிறான்? ராஜாவாயிருந்தா எனக்கென்னடா? நான் ஏண்டா பயப்படணும்?

மொட்:—அப்பொ, அடிவாங்கிக்கிட்டே இருக்கப் போறியா?

**அஸ் :—** இருக்கட்டும். இவனுக்கு வழி வைக்கிறேன் – டே மொட்டை, என்னமா அடிச்சிருக்கான் பாத்தியாடா?

**மொட்:—**அடடா, மனுசனே அடிக்கிறமாருதியே அடிக்கலேண்ணே.

**அஸ்:—** டே, நாளைக்கு என்ன நடக்குதுபாரு. பழிக்குப்பழி வாங்காப்போனா எம்பேரு அஸ்வபாலன் இல்லே.

**மொட் :—** அண்ணே, நீ போறபோக்கு எனக்கு சுத்தமாப்புடிக்கவேயில்லண்ணே. பாத்துப்போ — பள்ளத்துலே உளுந்துடாதே –

(அஸ்வபாலன் தள்ளாடியவண்ணம் செல்கிறான்.)

**மொட் :—** (தனக்குள்) என்ன எழவோ ஒண்ணும் புரியலே. ஆசாமி பெரிய எடத்தைத்தான் புடிச்சிருக்கான்போலயிருக்கு. சின்னமகாராசா கிட்டயே இப்படிப்பேசணுமிண்ணா, அது ரொம்ப ரொம்பப்பெரிய எடமாத்தான் இருக்கணும். சரி — நமக்கென்ன? எப்படியாச்சும் போறான். இந்த விசயத்தையும் ஒழுங்கா சின்னமகாராசாகிட்ட சொல்லிட வேண்டியதுதான்.—

காட்சி முடிவு.

THE MADURA TAM...

## களம் 3. காட்சி 6.

**இடம் :—** நந்தவனம், கொடிவீடு.

**காலம் :—** இரவு.

**பாத் :—** [அஸ்வபாலன், மோகனு]

(குறிப்பு) [மோகனு அஸ்வபாலனின் வரவை எதிர்நோக்கியவாறு உலாவிக்கொண்டிருக்கிறுள்.]

**மோக :—** (தனக்குள்) ஏன் இன்னும் என் காதலரைக்காணவில்லே? எப்பொழுதும் முன்னதாகவே வந்து காத்திருப்பாரே — ஏதேனும் விசேஷமிருக்க வேண்டும். ஒருவேளே விக்ரமன் அவரைக்குதிரைலாயத்தைவிட்டு ஓரிடமும் போகக்கூடாதென்று கட்டளேயிட்டிருப்பானே? ஒன்றுந் தெரியவில்லேயே —

(அஸ்வபாலன் தள்ளாடிக்கொண்டே வருகிறுன்.)

—ஆ! ஏன் என் காதலர் இவ்விதம் தள்ளாடிக்கொண்டு வருகிறுர்?—

[எதிர்சென்று, அஸ்வபாலனேத் தழுவிக்கொண்டு அருகிலுள்ள பளிங்காசனத்தில் அமர்த்துகிறுள்.

**மோக :—** காதலா, உடம்புக்கென்ன? களேப்பாயிருக்கிறுற்போல் காணப்படுகிறதே! — — என்ன நேர்ந்தது? ஏன் மௌனமாயிருக்கிறீர்கள்? ......... சொல்லுங்கள் — என்னுயிர் துடிக்கிறதே —

(அஸ்வபாலன் மோகனுவை ஓர்புறம் ஒதுக்கித் தள்ளுகிறுன்.]

**அஸ்:**—(கோபத்துடன்) போமடீ, உன்னுயிர் துடிக்குது, என்னுயிரு எமன்கிட்டப்போயி வந்திருக்கு தெரியுமா? போரும் போரும் உன் சிநேகிதம். ராஜாங்கத்திலே சிநேகிதம் பண்றது நெருப்பிலே குளிர் காயிறமாதிரி இருக்கணும்னு சொல்லுவாங்க. அது சரியாப்போச்சு நெருப்புகிட்டக் குளிர்காயும்போது ரொம்பகிட்ட நெருங்கிட்டா சுட்டிடும். தூரப்போனா சூடே இருக்காது. அதுமாதிரி ராஜாங்க சிநேகிதமும் கிட்ட நெருங்கிட்டா தலைக்கே ஆபத்து. தூரப் போயிட்டா லாபமில்லை. இது என் விஷயத்திலே சரியாப்போச்சு. அந்தப்புரத்திலே நான் நெருங்கி சிநேகிதம் பண்ணப்போயி, என் உயிருக்கே ஆபத்தாப் போச்சு. போரும் உன் சகவாசம். நான் எங்கேயாவது ஓடிப்போறேன்.

**மோக:**— (பதைபதைத்து) என்ன நடந்தது? ஒன்றும் சொல்லமாட்டேனென்கிறீர்களே. யாரால் தங்களுக்கு ஆபத்து நேர்ந்தது?— நீங்கள் ஏன் போக வேண்டும்? உங்களை இங்கிருந்து போகச்சொல்லும் ஒருவனும் இருக்கின்றானா?

**அஸ்:**— இருக்கானே—இனிமே ஒருநாழிகூட இங்கே இருக்கமுடியாது. எனக்கு இந்தக்குதிரை தேய்க்கிற வேலைவேண்டாம். மானம் போனதுக்கப்புறம் இந்த உசிரை வச்சிக்கிட்டிருந்து என்ன பிரயோசனம்? ஒரு ரோமம் போனாக்கூட கவரிமான் வாழாது தெரியுமா?

**மோக:—** (கால்களைப் பிடித்துக்கொண்டு) ஐயோ, என்ன நேர்ந்தது? தயவுசெய்து சொல்லமாட்டீர்களா— நீங்கள் இங்கிருந்து போவதா? நீங்கள்போனால் என் னுயிரும் போய்விடும்.

**அஸ் :—** (ஆத்திரத்துடன்) பின்னே என்னடி, அந்தப்பய விக்ரமன் நான் வேலை சரியா செய்யலே ண்ணு சவுக்காலே அடிச்ச அடியைப்பாரு—

(காயங்களைக் காட்டுகிறான்)

**அஸ் :—**உன்னாலேதானே இதெல்லாம் வந்துது; சரியா வேலை செய்யாததினாலேதானே அவன் அடிச் சான். நான் முன்னாடியே சொன்னனே, கேட்டியா? எல்லாம் நான் பாத்துக்கிறேண்ணு சொன்னியே — ஊரைவிட்டே ஓடிப்போறேன்.

**மோக :—** (கோபத்துடன்) ஆஹா, என்ன துணிவு! சவுக்காலடித்த காயங்களா இவைகள்? என் புத்தி தடுமாறுகிறதே—என்ன அநியாயம்—என்கண் களுக்கும், மனதிற்கும் உடலுக்கும் இன்பமளித்து வந்த சுந்தரத்திருமேனியில் வடுப்படுவதா? இதற்குப் பழிக்குப்பழி வாங்காவிட்டால் என்மனம் ஆறாது.

**அஸ் :—** நீ என்னாடி, நானே அவனுக்கு அந்த எடத்திலேயே புத்திவரப்பண்ணியிருப்பேன். உன் புருசன் தம்பியாச்சேண்ணு சும்மாவிட்டேன். உன் னாலே அவன் பொழச்சான்.

மோக :— (ஆத்திரத்துடன்) ஏன் காதலா சும்மா விட்டீர்கள் மடையனை? குத்திக்கொன்றுவிட்டு வந்து என்னிடம் சொல்லியிருக்கப்படாதா?

அஸ்: — ஒரேகுத்தா குத்திப்புடலாமிண்ணுதான் பாத்தேன்—அந்த சமயத்திலே கையிலே கத்தியில்லாதெ போச்சு.

மோக: — ஊம் — எங்குதப்பினுன்—நான் அவனுக்கு வழி செய்கிறேன். இனி உங்கள் ஜோலிக்கே வாராமற் செய்துவிடுகிறேன்—காதலா, தாங்கள் இதை மனதில் வைக்கவேண்டாம்—நான் உடனே சென்று அரண்மனை வைத்தியரை அனுப்பி வைக்கிறேன். காயங்களுக்கு மருந்துபோடுங்கள். அலட்சியமாயிருந்துவிடாதீர்கள்.

அஸ்:— மோகனு, நான் அடிபட்ட ஒடனேயே ஊரைவிட்டு ஓடிப்போயிருப்பேன். ஒன்னைவிட்டு பிரிய மனசுவரல்லே மோகனு—

மோக :— (தழுவிக்கொண்டு) வருந்தாதீர்கள். நான் வருகிறேன். என்மனம் இப்பொழுது நிம்மதியாயில்லை—போய் உடனே மருந்து போடுங்கள் — நாளை சந்திப்போம்.

(விரைந்து செல்கிருள்)

அஸ்: —(துள்ளிக்குதித்து) போறபோக்கிலேயே தெரியுதே — ஒழிஞ்சான் விக்ரமன்.— என்ன வரப்

போகுதோ தெரியலே—இனிமே சாக்கிரதையா நடந்துக்கணும். ஆபத்து தலேமேலே இருக்கு—நளினியோட நிக்காமே இவகிட்டவேறே வந்து ஆப்புட்டுக்கிட்டு முழிக்கிறேனே - மனசு திடுக்குதிடுக்கிண்ணு அடிச்சிக்குதே — — என்ன பொமாதம், மிஞ்சிப்போன உசிருதானே போவும்,— பாத்துக்கலாம் –

காட்சி முடிவு.

## களம் 3. காட்சி 7.

**இடம்** :— அந்தப்புரம்.

**காலம்** :— காலே.

**பாத்**:—[மோகனு, சபலா, விக்ரமன், பர்த்ருஹரி]

(குறிப்பு) [மோகனு கோபத்துடன் உலவிக்கொண்டிருக்க, சபலா வருகிருள்.]

**சபலா** :— மந்திரியாருடன் பேசிக்கொண்டிருக்கிருர். இதோ வருகிறேனென்று சொன்னுர் –

**மோக** :— ஊம், என்னதைர்யம்? மோகனுவின் காதலனே அடித்தது மோகனுவை அடித்தது போலல்லவா?—

**சபலா** :— ஆம் அம்மணி — அதோ வருகிருப் போலிருக்கிறது.

**மோக**:— சரி, நீ வெளியே செல்...சொன்னது ஞாபகமிருக்கட்டும்.

[சபலா வெளியே செல்ல, விக்ரமன்வந்து மோகனுவை வணங்கி]

**விக் :**—தேவி, என்னைப்பார்க்க வேண்டுமென்றீர்களாமே?

**மோக:**— (இறுமாப்புடன்) ஆம்.

**விக் :**— விஷயத்தைச் சொல்லியனுப்பியிருந்தால் போதுமென்று நினைக்கிறேன்.

**மோக:**— இல்லை, இது நேரில் கேட்கவேண்டிய விஷயம்.

**விக் :**— (பணிவுடன்) காத்துக்கொண்டிருக்கிறேன்.

**மோக:**— அஸ்வபாலரை...ஏன் அவ்வாறு அடித்தீர்கள்?

**விக் :**— (திடுக்கிட்டு) யாரை?

**மோக:**— அஸ்வபாலரை.

**விக் :**— குதிரைக்கார அஸ்வபாலனையா?

**மோக :**—(அழுத்தமாக) ஆம்—

**விக் :**— இது ஒரு அற்பவிஷயம். இதற்காகவா என்னை நேரில் காணவிரும்பினீர்கள்? அவனுடைய நடத்தை சரியாயில்லாததால், அதற்குத்தக்க தண்டனை கொடுக்கவேண்டியதாயிற்று.

**மோக :**— (கோபத்துடன்) என்ன காரணமிருப்பினும், அரசர் முன் விசாரணையின்றி அவரைத்தண்டிக்க தங்களுக்கு அதிகாரமேது?

**விக் :—** (நிதானமாக) தேவி, எனக்கு அதிகார முண்டா, இல்லையாவென்று தீர்மானிக்கும் பொறுப்பு தங்களைச்சேர்ந்ததல்ல. அந்தப்புரப்பெண்களுக்கும் அரசியலுக்கும் சம்பந்தமிருப்பதாய்த் தெரியவில்லை. தங்களுடைய இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்லக்கடமைப்பட்டவனுமல்ல. ஓர் அற்பக் குதிரைக்காரன் விஷயத்தில் உஜ்ஜயினி மகாராணிக்கு இவ்வளவு கருணை தோன்றியதின் காரணமென்னவோ?

**மோக :—** (இறுமாப்புடன்) நான் இவ்விராஜ்யத்திற்கு ராணி. சகல பிரஜைகளுடைய கஷ்ட நஷ்டங்களையும் தீர்க்க எனக்கு உரிமையுண்டு.

**விக் :—** அப்படி யாருக்கு என்ன கஷ்டம் வந்தது? அதைத்தீர்க்கவேண்டிய அவஸ்யம் என்ன ஏற்பட்டது?

**மோக:—** அஸ்வபாலர் நிரபராதி. தங்களைக் கேட்பார் ஒருவருமில்லையென்ற எண்ணத்தால் அவரை அடித்து இம்சித்திருக்கிறீர்கள்.

**விக் :—** தேவி, தாங்கள் அவ்வாறு நினைப்பது சரியன்று. விக்ரமன் தெய்வ நம்பிக்கையுடையவன். யார் கேட்காது போயினும், ஈசன் நின்று கேட்பான் என்பதை அவன் அறிவான் — நீதி நிர்வாக விஷயங்களைப்பற்றிக் கவனித்துத்தீர்ப்பளிக்க நமது அரசாட்சியில் போதுமான ஆட்களிருக்கிறார்கள். அந்தப்புரத்திலுள்ள பெண்கள் இதில் தலையிடவேண்டிய நெருக்

கடியான நிலைமை இன்னும் ஏற்படவில்லை — ஒவ்வொருவரும் தமது கடமையை உணர்ந்து நடந்தால், இம்மாதிரிக்கேள்விக்கே இடமிராது. தாங்களோ இளையமகாராணி—அன்றியும், எனது சகோதரரின் அன்பிற்குரிய மனைவி. அதையெண்ணியே தங்கள் கேள்விக்கு நான் பொறுமையுடன் பதில் கூறினேன்—நாம் இருவரும் இவ்வாறு விவாதம் செய்வது சற்றும் ஒழுங்கல்ல. தங்களிடம் இன்றுதான் முதன்முறையாக நான் பேசுகிறேன்—ஓர் குதிரைக்காரன் விஷயமாக தாங்கள் இவ்வளவு சிரத்தையெடுத்துக்கொண்டது எனக்கு வியப்பாகவே இருக்கின்றது.

**மோக** :— ஏழை வேலையாட்களை அற்பமாகக் கருதுவதுதான் அரசர்களின் குணம்போலும். நான் இவ்விராஜ்யத்திற்கு ராணியாக இருக்கும்வரை, அவ்வாறு நடக்கச் சம்மதியேன். அரசருக்கு நேரும் அவச்சொல் என்னையும் சேர்ந்ததே. இனித்தாங்கள் அரண்மனை வேலையாட்களை, குறிப்பாக அஸ்வபாலனை, அடிக்கவோ, இம்ஸிக்கவோ கூடாதென்று எச்சரிக்கிறேன். அஸ்வபாலனிடம் மரியாதையாக நடந்துகொள்வதே நலம். இதற்குக்காரணம் கேட்கமாட்டீர்களென்று நினைக்கிறேன்.

**விக்** :— (வியப்புடன்) காரணம் சொல்லித்தான் தீரவேண்டுமென்று தங்களைக்கட்டாயப்படுத்த எனக்கு உரிமையில்லை. ஆனால் தங்கள் கட்டளை எனக்கு விசித்ரமாகத்தான் தோன்றுகிறது. அரண்மனையி

ஹுள்ள ஓர் குதிரைக்காரனுக்கு மரியாதை செலுத்தும் படி இளையமகாராணியார் எனக்கா கட்டளையிடுவது? என் மூளை குழம்பிவிடும்போலிருக்கிறது!— இதில் ஏதோ ரகசியமிருக்கிறது—

**மோக :**— (உறுதியுடன்) ஆம், அந்தப்புர ரகசியங்கள் பலவற்றுள் இதுவும் ஒன்று.

**விக் :**— (ஆச்சர்யத்துடன்) என்ன! அந்தப்புர ரகசியங்கள்......

**மோக :**— (நிதானமாக)...பலவற்றுள் இதுவும் ஒன்று.

**விக் :**— (வியப்புடன்) அப்படியானுல், அஸ்வபாலனின் நடத்தைக்குக்காரணம் நீங்களாகத்தானிருக்க வேண்டுமென்று நான் எண்ணுவது தவருகாதென்று கருதுகிறேன்.

**மோக :**— (அலட்சியமாக) நீர் எப்படி எண்ணிஞலும் எனக்கு அதைப்பற்றி அக்கரையேயில்லை. நிம்மதியாய் இந்த நாட்டில் வாழவேண்டுமென்ற விருப்பம் உமக்கிருந்தால் மோகனுவை விரோதித்துக்கொள்ளவேண்டாம்.

**விக் :**— (புன்னகையுடன்) மகாராணி, ஒருவருடைய விரோதத்திற்கோ, பயமுறுத்தலுக்கோ, அஞ்சி, தன் கடமையினின்றும் தவறுபவன் விக்ரமனல்ல — இந்த ராஜ்யமும் போகபாக்கியங்களும், எனக்கு லட்சியமில்லை. என் கடமைதான் எனக்குப்பெரிது.

**மோக**:— வேண்டாம். கடமையைக்கருதினல் கலங்கவேண்டி நேரிடும்." சமயத்திற்குத்தக்கபடி நடந்துகொள்வதுதான் புத்திசாலிகளுக்கழகு. மறுமுறையும் எச்சரிக்கிறேன். என்னிஷ்டத்திற்குக் குறுக்கே நிற்கவேண்டாம்.

**விக்**:—தேவீ, தாங்கள் செய்யும் சூதுக்கு நானும் உடந்தையாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறீர்கள்—கனவு காணவேண்டாம். விக்ரமன் உண்மை க்ஷத்ரியன் என்பது ஞாபகமிருக்கட்டும். தங்களுடைய பேச்சும், நடத்தையும் என் சந்தேகத்தை உறுதிப்படுத்திவிட்டது. நான் —

[சபலா ஓடிவந்து "மகாராஜா," மகாராஜா," என்று கூச்சலிடுகிருள். பர்த்ருஹரி தூரத்தில் வந்துகொண்டிருக்கிருன். விக்ரமன் திடுக்கிட்டு திரும்பிப்பார்க்க, மோகனு சட்டென்று விக்ரமன் கையைப்பிடித்துக்கொண்டு கஷ்டத்துடன் விடுவித்துக்கொள்ள முயல்வதுபோல் பாசாங்குசெய்து கூச்சலிடுகிருள்.]

**மோக**:— அடபாவி, தமையன் மனைவி தாய்க்குச்சமானமல்லவா—உனக்கேனடா இந்தக்கெடுபுத்தி? என்னுயிரையாவது விட்டுவிடுவேனேயல்லாது உனது இஷ்டத்திற்கு ஒருக்காலும் உடன்படமாட்டேன் ...

[விக்ரமன் ஒன்றுந்தோன்றுமல் திகைத்து நிற்க, பர்த்ருஹரிவந்து விக்ரமனைப்பிடித்

-தக் கீழே தள்ளுகிறான். மோகனு உடல் பதற, கண்ணீர்விட்டபடி நிற்கிறாள்.]

**பர்த் :**— சகோதரத்ரோகி,காமவெறிபிடித்த சண்டாளா! குலத்தைக்கெடுக்கவந்த கோடரிக்காம்பே —

**விக் :**— (பதஷ்டத்துடன்) அண்ணு, சற்று பொறுங்கள் —

**பர்த் :**— (கடுங்கோபத்துடன்) இனியரைக்கணமும் என்முகத்தில் விழிக்காமல் ஓடிப்போ. இந்நாட்டெல்லையை மிதியாதே —

**விக் :**—(கண்கலங்க) அண்ணு, சற்று பொறுமையோடு...

**பர்த் :**— பொறுமை—இன்னும் நீ செய்யும் அக்ரமங்களைப்பொறுமையோடு பார்க்கவேண்டுமா?

**விக் :**— அண்ணு, என்மேல் குற்றமில்லை. நடந்ததை விபரமாய்...

**பர்த்:**— கேட்டதுபோதும். உடனே இந்நாட்டைவிட்டு ஓடிவிடு. இல்லையேல் சிரச்சேதம் செய்யும்படி கட்டளையிடுவேன்.

**விக்:**— அண்ணு, நான் என்னுயிரைப்பெரிதென நினைக்கவில்லை—என்மேல் குற்றமிருப்பின் தாங்களே என்னைக்கொன்றுவிடுங்கள். விசாரணையின்றி தீர்ப்பு.........

**பர்த் :**— விசாரணை - கண்ணாரக்கண்டபின்னும் விசாரணையா?

**விக் :—** அண்ணு, தங்கள் நன்மை......

**பர்த் :—** போதும் நிறுத்து. நான் எதையுமே கேட்கச்சித்தமாயில்லை.

**விக் :—** (கண்ணீர் விட்டுக்கதறி) அண்ணு, நான் இப்பொழுதே இந்நாட்டைவிட்டுச் செல்கிறேன். ஆயினும், ஒரு வார்த்தை......

**பர்த் :—** உன் மொழிகள் என்காதில் நாராசம் போற் பாய்கின்றன.


**விக் :—** (காலில் வீழ்ந்து) அண்ணு, அண்ணு...

**பர்த் :—**சீ, மிருகமே-(உதைத்துத்தள்ளுகிறுன்)

**விக் :—** (எழுந்து) அண்ணு, நான் போகிறேன். மோகாந்தகார இருள் தங்கள் நல்லறிவையும், பொறுமையையும், மூடி மறைத்துவிட்டது. அந்த அஞ்ஞான இருள்விலகி, அறிவுச்சுடர் உதயமாகும் சமயம், தங்கள் செய்கையை எண்ணித்தாங்களே வருந்துவீர்கள்—ஆயினும், போகுமுன் ஒன்று கூறுகிறேன். "பேய்க்குணம் படைத்த பெண் ஒருத்தியால் ஏற்படும் இன்னல்களை ஏற்கச்சித்தமாயிருங்கள்." இதுதான் எனது வேண்டுகோள்— **சீ, துச்சம் இவ்வுலகம்.**

(விரைந்து செல்கிறுன்.)

காட்சி முடிவு.



## களம் 3. காட்சி 8.

இடம் :— அரண்மனைத்தோட்டம்.

காலம் :— நடுப்பகல்.

பாத் :— [அஸ்வபாலன், மொட்டை.]

(குறிப்பு) [அஸ்வபாலன் கூத்தாடியவண்ணம் பாடிக்கொண்டு வருகிறான்.]

அஸ்வபாலன்.

இனிக்-கட்டாயம் ராஜனாவேன்
கடவுளும்—கண்ணேக்கினார்—ஆஹா
இளங்—கண்ணாட்டி ராணியுமென்
கைப்பொம்மையே
எனை—இன்னா னென்றறிந்திடாமல்
பகைத்தவன் என்னாகினான்—பாவம் (எனை)
அஸ்வ—எஜமானென்றே
எங்கும் விஜயஞ் செய்வேன்
யாரும்—எதிர்கொள்ளும் மரியாதைப்
பேரும் பெற்றேன்—
இந்த யோகமே வைபோகம் (எனை)

[மொட்டைவந்து அஸ்வபாலனின் ஆர்ப்பாட்டத்தையும், குதூகலத்தையும் பார்த்து,]

மொட்:— என்னண்ணே தலைகால் புரியாமக் குதிக்கறே?— நான் நெனைக்கிறேன், அந்த பிரம்மா

வந்து ஒம் மூளையிலே எங்கேயோ ஒரு எடத்திலே கொஞ்சம் களிமண்ணை வச்சூட்டான்போலயிருக்கு— நேத்துக்கெடச்ச ஒதெயெ இதுக்குள்ள மறந்துட்டியே—இது என்ன சென்மமோ?—

**அஸ் :—** டே, இப்பொ பேசினது போச்சு. இனிமெ இந்த மாதிரி மரியாதை இல்லாமெப்பேசினே—அவ்வளவுதான் தொலஞ்சே. ஒஞ்சீட்டையும் கிழிச்சுப்புடுவேன். நேத்திக்கி என்னை அடிச்சவன் கெதி தெரியுமாடா? இண்ணைக்கி ராஜ்யத்தை விட்டே தொலைஞ்சான்.

**மோட் :—** என்னது? என்னண்ணே ஒளர்றே? வரும்போது பனந்தோப்புப்பக்கம் போயிட்டு வந்தியோ?

**அஸ் :—** டே நானு ஒளர்றேன்? அரமனையிலே போயிக்கேட்டுப் பாருடா.

**மோட் :—** (வியப்புடன்) ஏண்ணே, நெசமாவா சின்னமவராசா ராசியத்தை உட்டுப் போறுரு?

**அஸ் :—** அவரு ஏண்டா போறுரு? "ஐயா" போகவச்சாரு. இனிமே இந்த ராஜ்யத்துக்குள்ள நொழஞ்சா, அவந்தலை போயிடும்.

**மோட் :—** என்னண்ணே சேதி? என்னத்துக்குப் போறுரு?

அஸ்:— ஊம், போனுப் போகுதுண்ணு உட்டேன். இல்லேண்ணு, இந்த ஒலகத்தை உட்டே தொலேச்சிருப்பேன். தெரியுமா?— "ஐயா" வை என்ன நெனச்சே?

மொட்:— நெசமாவா அண்ணே?— எந்தலேலே அடி.

அஸ்:— ஒங்கப்பாணே—(தலேயில் அடிக்கிருன்)

மொட்:— (பயத்துடன்) ஒன்னேப்பாக்கவே பயமாயிருக்கண்ணே. ஏதாவது எச்சணியெ, கிச்சணியெ வசியம்பண்ணி வச்சிருக்கியா? சின்னமவா ராசாவே ஒன்னுலே ஊரைவிட்டுப்போறதுண்ணு...

அஸ்:— "சத்தி" தேவி ஐயாகிட்டத்தாண்டவம் பண்ணுதடா. டே, இனிமே ஐயாவை நீ, நான்னு பேசப்படாது. தெரியுமா? நான் சொல்றபடி நீ கேட்டுத்தான் ஆகணும். இல்லே,— தொலேஞ்சே.

மொட்:— (தனி) என்ன எழவோ ஒரு எழவும் புரியலேயே!—அண்ணே, இனிமேலே நீதான்...

அஸ்:— (இடைமறித்து) உஸ்—நீங்கண்ணு சொல்லு.

மொட்:— பழக்கமில்லாததினுலே வரமாட்டேங்குதண்ணே.

அஸ்:— வரவழைடா. வந்துதான் ஆகணும் தம்பி.

மொட் :— உத்தரவு அண்ணே இனிமேலே நீ...ங்க தான் தெய்வமுண்ணு நெனைச்சுக்கிறேன் — அண்ணே, நம்ப சம்பளத்தையும் கொஞ்சம் கூட்டற துக்கு ஏற்பாடு பண்ணண்ணே

அஸ் :— இப்பொ, ஒனக்கென்னடா சம்பளம்?

மொட் :— ஒண்ணரை விராகனும் ஒருவேளே சாப்பாடும் குடுக்கிறுங்க.

அஸ்:— என்னடா வேணும்?

மொட்:—சம்பளத்திலே ஒரு காலோ, அரையோ...

அஸ்:— என்னடா பிரமாதம்; பத்துவராகன் தரச்சொல்றேன். என் வேலையும் சேத்துப்பாத்துக் கிறியா?

மொட் :— சரிங்கண்ணே.

அஸ்:— யார்ரு, அண்ணே? இனிமே "ஐயா" எஜமாண்டா.

மொட்:— அப்பொ, இனிமே குருதைங்களே கவனிக்கவேமாட்டிங்களா அண்...ஊம்...எசமான்—

அஸ்: — எப்பவாச்சும் ஒருநாள் வந்து "ஐயா" அப்பிடியே ஒரு பார்வை பாத்துட்டுப்போயிடுவாரு தெரியுமா?

மொட் :— சரி உட்டுடுங்க. —

**அஸ் :—** டே, "ஐயா" நளினி வீட்டுக்குப்போ ருரு. நாளைக்கு வருவாரோ, வரமாட்டாரோ, அவருக்கே தெரியாது. நீதான் எல்லாத்தையும் பாத்துக்கணும் — இல்லேன்னு, தொலைச்சிப்புடுவேன்—

(போகிருன்.)

**மோட் :—** (தனக்குள்) சரி, சரி, மோகினி வசியந்தான். சந்தேகமேயில்லே. அட்பாவமே, சின்ன மவாராசா ஊரைவிட்டே போயிட்டாராமே! இந்தச் சண்டாளன் இன்னும் என்னென்ன பண்ணப்போருனே தெரியலையே! — சரி பாத்துக்குவோம்.

(போகிருன்)

காட்சி முடிவு

## களம் 3 காட்சி 9.

**இடம் :—** ராஜகுரு ஆஸ்ரமம்.

**காலம் :—** மாலை.

**பாத் :—** [ராஜகுரு, சிஷ்யர்கள், விக்ரமன்]

(குறிப்பு) [ராஜகுரு ஓர் பீடத்தில் அமர்ந்திருக்கிருர், சிஷ்யர்கள் இருபுறமும் வீற்றிருக்கின்றனர். விக்ரமன் காவி உடையணிந்தவனுய் வந்து குருவின் பாதங்களில் வீழ்கிருன்.]

**குரு :—** (வியப்புற்று) விக்ரமா, இதென்ன கோலம்?

**விக்**:— குருதேவா, அடியேனுக்கு அபயமளித்து ஆட்கொள்ளவேண்டும்.

**குரு**:—ஏனிங்குவந்தாய்? நீ துறவுகொள்ளவேண்டிய காரணமென்ன?

**விக்**:— சுவாமி, அநித்ய வாழ்வாகிய உலக போகங்கள் எனக்குவேண்டாம். நித்ய சாந்தியளிக்கும் எம்பிரான் திருவடி நிழலையடையும் மார்க்கங்களை அடியேனுக்கு உபதேசித்து தன்யனுக்கவேண்டும்.

**குரு**:— விக்ரமா, உனக்கு அதற்குரிய பக்குவ நிலை இன்னும் ஏற்படவில்லையே. படிப்படியாக வன்றோ ஏறிவரவேண்டும். பிரம்மச்சர்யம், கிருஹஸ்தம், வானப்ரஸ்தம், சன்யாசம் – நீயோ பிரம்மச்சாரி —இன்னும் அனுபவிக்கவேண்டிய தர்மங்களை முறைப்படி அனுபவித்து விட்டுத்தான் சன்யாசம் பெறவேண்டும். உனது கடமைகளினின்றும் தப்பித்துக்கொள்ள முயல்வது பாபமன்றோ?— நீ இவ்வளவு சீக்கிரத்தில் உலகப்பற்றை வெறுத்து இங்குவரவேண்டிய காரணமென்ன? என்னிடத்தில் கூறுவதால் குற்றமொன்றுமில்லையாயின் கூறுக.

**விக்**:—சுவாமி, நான் ராஜ்யத்தில் இருக்கக்கூடாதென்பது ராஜகட்டளை.

**குரு**:— (ஆச்சர்யத்துடன்) யார் பர்த்ருஹரியா கட்டளையிட்டான்!– நீ இழைத்த குற்றம் யாது?

**விக் :**— (தயங்கி) இளையராணியை நான் கற்பழிக்க முயற்சித்ததாகக் குற்றம்.

**குரு :**— உண்மையென்ன?

**விக் :**— சுவாமி, அஸ்வபாலனென்னும் குதிரைக்காரன் தன் கடமையை ஒழுங்காக நிறைவேற்ருததால், நான் அவனை அடிக்கநேர்ந்தது. இளைய ராணியார் என்னையழைத்து, அவனையடித்தது தவறென்றும், இனி அவனுக்கு மரியாதைகாட்டி நடக்கவேண்டுமென்றும் உத்திரவிட்டார்கள். நான் அது முடியாதென்று மறுக்க, இவ்வாறு பழிசுமத்தினர்கள். வேறொன்றுமறியேன்.

**குரு :**— ஆஹா! மகா பண்டிதனும், கலைக்ஞானியும், கருணைக்கடலுமான பர்த்ருஹரியா இவ்வாறு நிலைதடுமாறினன்?—காமப்பேய் கண்ணை மூடியிருக்கிறது. சரி, விக்ரமா—என்னேடு வா—நாம் நேராகப்போய் நியாயம் கேட்டுப்பார்ப்போம் —

**விக் :**— சுவாமி, மன்னிக்கவேண்டும். ராஜ கட்டளைப்படி நடக்க நான் கடமைப்பட்டவன்—இவ்விடத்திலேயே இருக்க அனுமதியளிக்கவேண்டும்.

**குரு :**— (சற்று யோசித்து) சரி உன்னிஷ்டம்—பரமானந்தா, உஜ்ஜயினிக்குப்புறப்படச் சித்தமாயிரு.

**பர :**— ஆக்ஞை.—

காட்சி முடிவு.

## களம் 3. காட்சி 10.

**இடம் :—** *நளினி வீடு.*

**காலம் :—** *மாலை.*

**பாத் :—** *[அஸ்வபாலன், நளினி]*

(குறிப்பு) *[அஸ்வபாலன் விரைந்து வருகிறான்]*

**அஸ் :—** *அடியே நளினி, நளினி—*

**நளினி :—** *(உள்ளிருந்து வந்து) ஏன் நளினிக்கு என்ன—*

**அஸ் :—** *வரும்போதே மூஞ்சியெக்கடுகடுண்ணு வச்சுக்கிட்டுவந்தா எப்பிடீ சொல்றது? ஒம்மேலே நான் எவ்வளவு பிரியம் வச்சிருக்கேண்ணு ஒனக்குத் தெரியவேயில்லையேடி.*

**நளினி :—** *ஆமாமா, பூனைக்குட்டி விஸ்வாஸம் தெரியாதா?*

**அஸ்:—** *நளினி அப்பிடியா நெனைக்கிறே? பாத்தியா — நீ கேக்கறதையெல்லாம் கொண்டுவந்து குடுக்கிறேன்—என் உசிரையே ஒம்மேலே வச்சிருக்கேன் — அப்பிடியிருந்தும் ஒனக்குக் கொஞ்சங்கூட பிரியமில்லையேடி. ஒருநாளாவது பட்சமாப்பேசமாட்டேங்கிறையே.*

**நளினி :—** *எனக்குப் பிரியமில்லேண்ணு, ஒங்களை வீட்டுக்குள்ளே நுழைய விடுவேனா? பிரியமிருக்கு,*

பிரியமிருக்கிண்ணு, தப்பட்டையெக் கட்டிக்கிட்டு அடிக்கணும்போலிருக்கு; இல்லேண்ணு ஆளெக்கண்ட வுடனே ராஜா, கூஜாண்ணு ஏய்க்கணும். அப்பத் தான் பிரியம் தெரியும் இல்லியா?

**அஸ்:**— எங்கடீ ஒத்தரையுங்காணோம்?

**நளினி :**— எல்லாரும் கோவிலுக்குப் போயிருக் காங்க.

**அஸ்:**— அப்பொ, நீ மாத்திரம் போகலையே?

**நளினி:**— எல்லாம் ஒங்க எழவுக்காகத்தான் இருக்கவேண்டியதாச்சு.

**அஸ் :**— (மகிழ்ச்சியுடன்) நெஜமாவா?—நளினி நான் சொன்னதெல்லாம் தப்புடீ.— அடியே, ஒனக்கு சேதி தெரியுமா?

**நளினி:** — என்ன சேதி?

**அஸ் :**— எளெயராஜா விக்ரமாதித்தரை பெரிய மகாராஜா ஊரைவிட்டுத் தொரத்திட்டாரு.

**நளினி :**—(திடுக்கிட்டு, வியப்புடன்) ஏன்! எதுக் காக?

**அஸ்:**— இனிமே இந்நாட்டுக்குள்ள நொழஞ்சா அவர் தலெ போயிடும்.

**நளினி :**— அடபாவமே, சின்னமகாராஜாவைப் போல நல்ல மனஸுள்ளவங்க நம்ம ராஜியத்திலேயே கெடையாதே—ஆமா, மகாராஜா எதுக்காக இப்படிப் பண்ணுரு?

**நளினி :—** இல்லாப்போனா எங்கூடப்பேசவேண்டாம்.

**அஸ்:—** சரி சரி, கோவிச்சுக்காதே. போறேன்—ஓரே ஓட்டமா வந்துடுவேன்.

**நளினி :—** சீக்கிரம் வாங்க. (உட்செல்கிறாள்)

**அஸ்:—** (தனக்குள்) ஊம், பெரிய பெரிய மகாராணியெல்லாம் எங்கால்லே விழுந்து கெடக்கிறா — இவ என்னை இந்தப்பாடுபடுத்தி வைக்கிறாளே—என்னயிருந்தாலும் நளினி, நளினிதான் — (ஓடுகிறான்.)

காட்சி முடிவு

## களம் 4. காட்சி 1.

**இடம் :—** உஜ்ஜயினி கொலுமண்டபம்.

**காலம் :—** காலை.

**பாத் :—** [பர்ருஹரி, ராஜகுரு, மந்திரி பிரதானியர் முதலியோர்.]

**(குறிப்பு)** [பர்த்ருஹரி சிங்காதனத்தில் வீற்றிருக்க, இருமருங்கிலும் மந்திரி பிரதானியர் அமர்ந்திருக்கின்றனர்.]

**சபையோர்.**

சாதன உஜ்ஜயினியின் வாசா—சுப — (சா)
சகல கலையுணரு மகபதி அதிபதி— (சா)

நீதியான மனுநெறிமுறை தவரு
கோதிலாத உமதிருபதம் கெதியே
நிதிபல நிறைவோய்
அதிபல முறைவோய்
நெடிய புவியை யொருகொ டியில ரசுசெயும் (சா)

[நாட்டியம் நடைபெறுகிறது — காவலன் ஒரு வன் "**பராக், குருதேவர் சபைக்கு விஜயம் செய்கிறார்**" என்று கூவிக்கொண்டே வருகிறான். சபையோர் எழுந்து நிற்கின்றனர். ராஜகுரு பரமானந்தனுடன் வருகிறார். எல்லோரும் வணங்குகின்றனர்.]

**பர்த் :**— (எழுந்து) குருதேவா, வரவேண்டும். (ஓர் ஆசனத்தைக்காட்டி) எழுந்தருளுங்கள்.

**குரு:**—(அமர்ந்து) பர்த்ருஹரி, க்ஷேமந்தானே?

**பர்த் :**— யாவரும் சுகமே.

**குரு :**— உனது ராஜ்யம் செழிப்புற்று விளங்கி வருகிறதா?

**பர்த் :**— தங்களுடைய ஆசீர்வாதத்தால் குறை வொன்றுமில்லை.

**குரு :**— முன்பொருசமயம் உன்னைக்காண வந்திருந்தேன். முடியாதுபோய்விட்டது. விக்ரமனிடம்......(சுற்றுமுற்றும் பார்த்து) எங்கே, விக்ரமனைக் காணோம்?

[சபையோர் ஒருவரையொருவர் பார்க்கின்றனர். பர்த்ருஹரி தலைகுனிந்தவண்ணமிருக்கிறான்.]

**குரு:**— ஏன் மௌனம் சாதிக்கின்றாய்?

**பர்த் :**— (தயங்கியவண்ணம்) குருதேவா, நாவினாலும் சொல்லத்தகாத ஓர் பெரும் குற்றத்தைச் செய்ததற்காக தேசப்ரஷ்டம் செய்யப்பட்டான்.

**குரு :**— ஓஹோ!— நீ சத்யம் தவறாத உத்தமனென்பது எனக்கு நன்கு தெரியுமே.- காரணமின்றி தண்டித்திருக்கமாட்டாய்– ஆனால்...சில சமயங்களில் கண்ணாரக்கண்டதும் பொய்யாய் முடிவதுண்டு — அது போகட்டும். பர்த்ருஹரி, நான் உனக்காக ஓர் அதிசய வஸ்துவைக் கொண்டுவந்திருக்கின்றேன். (ஓர் மாம்பழத்தைக்காட்டி) இதோபார்.

**பர்த் :**— குருமகாராஜ், இது சாதாரண மாம்பழந்தானே—இதில் அதிசயமென்ன?

**குரு :**— பர்த்ருஹரி, இதனை அற்பமாய் நினையாதே. மகா மகிமை பொருந்தியது. ஓர் தபஸியால் எனக்களிக்கப்பட்டது. இதை உண்டால் "**நரை, திரை, பிணி, மூப்பு அண்டாது**"— என்றும் இளமையழியாதிருக்கலாம். தேவாமிர்தத்திற்கு ஒப்பானது. "இது உன்னை சகல துக்கங்களினின்றும் விடுவிக்கும்" நானோ துறவி. நான் இதனையுண்டு என்றும் இளமையோடிருப்பதால் யாருக்கு என்ன உப

யோகம்? உன்போன்ற அரசர்கள் நோய் நொடியின்றி நெடுங்காலம் வாழ்ந்திருந்தால், கோடிக்கணக்கான பிரஜைகளுக்கு நன்மையுண்டு. அதையெண்ணியே இதை உனக்களிக்கிறேன்—

(''மாம்பழத்தை'' பர்த்ருஹரியிடமளிக்கிறார்.)

ஈசனைத்தியானித்து, நல்ல சுபவேளையில் இதனை யருந்துவாய். இருவர் உண்பதுகூடாது. ஒருவரே உண்ணல்வேண்டும்.

**பர்த் :—** (மகிழ்ச்சியுடன்) குருமகராஜ், தங்களுடைய அன்பை என்னென்று புகழ்வேன்! தாங்கள் தெய்வத்தன்மை பொருந்தியவர்கள். பிறருடைய கோப, மோக, மத, மாச்சர்யங்களையெல்லாம் அன்பென்னும் தண்ணீரால் குளிரச்செய்யும் பரந்தஞானி, தங்களுடைய உள்ளம் உலகத்தைப்போல் விசாலமுடையது. தங்களைக் குருவாக அடையப்பெற்றது அடியேன் பாக்யம்.

**குரு:—** ராஜன், இனியுனது சகல கஷ்டங்களினின்றும் விடுபடுவாய்.

[பர்த்ருஹரி வணங்கிநிற்க, குரு ஆசீர்வதிக்கிறார்.]

காட்சி மாறுகிறது.

## களம் 4. காட்சி 2.

**இடம் :—** அந்தப்புரம்.

**காலம் :—** முற்பகல்.

**பாத் :—** [பர்த்ருஹரி, மோகன]

(குறிப்பு) [மோகனை மஞ்சத்தில் அமர்ந்திருக்க பர்த்ருஹரி விரைந்து வருகிறான்]

**பர்த் :—** மோகனா, இதோபார்—உனக்கு ஓர் அருமையான பொருளைக்கொண்டுவந்திருக்கின்றேன்.

**மோக :—** என்ன அது?

**பர்த் :—** மாம்பழம் — (காண்பிக்கிறான்)

**மோக :—** (சிரித்து) இதுதானா அருமையான வஸ்து?

**பர்த் :—** கண்ணே, இதை சாதாரண மாம்பழமென்று நினைத்தாய்?— இதையுண்டால் என்றும் இளமையோடிருக்கலாம். நரை, திரை, பிணி, அண்டாது. குருதேவரால் எனக்களிக்கப்பட்டது-இதை நீ உண்டு என்றும் இளமையோடு காட்சியளிக்கவேண்டும்.

**மோக :—** (வியப்புடன்) இதை உண்மையென்று தாங்கள் நம்புகிறீர்களா?

**பர்த் :—** குருதேவர் பெரிய மகான். உண்மையல்லாததைக்கூறத்துணிவாரா? ஓர் தபஸியால் அவருக்களிக்கப்பட்டதாம்—எனது நன்மையைக்கோரியே இதை எனக்களித்திருக்கின்றார். ஏன் சந்தேகப்படுகிறாய்?—

(மாம்பழத்தை மோகனாவிடம் கொடுக்கிறான்.)

மோக:— (சற்று யோசித்து) முழுதும் சாப்பிட்டுவிடவேண்டுமா?

பர்த்:— ஆம். ஒருவர் தின்ருல்தான் பலனுண்டு.

மோக:— எப்பொழுது சாப்பிடவேண்டும்.

பர்த்:— இன்றிரவு நித்திரைக்குப்போகுமுன் ஈசனைத்தியானித்துவிட்டுச் சாப்பிடவேண்டும் —

காட்சி மாறுகிறது.

## களம் 4. காட்சி 3

இடம் :— நந்தவனம்.

காலம் :— மாலை.

பாத் :— [அஸ்வபாலன், மோகனு]

(குறிப்பு) [அஸ்வபாலன் கையில் மாம்பழத்தை வைத்துப்பார்த்துக்கொண்டு வியப்புடன்நிற்க, மோகனு அருகில் நிற்கிருள்.]

அஸ்:— ஒரு மாம்பழத்துக்கு அவ்வளவு மகிமையா!— சும்மா சொல்றே.

மோக:—உங்கள்மீதாணையாகச்சொல்லுகிறேன்.

அஸ்:— அப்பொ, கொட்டையை எறிஞ்சூட்றதா?– இல்லே, அதையும் திங்கணுமா?

மோக:—அடடா,நான் அதைக்கேட்கவில்லையே.

**அஸ்:**— சரி, அப்பொ கொட்டையையும் திண்ணுட்டாப்போகுது. என்ன பெரமாதம்?

**மோக:**— சிச்சீ, கொட்டையைச்சாப்பிடவேண்டியிராது.

**அஸ்:**— ஒரு சந்தேகம்.

**மோக:**— என்ன?

**அஸ்:**— இந்த மாம்பழத்திலே இவ்வளவு மகிமையிருந்தா- இதை நீ சாப்பிட்றதுதானே—எங்கிட்ட ஏன் குடுக்கிறே?

**மோக:**—காதலா, என் மனதை இன்னும் நீரறியவில்லையா? இந்த உடல், பொருள், ஆவி, மூன்றையும் உமக்கல்லவா அர்ப்பணம் செய்திருக்கிறேன். நான் மாண்டு மடிந்து மண்ணோடு மண்ணாய்ப்போனாலும், என்னுடைய நாயகராகிய நீங்கள் என்றும் இளமையோடு வாழ்ந்திருக்கவேண்டுமென்பதே எனது விருப்பம்— இதோ என் நெஞ்சைப்பிளந்து பாருங்கள். அதனுள் தங்களுருவம் தெரியும்.

**அஸ்:**— அப்பொ சரி, இருக்கட்டும். ஒன்னெப் பாக்கவச்சுக்கிட்டு சாப்பிட எம்மனசு சம்மதிக்காது. அப்பறம் சாப்பிட்றேன்.

**மோக:**— இதைச் சாப்பிடுவதற்கு முன் ஈசனைத் தியானித்துவிட்டுச் சாப்பிடுங்கள்.

காட்சி மாறுகிறது.

## களம் 4. காட்சி 4.

**இடம் :—** நளினி வீடு.

**காலம் :—** மாலே.

**பாத் :—** [அஸ்வபாலன், நளினி]

(குறிப்பு) [அஸ்வபாலன் "நளினி, நளினி" என்று கூவியவண்ணம் ஓடிவருகிருன்.]

**நளினி:—** (வந்து) ஏன்?

**அஸ் :—** இந்த "மாம்பழத்தை"ச் சாப்பிட்றீ.

**நளினி:—** எனக்கு வேண்டாம். (வெறுப்புடன்) நான் மாம்பழமே சாப்பிட்றதில்லே.

**அஸ்:—** நளினி, இந்த மாம்பழத்தோட பெருமையைக்கேட்டா, நீயே கையிலேருந்து புடிங்குக்குவே—தெரியுமா?

**நளினி:—** ஆமா, பாக்கும்போதே தெரியுதே புழிச்சி மாம்பழம்னு—

**அஸ் :—** அடியே, அப்பிடிச்சொல்லாதடி. இதைச் சாப்பிட்டா— நீ இண்ணேக்கி இருக்கிறதைப்போலவே எண்ணேக்கும் இருப்பே. ஒந்தலேமுடி நரைக்கவே செய்யாது. நோய், நொடி ஒண்ணும் பக்கத்லே வராது—தெரியுமா?— ஒரு யோகீஸ்வரர் குடுத்தாருடீ.

**நளினி :—** சர்தான்—எவனே பொய்யைப் புளுகெச்சொல்லி ஒங்களே ஏமாத்திட்டான்போலயிருக்கு. அவனுக்கு என்ன குடுத்திங்க?

**அஸ்:—** போடீ, நானு ஏமார்றவன்? எம்மேலே அவுருக்கு ரொம்பப்பிரியம். சும்மாதான் குடுத்தாரு.

**நளினி :—** (மாம்பழத்தை வாங்கிக்கொண்டு) அப்பொ, நாமரெண்டுபேரும் சாப்பிடுவோம்.

**அஸ் :—** ஊஹூம். ஒருத்தர் சாப்பிட்டாத் தான் பலனுண்டு. நீதான் சாப்பிடனும். எண்ணைக்கும் மோகினிபோல எங்கண்ணுக்கெதிக்கவே நிக்கணும்.

**நளினி:—**அப்பொ, நான் இதைச்சாப்பிட்டு எண்ணைக்கும் சின்னப்பொண்ணுஇப்படியேஇருந்துஎன்ன பிரயோசனம்? நீங்க கெழவன் ஆயிடுவிங்களே —

**அஸ் :—** ஓ! நான் கெழவனுயிடுவேனு?— பரவாயில்லே — எப்படியாவது நீ நல்லாயிருந்தாப் போரும். இந்தமாதிரி இன்னொரு மாம்பழம் கெடைக்குமாண்ணுபாக்கிறேன்.

**நளினி:—** ஆமா, எங்கே அட்டிகை?

**அஸ்:—** பாத்தியா, மாம்பழம் கெடச்ச சந்தோசத்திலே மறந்தேபோயிட்டேன். இதோ அரை நாழீலே வந்துட்றேன்.

(ஓடுகிறுன்.)

**நளினி:—** (தனக்குள்) இவன் சொன்னது உண்மையாயிருக்குமா?— இவ்வளவு மகிமையுள்ள பழம் இவனுக்கு எப்பிடிக்கெடச்சிருக்கும்? யோகீஸ்வரரு

இவனுக்கா இவ்வளவு சக்தியுள்ள பழத்தைக்குடுத்திருப்பாரு?— அடடா—தாசியாயிருந்தும் எம்மேலே எவ்வளவு பிரியம் வச்சிருக்கான் — நான் இதைச்சாப்பிட்டு என்னைக்கும் மோகினிபோலயிருக்கணுமாம். என்ன ஆசை! தன்னைப்பத்திக்கூட கவலைப்படலையே— சீ...இந்தப்பாழாப்போன ஜென்மம் இருந்து யாருக்கு என்ன உபகாரம்? இன்னும் பாவத்தைப்பண்ணிக்கிட்டிருக்கவா?—இதுவரை செய்த பாவமெல்லாம் போராதா?—கிழவியான பிறகாவது பகவானைவேண்டி நல்லகெதியடையாமே, சாகிறவரைக்கும் இப்பிடியே இந்த மானங்கெட்ட தொழிலைச் செய்துகிட்டிருக்கவா!— சேச்சே, இதை நான் சாப்பிடப்படாது.— கோடிக்கணக்கான ஜனங்களுக்கு தகப்பனைப்போல இருக்கிற தருமப்பிரபு மகாராஜா இதைச்சாப்பிட்டாலும் புண்ணியமுண்டு. அவர் காலம் பூராவும் ஜனங்களாவது சௌக்கியமா வாழலாம்—ஆமா—அதுதான் சரி. நானே கொண்டுபோயி மகாராஜாகிட்டக்குடுத்திட்றேன்.

காட்சி மாறுகிறது.

## களம் 4. காட்சி 5.

**இடம்:—** அரசசபை.

**காலம்:—** மாலை.

**பாத்:—** [பர்த்ருஹரி, நளினி, அஸ்வபாலன் சபையோர்.]

(குறிப்பு) [நளினி மாம்பழத்தை அரசனிடம் கொடுக்கிறாள். அரசன் பிரமித்து நிற்கிறான். சபையோர் திடுக்கிட்டவண்ணம் மாம்பழத்தைப் பார்க்கின்றனர் ]

**பர்த் :**— (வியப்புடன்) நளினி, இந்த மாம்பழம் உனக்கெப்படிக்கிடைத்தது?

**நளினி:**— (பயந்து) மகாராஜா, சமுகத்துக்கு முன்னடியே தெரியும்போலயிருக்கே! அஸ்வபாலரு எனக்குக்குடுத்து தின்னச்சொன்னரு. இவ்வளவு சக்தியுள்ள பழத்தை சமுகத்திலே சாப்பிட்டா நல்ல திண்ணு கொண்டுவந்தேன்—

**பர்த்:**— யார்!—குதிரைக்கார அஸ்வபாலனு?—

**நளினி:**— (தலையசைக்கிறாள்)

**பர்த்:**— (காவலனைநோக்கி) அஸ்வபாலனையழைத்துவா.

(காவலன் ஓடுகிறான்.)

**பர்த் :**— நளினி, நீ செல்லலாம்.

(நளினி வணங்கிச்செல்கிறாள்.)

**பர்த் :**— (தனி) இதென்ன நான் காண்பது கனவல்லவே?—என் தலை சுழல்கின்றதே —

[அஸ்வபாலன் வந்து வணங்கி, அரசன் கையிலிருக்கும் மாம்பழத்தைப்பார்த்து திடுக்கிடுகிறான்.]

**பர்த் :—** அடே அஸ்வபாலா, இந்த மாம்பழம் உனக்கெப்படி கிடைத்தது? உண்மையைச்சொன்னால் உயிர்ப்பிச்சையளிப்பேன். இல்லேயேல்...

(வாளை உருவுகிறான்.)

**அஸ் :—** (காலில் வீழ்ந்து) ஐயையோ, கொல்ல வேண்டாம் மகாராஜா. எம்மேலே ஒரு குத்தமுமில்லே. நெஜத்தைச்சொல்லிப்புட்றேன். சின்ன மகாராணிதான் என்னைக்கெடுத்தது. அவங்கதான் குடுத்துத்திங்கச் சொன்னாங்க—சின்ன மகாராஜாவை ஊரைவிட்டுத் தொரத்தினதுகூட அவங்கதான் — சபலாவுக்கும் தெரியும் மகாராஜா—என்னைக்காப்பாத்தணும் மகாராஜா——எம்மேலே குத்தமில்லே மகாராஜா — (அழுகிறான்)

**பர்த் :—** (ஆச்சர்யத்துடன்) யார் மோகனாவா!

**அஸ் :—** ஆமா மகாராஜா.

**பர்த் :—** (வெறிபிடித்தவனைப்போல்) **மோகனா! மோகனா!! மோகனா!!!**

(உருவிய வாளுடன் ஓடுகிறான்.)

காட்சி மாறுகிறது.

## களம் 4. காட்சி 6.

**இடம் :—** அந்தப்புரம்.

**காலம் :—** மாலை.

**பாத் :—** [பர்த்ருஹரி, மோகனா, சபலா, அஸ்வபாலன்]

(குறிப்பு) [பர்த்ருஹரி வெறிகொண்டவனைப் போல் "மோகனா மோகனா" வென்று கூவிக் கொண்டு ஓடிவருகிறான்.]

**மோக :**— (வந்து) என்ன நாதா, ஏனிவ்வளவு பதஷ்டம்?

[அரசன் கையில் மாம்பழத்தைப் பார்த்துத் திடுக்கிட்டு நிற்கிறாள்.]

**பர்த் :**— (கோபவெறியுடன்) தீண்டாதேளன்னை— இந்த மாம்பழத்தை நீதானே அஸ்வபாலனுக்குக் கொடுத்தாய்?—

**மோக:**—(ஒன்றுமறியாதவள்போல்) ஐயையோ, எனக்கொன்றுந்தெரியாதே. இங்குதானே வைத்திருந்தேன்—யாரோ திருடிக்கொண்டு போய்விட்டார்கள் போலிருக்கிறது. யாரது அஸ்வபாலன்?—

**பர்த் :**— (அடங்காச்சினத்துடன்) அடி சண்டாளி, இனியும் உனது வார்த்தையில் மயங்கி மதியை இழந்துவிடுவேனென்று நினைத்தாய்? பெண்ணுருக் கொண்டபேயே! உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாயிருக்கிறதே உனது விபசாரித்தனம் —

**மோக :**— (கைகளைப்பிசைந்துகொண்டு) ஐயோ, நான் ஒருபாவமுமறியேனே—தெய்வமே ...

**பர்த் :**— (இடைமறித்து) சீ—நீலி, நஞ்சினுங் கொடிய உன் நாவினால் தெய்வத்தை ஏன் அழைக்கிறாய்? அந்தோ, நான் மகா சண்டாளன். உனது

மோகவலையிற் சிக்கி மதியைப்பறிகொடுத்தேனே — ஒவ்வொரு ஜீவனிடத்தும் வைக்கவேண்டிய பரந்த அன்பென்னும் நீரை, விஷ விருட்சமாகிய உனக்கு வார்த்து வளரச்செய்தேனே—அற்பமான சிற்றின்ப சுகத்தை விரும்பி, என்றென்றும் நீங்காத அவமானத்தை நிலை நிறுத்திக்கொண்டேனே — காமப்பேய் என் கண்களை மறைத்துவிட்டதே — என்னுருயிர் சோதரன் விக்ரமன் அன்று காலில் வீழ்ந்து ஒரு வார்த்தைக்காக மன்றாடியபொழுது, பாவி கால்களால் அவனை உதைத்துத்தள்ளினேனே—அவன் எந்த நாட்டில் என்னென்ன கஷ்டங்களை அனுபவிக்கின்றானோ?—அவன் மனம் என்னபாடுபடுகிறதோ?— அடி காதகி, உன்னைப்பேயென்றெண்ணாமல் பெண்ணென்றெண்ணியல்லவா மோசம் போனேன்—

**மோக:—** (அலட்சியமாக) போதும் நிறுத்துங்கள். இவ்வளவு தூரம் பேசும்படியாக நான் அப்படி ஒன்றும் உலகத்திலில்லாத காரியத்தைச் செய்துவிடவில்லை. உங்களுக்குள்ள சுதந்திரம் எனக்குமட்டும் இல்லாமல் போய்விட்டதோ? **"நீங்கள் எத்தனை மனைவிமார்களைவேண்டுமாயினும் மணக்கலாம், நினைத்த பெண்களை வைப்பாகவும் வைத்துக்கொள்ளலாம், நாங்கள் மட்டும் ஞானிகள்போல் எங்கள் விருப்பு வெறுப்புக்களை அடக்கிக்கொண்டு அந்தப்புரத்திலேயே அடைபட்டு மிகப்பரிசுத்தமாகயிருக்கவேண்டுமோ?"** நான் பெண்ணாகத்தான் வந்தேன். என்னைப்பேயாக்கியது தாங்கள்தான். ஆசையையடக்க முடியுமா?

"நானென்ன முற்றுந்துறந்த ஞானியா?— இல்லை, தெய்வத்தன்மை படைத்தவளா? எனக்கும் உங்களைப் போல் சாதாரண மனித ஹிருதயந்தானே இருக்கிறது."

[பர்த்ருஹரி சிறிதுநேரம் அசைவற்று நிற்கிறான். கண்களில் நீர் பொழிகிறது. கையிலிருந்த வாள் கீழேநழுவி விழுகிறது.]

**பர்த்** :— ஆம், உண்மையே. மோகனு, உண்மையே. இன்றே உணர்ந்தேன்! இன்றே என் கண்கள் திறக்கப்பட்டன!! இன்றே என் கண்களில் படிந்திருந்த மாசினை விலக்கி, அருட்சுடரொளியைக்காட்டினுய்!!! பயப்படாதே — உன்னையொன்றுஞ் செய்ய மாட்டேன். (கரங்கூப்பித்தொழுது) தாயே, நீதான் என்குரு — நீயே எனக்கு ஞானுேபதேசம் செய்தாய். இதுகாறும் மாயையில் சிக்கி, கேவலம் மண்ணோடு மண்ணுய் அழியும் இந்த ஊத்தைச்சரீரத்தின் இச்சையைப்பெரிதென மதித்து, மோகவிருளில் மூழ்கிக் கிடந்தேன். இதுநாள்வரை இந்த நாற்றவுடலை முகக் கண்ணுல் நோக்கினேன். இன்றுதான் அகக்கண்ணுல் பார்க்கின்றேன்.— "சலமும் மலமும் நிறம்பிய பெட்டி, வாதம், பித்தம், சிலேத்துமம், மூன்றும் குடிகொண்ட சிறிய ஊர், அழுக்கோடு கூடிய புல்லியதோலும் இரத்தமுஞ்சேர்ந்த ஓர் கருவி, தீ நாற்றம் வீசும் பானை, நான்குமுழ நீளத்தில் ஒன்பது துவாரமுள்ள ஓர் மரத்துண்டு, ஆசைக்கயிற்றிலாடும் பம்பரம், ஓயாத நோய்க்கு இருப்பிடம், காற்றில் பறக்குங்காற்ருடி, சுடு

காட்டிவிடப்படும் சிறு விருந்து, காமாக்கினியில் கருகும் சருகு, நீரிற்குமிழி, நீர்மேல் எழுத்து, கனவில் தோன்றிய காட்சி,"— இதுவே உண்மை—(பைத்தியம் பிடித்தவனைப்போல்) ஏ, மட நெஞ்சமே—

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு "—

—என்னும் பொய்யா மொழியினை நீ அறிந்திலையோ?— அழியும் பொருளிடத்து ஏன் அன்பு வைத்தாய்? — "மண் காட்டிப் பொன் காட்டி மாயவிருள் காட்டி, செங்காட்டிலாடுகின்ற தேசிகனைப்போற்றாமல், கண் காட்டும் மங்கையர் தம் கண்வலையிற்சிக்கிமிக, அங் காடி நாய்போலலைந்தனையே நெஞ்சமே."— ஏ பாழும் நெஞ்சே, நீ ஒருத்தியின்மேல் அன்பு வைத்தாய், அவள் மற்றொருவன்பால் அன்பு வைத்தாள், அவன் வேறொருத்தியின்மேல் இச்சை வைத்தான். குற்றம் யாருடையது?—உன்னுடையதே— **"அழியும் பொருளிடத்து நீ வைத்திருந்த அன்பில் நூற்றிலொருபங்கு அழியாப்பொருளிடத்து, அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நிற்கும் பரம்பொருளிடத்து வைத்திருந்தாயாயின், உன்கட்டை கடைத்தேறியிருக்குமே "—**

"ஊற்றைச்சரீரத்தை ஆபாசக்கொட்டிலை ஊன் பொதிந்த பீற்றற்றுருத்தியைச் சோறிடுந் தோற்பையைப் பேசரிய காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல்செய்தே ஏற்றுத்திரிந்து விட்டாய்........" — மட நெஞ்சமே,

—உணர்ந்தனையா?— **உணர்ந்தனையா?—உணர்ந்தனையா?**

ஆம்—உணர்ந்தேன்—உணர்ந்தேன் — உலகப்பற்றை யொழித்தேன் —

“ எண்ணிறைந்த தவப்பயனால் மானிடரில்
உயர்ந்தவனென் றிகத்திற் தோன்றிப்
பண்ணிறைந்த வேதமெல்லாந் தேடுகின்ற பொருளை
நெஞ்சிற் பதித்திடாமல்
கண்ணிருந்துங் குருடனைப்போற் காமாந்த காரமதிற்
கலந்தே கெட்டேன்
விண்ணிறைந்த அருட்சோதி தனைக்கொடுத்தாய்
மயக்கமெலாம் விடுத்தேனின்றே.”—

— இதோ. (மகுடத்தைக் கழற்றியெறிந்து) ராஜ்யம், மனைவி, சகல சம்பத்தையும் துறந்தேன். எம்பிரான் திருவடியொன்றே நாடினேன்.

“ விட்டேனுலகம் விரும்பேன் இருவினை வீணருடன்
கிட்டேன் அவருரை கேட்டுமிரேன் மெய்கெடாதநிலை
தொட்டேன் சுகதுக்கமற்று விட்டேன் தொல்லை
[நான்மறைக்கு
எட்டேனெனும்பரம் என்னிடத்தே வந்திங்கெய்தியதே.”

[செல்கிறான். மோகனா கண்கலங்கி நிற்கிறாள். சபலா வருகிறாள்.]

**மோக** :— சபலா, மாம்பழம் இவர் கைக்கெப்படி வந்தது?

**சபலா** :— அஸ்வபாலர் ஆசைநாயகி நளினிக்குக் கொடுக்க, அவள் மறுபடியும் மகாராஜாவிடமே சேர்ப்பித்து விட்டாள்.

மோக.:— நீ விரைவிற்சென்று அஸ்வபாலனை அழைத்துவா. உனக்கு ஏராளமான பொருள் தரு கிறேன்.

(சபலா செல்கிருள்)

மோக :— (தனக்குள்) என்றைக்காவது ஒருநாள் இவ்வாறு நேருமென்பது நான் எதிர்பார்த்ததே. மகாராஜா என்னையொன்றுஞ் செய்யாவிட்டாலும், இந்தப்பாவி என்மீது பொய்க்காதல் காட்டி மோசம் செய்தானே.— சீ, மானமிழந்து உயிர் வாழ்வதா? அப்படியிருந்து என்ன புதிய இன்பத்தைக் காணப் போகிறேன்?— என்மீது தன் உயிரையே வைத்திருந்த பதிக்கு துரோகம் செய்து நான் இவனை நேசிக்க, இவன் பொருளுக்காக என்னையும், இன்பத்திற்காக மற்ளெருத்தியையுமல்லவா நேசித்து வந்திருக்கிருன்— —நான் ஆசைகொண்ட சரீரத்தை மற்ளெருத்தி அனுப விப்பதா?—

(அஸ்வபாலன் விரைந்து வருகிருன்.)

— வாரும் மகாப்ரபூ, நான் உம்மீதுவைத்த காதலு க்குத்தகுந்த வெகுமதியளித்தீர். என் மனதை......

அஸ் :— (இடைமறித்து) போரும் நிறுத்துடீ சண்டாளி, அநியாயமா என் உசிருக்கே ஓலே வச்சுட் டியே. மகாபத்தினிபோல பேச வந்துட்டியோ? கொண்ட புருஷனுக்கே ரெண்டகம் பண்ணின நீ இன்னும்.........

**மோக :—** அட பாவி, என்னுள்ளத்தைப்பறித்த உன்னை உயிரோடு — —

[இடுப்பிலிருந்த கட்டாரியால் அஸ்வபாலனைக் குத்துகிருள். அஸ்வபாலன் கீழேவிழுகிருன்]

**அஸ்:—** ஐயோ,— நளினி— நளினி—ந...ளி...னி (உயிர்பிரிகிறது.)

**மோக :—** நளினி—ஒழிந்துபோ சண்டாளா — உன்மீது ஆசைகொண்ட இந்த ஹிருதயத்தையும் பிளந்தெறிகிறேன்.

[தன் மார்பில் குத்திக்கொண்டு மடிகிருள். சபலா ஓடிவந்து பிரமித்து நிற்கிருள்.]

காட்சி முடிவு.

## களம் 4. காட்சி 7.

**இடம் :—** காடு.

**காலம் :—** காலை

**பாத் :—** [ராஜகுரு, பர்த்ருஹரி, விக்ரமன், பரமானந்தன், மந்திரி.]

(குறிப்பு) [ராஜகுரு பேசிக்கொண்டேவருகிருர். பர்த்ருஹரி காவியுடையணிந்தவனுய் வருகிருன். விக்ரமன், மூதலியோர் பின்னுல் வருகிருர்கள்.]

**குரு :—** ராஜன், கவலையை ஒழி. நடந்ததுயாவும் நன்மைக்கே—கரை கடந்து பொங்கியெழுந்த சினத்

தீயை நீ எப்பொழுது மோகன விஷயத்தில் அடக்கி விட்டாயோ, அப்பொழுதே ஞானியாவாய். சினத்தை யடக்கியவன் தன்னையே அடக்கியவனாகின்றான். இதன்பொருட்டே "**தன்னைத்தான் காக்கிற் சினங் காக்க**" என்றனர் மேலோர். உனது அறிவும், பொறு மையும் உலகோர்க்குப் பயன்படப்போகிறது.

**பர்த் :—** குருதேவா, உலகப்பற்றையொழிக்க வெண்ணிய என்னால் நாட்டுப் பற்றையொழிக்க முடிய வில்லையே. அரசனில்லாது குடிகள் வருந்துவரே-- நாடு நலம்பெற தம்பி விக்ரமன் ராஜ்யபாரத்தை ஏற் றுக்கொள்ள வேண்டியது அவசியமன்றோ?— தாங்கள் தான் அவனை இசையச்செய்தல்வேண்டும். இல்லை யேல் என்மனம் நிம்மதியடையாது.

**குரு :—**விக்ரமா, பிடிவாதம் செய்யாதே. நீயோ இல்லறவின்பங்களை நுகராதவன், உனது தமையன் சொல்லை மறுக்காதே.

**விக் :—** குருதேவா, மன்னிக்கவேண்டும். பிற விப்பிணிக்கு மருந்துவேண்டி, தங்களைச் சரணடைந்த என்னை, மீண்டும் துச்சமாகிய பாசபந்தங்களில் ஈடு படச்சொல்வது தர்மமா?—அடியேன் வேறெங்கும் செல்லாது தங்கள் திருவடிகளைத் தஞ்சமடைந்ததின் பலன் இதுதானா?

**விக்ரமன்.**

நிலையில்லாப் போக போக்யம்
நிற்குமோ நெடுநாட் பூவில்

தலையில்லாத் தேகம் போலத்
தவித்திடச் சொல்லுகின்றீர்
அலையில்லாக் கடலென்றேதும்
அருந்துறவுப் பேரின்ப-
விலையில்லாப் பொருளைக்காண
விழைகின்றே னருள்வீர் சுவாமி.

குரு :— குழந்தாய், உனது நாட்டுக்கு நீ செய்ய வேண்டிய கடமையைச்செய்துவிட்டுப்பின் என்னிடம் வா. உனது தமையன் சகல போகங்களையும் அனுபவித்துத் துறந்தவன். நீயோ இன்னும் உலகவின்பங்களை அறியாதவன். ஆகவே, நீ துறவு பூணுதல் சரியன்று. **"உனது நாட்டு மக்களுக்கு நீ செய்யும் தொண்டே ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டாகும்."** இல்லறம் நடத்தாது துறவு பூணுதல் அறிவுடைமையாகாது மறுக்காதே, என் சொல்லைக்கேள்.

**விக்** :—(தலை வணங்கி) குருதேவா, தங்கள் சொல்லைமறுக்க அடியேன் சக்தியற்றவன்.

**குரு** :— பர்த்ருஹரி, இனி உனது கவலையொழிந்தது. நாளையே விக்ரமனுடைய முடிசூட்டு வைபவத்தை முடித்துவிடு. மந்திரி, நீர் முன்னால் சென்று சகல ஏற்பாடுகளையும் சித்தம் செய்யும்.—

(மந்திரி வணங்கிச்செல்கிறார்)

— ஆஸ்ரமத்திற்குச் செல்லுங்கள்.—

[பர்த்ருஹரியும், விக்ரமனும் முன்செல்ல, ராஜகுரு பின்னால் செல்கிறார்.]

பரமா:— குருஸ்வாமீ, ஒரு சந்தேகத்தைத்தெளி வித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குரு :—(நின்று) சந்தேகம் ஏற்பட்டால் உடனே அதைக்கேட்கவேண்டுமென்று யான் பலமுறை உன்னிடம் கூறியிருக்கிறேனே. கேள்—

பரமா :— பொய் சொல்வது மகா பாபமென்று தாங்கள் பலமுறை கூறியிருக்கிறீர்களன்றோ?—

குரு :— ஆம்—

பரமா :— எவ்வித சக்தியுமில்லாத ஒரு "மாம் பழத்திற்கு" நரை, திரை, பிணி, மூப்பு, அண்டா தென்னும் சக்தியைக் கற்பனை செய்தது பொய்யாகாதோ?

குரு :— பரமானந்தா, இக்கேள்வியை நீ ஏன் அன்றைத்தினமே கேட்கவில்லை?

பரமா :— கேட்பது தவறாகுமோவென அஞ்சினேன் சுவாமி.

குரு :— சந்தேகத்தைத் தெளிவித்துக்கொள்வது எவ்வாறு தவறாகும்?— நான் சொல்லுகிறேனென்பதற்காக நீ எதையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது. உனது அறிவுக்குப் பொருந்தவில்லையாயின் உடனே கேட்க வேண்டும். சொல்லுகிறேன் கேள்—

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்"

என்பது பொய்யாமொழி—அதாவது, நன்மையைச் செய்யக்கூடியதாயிருக்குமானல் பொய்யே உண்மையாகிவிடுகிறது. தெரிந்ததா.

பரமா :— அப்படியா!—

(இருவரும் செல்கின்றனர்.)

காட்சி முடிவு.

## களம் 4. காட்சி 8.

இடம் :— முடிசூட்டு மண்டபம்.

பாத் :— [ராஜகுரு, விக்ரமன், பர்த்ருஹரி, சபையோர்.]

(குறிப்பு) [விக்ரமன் சிங்காதனத்தின் மீது வீற்றிருக்க, குடிகள், மந்திரி பிரதானியர் முதலியோர் இருபுறமும் நிற்கின்றனர். ராஜகுரு ஓர் ஆசனத்தில் வீற்றிருக்கின்ருர். பர்த்ருஹரி மகுடத்தைக்கையில் வைத்துக்கொண்டு வலதுபுறம் நிற்கிருன்.]

பர்த் :— குடிமக்களே, மந்திரிகளே, சபையோர்களே, தம்பி விக்ரமன் உங்கள் அன்புக்குப் பாத்திரமானவன். இந்நாட்டை திறமையுடன் பரிபாலிக்குந் திறம் பெற்றவன்—யான் சன்யாச ஆஸ்ரமத்தை மேற்கொள்ளப்போகின்றேனுதலின், நீங்கள் யாவரும் உங்கள் புதிய மன்னரை ஆதரித்து, ஒற்றுமைகுன்ருது

வாழுமாறு எம்பெருமானை இறைஞ்சுகின்றேன். எனது துறவுபற்றி யாரும் வருந்தல் வேண்டாம்—

[குருதேவர் ஆசீர்வதிக்க, பர்த்ருஹரி விக்ரமனுக்கு முடிசூட்டுகிறார். சபையோர் "**விக்கிரமாதித்த மன்னர் நீடூழி வாழ்க**" என்று கோஷிக்கின்றனர். மங்கல வாத்யங்கள் முழங்குகின்றன. விக்ரமன் எழுந்து சபையோரை வணங்குகிறான்.]

காட்சி முடிவு.

**"மங்களம்"**

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வானமளந்த தனைத்து மளந்திடு
வண்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
யிசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே.

முற்றிற்று.